

93
03

# பலசரக்கு மூட்டை

[தொகுப்பு நூல்]

T. 21193
G. 69693

"குத்தூசி"

"விடுதலை" வெளியீடு
சிந்தாதிரிப்பேட்டை சென்னை—2.
விலை அணா 8.
1948

## உள்ளே

1. நெல்
2. அரிசி
3. துவரை
4. கேழ்வரகு
5. உளுந்து
6. நவதானியம்

# பெரியார் கருத்து

"விடுதலை" தினசரி பத்திரிகையில் பல நாட்களாக "குத்தூசி" என்ற புனைபெயரில் தினம் சுமார் 1½ கலத்துக்குக் குறையாமல் பல விஷயங்களைப் பற்றி நகைச் சுவைத்தோன்ற பிரசுரிக்கப்பட்டு வருவதைத் திராவிட மக்கள் படித்து மகிழ்ந்து வருவதோடல்லாமல், பல துறைகளில் உணர்ச்சிபெற்று திடுக்கிடும்படியான, ஆத்திரப்படும்படியான, பல அதிசயக் கருத்துக்களையும் மனதில் தானாகவே பதிந்து விடும்படியான கருத்துக்களைப் புதிதாகக்கொண்டும் தெளிவு பெற்று வருவதை நான் மனதார உணர்ந்திருக்கிறேன். நானே பல சந்தர்ப்பங்களில் எவ்வளவு பலமான கருத்துகளில், ஊறிப்போன பழக்கவழக்கங்களில், பிடிவாதமாக புனிதமானது என்று ஏற்பட்ட தீர்மானங்களில், வெகு சாதாரணத் தன்மையில் வெறுப்பும், பரிகாசமும், "இவை மகா கொடுமை, முட்டாள்தனம், இழிவு" என்று கருதும்படியான உணர்ச்சி ஏற்படும்படியாக "குத்தூசி" வாசகங்கள் காணப்படுகின்றன என்று ஆச்சரியப்பட்டதுண்டு, குலுங்கக் குலுங்கச் சிரித்துப் பாராட்டியதுண்டு, என்று சொல்லுகிறேன் என்றால் அவை மற்ற சாதாரண மக்களுக்கு எவ்வளவு உணர்ச்சியை ஊட்டி இருக்கக்கூடும் என்பதைப்பற்றி அதிகம் எழுத வேண்டியதில்லை.

நான் வெளியில் சுற்றுப்பிரயாணம் செல்லும் பல இடங்களில், பல பல பேர்கள் நான்தான் "குத்தூசி" என்கின்ற புனைபெயர் கொண்டவன் என்று கருதி என்னைப் பாராட்டிப் புகழ்ந்ததைக் கண்டும், கேட்டும் நான் உண்மை

யில் வெட்கமும், பொறாமையுங் கொண்ட சந்தர்ப்பங்கள் உண்டு.

"குத்தூசி" காணப்படாத "விடுதலை"யைக் கண்டு மக்கள் ஏமாற்ற மடைந்ததையும் பார்த்து வருகிறேன்.

"குத்தூசி"யைப் பற்றிய என் உண்மையான கருத்தைச் சொல்ல வேண்டுமானால், ஒரு வாக்கியத்தில் முடிக்க வேண்டுமானால், எந்தக் காரணங் கொண்டாவது "குத்தூசி" "விடுதலை"யில் வெளிவருவது நின்று விடுமானால் "விடுதலை"ப் பத்திரிக்கையைப் படிக்கும் மக்களுக்கு, "விடுதலை" அலட்சியப் படுத்தப்பட்டு விடுமே என்று பயப்படுகின்றேன் என்பதைத் தெரிவிப்பதன் மூலமே அதன் பெருமை பற்றிய என் கருத்தை உணர்ந்து கொள்ளலாம்.

ஆகவே, அப்படிப்பட்ட அருங் கருத்தும், அதிசய முறையுங் கொண்ட "குத்தூசி" சேதிகளைத் திரட்டி ஒரு நூல் உருவமாக்கி நம் இளைஞர் கையில் இருக்கும் படி செய்தால் எப்படிப்பட்ட புரட்சிகரமான கருத்துக் களைக் கண்டும், எப்படிப்பட்ட "புனிதமான தன்மைகள்" என்பவை அழிபடுவதைக் கண்டும் மனங் கலங்காமல் வரவேற்பார்கள் என்று கருதி "விடுதலை"யின் முதல் பிரசுரமாக "குத்தூசி" தொகுப்பு வெளிவருகிறது.

இதைத் தமிழ் திராவிட மக்கள் யாவரும் வர வேற்பார்களாக!

சென்னை,
1—5—'48.

ஈ. வெ. ராமசாமி

# முன்னுரை

பல நண்பர்கள் கேட்டுக் கொண்டனர். அதன் பயனே இது. "குத்தூசி"யார் தினசரி எழுத வேண்டியவர். ஒவ்வொரு நாள் சரக்கும் 15 முதல் 20 நிமிஷங்களுக்குள் தயார் செய்யப்பட்டது. அவசரத்தில் குத்தி எடுத்தால் தானியங்கள் கீழே சிதறுவது இயற்கைதானே!

"குத்தூசி" என்பது யார் என்று மட்டும் கேட்காதீர்கள். பல சரக்கு மூட்டைகளில் குத்தி அவ்வப்போது எடுக்கும் தானியங்களை உங்களிடம் தருவதுதான் அவர் வேலை. நல்ல தானியமாயிருந்தால் பயன் படுத்திக் கொள்ளுங்கள். சொத்தையா யிருந்தால் கீழே எறிந்து விடுங்கள்.

"குத்தூசி"யார் குற்றங் குறையுடையவரா யிருக்கலாம்; உணர்த்தினால் திருத்திக் கொள்வார். புனை பெயரில் மறைந்திருக்கும் அவரைத் திராவிடர்கள் நன்றாகப் பயன் படுத்திக் கொண்டால் போதும்.

இனி, உட்பிரிவுகளைப் பற்றி ஒரு வார்த்தை. நெல்லுக்குள் இருப்பது அரிசி! குறிப்பிடத்தக்க விஷயம்! சமுதாய நன்மைக்காக ஏற்பட்ட சாதனமே அரசியல், அரிசியைப் பாதுகாக்கும் உமியைப் போல! பிறகு துவரை. முக்கியமான உணவுத் தானியம்; எல்லாவற்றையும் விட அதிகமான ஊன் பொருள் (Protein) சத்துடையது. அதாவது

இன உணர்ச்சியைப் போன்ற பயன் தருவது. அடுத்தபடி கேழ்வரகு. வைட்டமின் (Vitamin) மிகுதியாக உடையது; மனித சமுதாயத்திற்கு பொருளாதாரத் துறையைப் போன்றது. அதன் பிறகு உளுந்து; பிசுபிசுப் புடையது; அவசியமானால் அளவுடன் உண்ண வேண்டிய தானியம்; அதாவது மனிதனுக்கு மதம் இருப்பது போல! இறுதியாக, அவசரத்தில் சலித்துப்புடைத்து எடுக்க முடியாதவைகள் நவதானியமாக இருக்கின்றன; உடலுக்கு உறுதி பயப்பவை.

கருத்தில் பதித்து, அன்றே செயலில் செய்பவர் ஒரு நூறு பேரை உற்பத்தி செய்தாலும் போதும், இத் தொகுப்பு.

இனி, பெரியாரவர்கள் "குத்தூசி"க்குத் தந்துள்ள சிறப்புரை, தாய் தன் மகனைப் பாராட்டுவதைப் போன்றது!

"குத்தூசி"

# I. நெல்

## 1. பூசுரர் இனமில்லையே!

"அரசியல் நிர்ணயசபைக்கு வேறு சில நிபுணர்களையும் தேர்ந்தெடுக்கவேண்டுமென்று ஆலோசனை கூறும் விதத்தில், காங்கிரஸ் பத்திரிகை யொன்றில் வந்துள்ள கடிதத்தில் பின் வருமாறு கூறப்பட்டிருக்கிறது:-

"சென்னை சட்ட சபை அரசியல் நிர்ணய சபைக்குத் தேர்ந்தெடுக்கப் போகும் 49 பெயர்களில் காங்கிரஸ் அல்லாத கீழ்க் கண்டவர்கள் பெயர்களைப் பற்றியும் கவனிக்க வேண்டும்:—டாக்டர் லட்சுமணசாமி முதலியார்; டாக்டர் சி. ஆர். ரெட்டி; எம். ரெத்தினசாமி; பி. ராமச்சந்திர ரெட்டி; ஸர். ஆர்- கே. ஷண்முகஞ் செட்டி; ஸர். ஏ. இராம சாமி முதலியார். தகுதியைப் பொருத்தமட்டில் இவர்களும் சேர்க்கப்படுவது நல்லது."

இதை எழுதிய பேர்வழி சுத்தக் கர்நாடகம் போலிருக் கிறது! "தகுதி" யாமே, தகுதி! பசங்களைப் பள்ளிக் கூடத் தில் சேர்ப்பதில் "தகுதி" அவசியம் என்றால், பூணூல் பசங்களுக்கு "லக்" அடிக்கும்! அதற்காகச் சொன்ன 'தகுதி' யை இதில் மீபாட்டுக் குழப்புகிறாரே!

300 பேர்களுக்குமேல் இருக்கும் அரசியல் நிர்ணய சபையில் இதுகளை யெல்லாம் விட்டால் தலைக்குத்தலை "நொச்" "நொச்" சென்று எதாவது பேசிக்கொண்டேயிருக் குமே! இதுகள் உலகத்திலே பார்த்ததையும் கேட்டதையும், தினம் 10 புஸ்தகத்திலே படித்ததையும் அங்கே சொல்லித் தொலைக்குமே! 385 பேரில் 380 பேருக்கு ஒரு சனியனும் புரியாதே!

தொலைஞ்சாலும் தொலையட்டும்; ஒண்ணு ரெண்டைப் போட்டு வைக்கலாமென்றால், ஒண்ணுகூடப் பூணூல் போடலையே! அதுமட்டுமா? அரசியல் நிர்ணய சபையில் 385 பேர் உட்கார்ந்திருக்கும் போது, பண்டிட் நேரு எழுந்து பிரசங்கமாரி பொழிந்து விட்டு உட்கார்ந்ததும் அவர் பேசியது சரியோ, தப்போ; எல்லோரும் கை தூக்க வேண்டுமே, ஒரே சமயத்தில்! முன்னேயும் பின்னேயுமாகத் தூக்கினால் தவறு செய்தவர் காந்தியாரின் "ராம் துன்" பஜனைக்கு ஒரு மாதம் போய் ஒரே நேரத்தில் தாளம் போட்டுப் பழக வேண்டும்! இந்த நிபந்தனைக்கு உட்பட்ட ஆசாமிகளாகப் பொறுக்கி யெடுத்தால் நல்லதா? அதைவிட்டு அந்தராத்மாவின் பெருமையைப் பேச வேண்டியவர்கள் கூடிய இடத்தில்; அரசியல் சிக்கல்களைப் பேசித் தொலைக்குங்கள், இதுகள்!

இந்த 5—6 பேர்களைப் போட்டுவிடுவதாகவே வைத்துக் கொள்வோம். 385-ல் பாக்கி எத்தனை? ஒரு தொட்டி உப்புத் தண்ணீரில் 6 சொட்டுத் தேன் விட்டால் தண்ணீர் முழுதும் இனிக்கப்போகிறதா, என்ன?

★

## 2. "சுந்தரீ! சோமபானம் கொண்டுவாடீ!"

"எண்டீ, உன்னைத்தானே! சுந்தரீ! வாடீ! வாடீ! ஒரு டம்ளர் பானம் கொடு! அப்படியே எனக்கு ஒரு முத்தமும் கொடு!"

"சே! நீங்களொரு வெட்கங்கெட்ட மனுஷர்! 20 வயசுப் பெண்ணு கேட்டுண்டிருக்கே என்கிறதுகூடத் தெரியாமே, இப்படி யாரானும் பேத்துவாளோ! என்ன வேணும்? காப்பியா? பால்காரன்வரலையே!"

"காப்பியா! அது எண்டீ இப்போ? அதிலே போதையே இருக்கிறதில்லையே! ஒரு டம்ளர் சோமபானம் கொண்டாடீ!" என்று கேட்டார் வவுத்துநாத சர்மா!

"சோமபானமா? இதோ கொண்டுவர்றேன். அது சரி! என்ன இவ்வளவு ஆனந்தமா யிருக்கேள்? ஹைகோர்ட் ஜட்ஜ் வேலை கிடைக்கப்போறதோ?" என்று கேட்டாள், சர்மாவின் தர்மபத்தினியான திரௌபதாபாய்!

"ஹைகோர்ட் ஜட்ஜா? அது தானே கிடைக்கப் போறது! அதற்கு முன்னாடி எது செய்யணுமோ அதை செஞ்சு முடிச்சேன். அப்பாடி! இந்த ஒரு மாசமா என்ன கஷ்டம்! எவ்வளவு சிரமம்? னோக்கு என்னடீ தெரியும்? எத்தனை தடவை மெட்றாசுக்குப் போறது? எத்தனை தடவை ட்ரங்க்போனில் பேசறது? நம்பளவாளா இருந்தால் எல்லாம் ஒரே பேச்சில் முடிஞ்சு போயிருக்கும். இந்த சூத்திரன்களுக்கு அதிகாரம் கிடைச்கப்போய் என்ன கஷ்டமாயிருக்கு போ!"

"சொல்லித் தொலையுங்களேன்! தொண தொணன்னு 'கோர்ட்டி'லே பேசறமாதிரிப் பேசறயளே!"

"அதுதான் சொல்லப் போறேனடி! இந்தக் கருஞ் சட்டைக்காரன்கள் இருக்கான்களோன்னோ! ராமசாமி நாய்க்கன் கூட்டம்! அவன்கள் கொட்டத்தை அடக்கிப் பிட்டேன்!"

"ஓ ஹோ! அவா பந்தலைக்கூடக் கொளுத்த ஏற்பாடு செஞ்சேளே! அவன்கள் தானே! ரொம்ப சந்தோஷம்! நான்கூட இன்னிக்கு சோமபானம் சாப்பிட்டுப் பார்க்கப் போறேன். எப்படி அடக்கினேள்? பெரிய கூட்டமாச்சே, அவன்கள்! கிராமம் தவறாமல் ஆயிரக்கணக்கில் இருக்கிறான்களே! ரொம்ப செல்வாக்காச்சே அவன்களுக்கு? நீங்கள் தான் செய்தேள் என்று அவன்களுக்குத் தெரியுமோ?"

"போடா பித்துக்கொள்ளி! எனக்காதெரியாது? எதை எப்படிச் செய்யவேண்டுமோ, அப்படிச் செய்வேண்டா! ஸ்ரீ ராமபிரான் சுக்ரீவன் உதவியைக் கொண்டுதானே அவன் சகோதரனான வாலியைக் கொன்றார்? விபீஷணர் உதவியைக்கொண்டுதானே அவன் சகோதரனான ராவணனைக் கொன்றார்? அதே முறையைத்தான் நானும் கையாண்டேன்."

"இந்தக்காலத்தில் அந்தமாதிரிப் பேர்வழிகள் எப்படிக் கிடைக்கிறார்கள், உங்களுக்கு?"

"இந்தக் காலம் வேறே, அந்தக் காலம் வேறேயோ! எல்லாம் ஒண்ணுதாண்டா! ஓமாந்தூர் ரெட்டி யிருக்கிறாரோன்னோ, அவரைப் பிடிச்சு மிரட்டித்தான் உத்தரவு போடச்சொன்னேன்! சும்மா சொல்லப்படாது! பயந்த மனுஷன்! நம்பளவாகிட்டே ஒரு தனிவாஞ்சை. பக்திகூட! நம்ப "மந்தி" பத்திரிகை சூனிவாசன் இருக்காரோன்னோ, அபார வேலைசெய்திருக்கார்! இந்த மந்திரிகள் காதைப் பிடிச்சு நன்னா, அமுக்கித் திருகி ஒரு உழக்கு ரெத்தம் எடுத்துட்டார். அதுகளெல்லாம் அவரைக்கண்டால் நடுங்கிச் சாகிறதுகள்!"

"சரி! அடுத்தபடி என்ன செய்யப்போறேள்? அந்த ஈரோட்டுப் பேர்வழி காந்திமாதிரி ஏதேனும் முரட்டுத்தனமா எதிர்க்க ஆரம்பிச்சுட்டா என்ன செய்யறது?"

"ஆமாண்டா! அவர் ஒரு மாதிரி ஆசாமிதான்! எந்தச் சமயத்தில் என்ன செய்வார் என்பதே தெரியாதுடா! அந்த ஒரு ஆள் மட்டும் இல்லாட்டா! அடாடா! பாக்கி சூத்திரப் பெரிய மனுஷாளையெல்லாம் ஒரு நிமிஷத்திலே ஏமாற்றிப்பிடலாமே! நம்பளவா பத்திரிகையிலே நாலுவார்த்தை புகழ்ந்து எழுதினாலே அவன்களிலே பாதித் தலைவன் களுக்கு உச்சி குளிர்ந்து போகுமே! அப்புறம் செத்த நாய் செருப்பைக் கடிச்சமாதிரி வெறுமனே கிடக்குங்கள்! ஆனால் இந்த மனுஷன்தான் எதிலும் ஏமாறமாட்டான்."

" அப்படீன்னா என்ன செய்யப்போறேள்?"

" அதெல்லாம் நேக்குத் தெரியுண்டீ! அவாளுக்குள்ளேயே நேருக்கு நேர் முட்டிக் கொள்றமாதிரி ஒரு வேலை செய்து வெச்சிருக்கேன். அது பலிச்சுடுத்தோ, அப்புறம். நம்ப ராஜ்யந்தான்."

" அது சரி! இந்த தந்திரத்தைக் கண்டு பிடிச்சிண்டு அவாள் எல்லோரும் ஒண்ணு சேர்ந்துட்டா, அப்புறம் நம்ம கதி?—"

" அதுதானே சேரமாட்டான்கள்! அவன்களுக்கு அந்தப் புத்தி யிருந்தால் இந்த நாட்டிலேயே நம்பளை நுழைய விட்டிருப்பான்களோ? போடீ! பைத்தியக்காரி! அவன்களை ஒண்ணு சேர விடுவோமா நாம்? அதுதானேடீ நம்ப காயத்ரீ! நித்ய ஜெபம்! "பிரித்துவை! பிரித்துவை! பிரித்துவை!" இந்த மூலமந்திரத்தைப் பிராமணன் என்றைக்கு மறக்கிறானோ, அன்றே அவன் வெளியேற வேண்டியதுதான்.......அது சரி! சோமபானம் எங்கேடி? என் சொகுசு சுந்தரி கொண்டுவாடீ, சீக்கிரம்"!

★

## 3 பூம்! பூம்!! பூம்!!! புண்ணக்கு வேணுமா?

" பூம்! பூம்!! பூம்!!! புண்ணாக்கு வேணுமா? பருத்திக்கொட்டை வேணுமா? என்ன வேணும் சொல்லடா! எஜமான் குடுப்பாரு! பூம்! பூம்!! பூம்!!!" என்று காதைத் துளைக்கும் ஓசையுடன் வந்தான் பெருமாள் மாட்டுக்காரன். நான் காலை நியூஸ் பேப்பரை வைத்துக்கொண்டு 'ஐரோப்பாவில் ரஷ்யர் ஆதிக்கம்" என்ற தலையங்கத்தைப் படித்துக்கொண்டிருந்தேன்.

மறுபடியும் பூம்! பூம்!! என்று ஓசையிட்டான். புண்ணாக்கு வேணுமா என்றான். வேண்டாம் என்று

தலையை ஆட்டிற்று மாடு. பருத்திக்கொட்டை வேணுமா, என்றான். வேண்டாம் என்றே தலையை ஆட்டிற்று.

ஏனப்பா இரண்டும் வேண்டாம் என்கிறது, என்று கேட்டேன்.

அந்த இரண்டும் கிடைக்கவே கிடைக்காது என்று அதற்குத் தெரியும். இரண்டையும் பார்த்து 7, 8 வருஷ மாச்சுதுங்க; மறந்துகூடப் போயிருக்குமுங்க, என்றான்

"பின்னே என்ன தான் தின்கிறது? வைக்கோலாவது போடுகிறாயா, அதுவுமில்லையா?" என்று கேட்டேன்

"கொஞ்சங் கொஞ்சம் போடுறது தானுங்க; அது கூட சேமியா விலை விக்கிதுங்களே! எப்படிங்க கட்டும்? பரவாயில்லிங்க; இது மெட்றாசுலே இருந்து பழகிடுச்சுங்க. கடுதாசியே திங்கிமுங்க,!" என்று சொல்லிக் கொண்டு இருக்கும்போதே என் கை தவறி விழுந்த ஒத்தை 'ஷீட்' நியூஸ் பேப்பரைத் தின்று கொண்டிருந்தது!

சரிதான்! காலத்துக்குத் தகுந்தபடி அதுவும் தீனியை மாற்றிக் கொள்கிறது போலிருக்கு. நாமே களி மண்ணையும் கல்லையும், (ரேஷன் அரிசி என்ற பெயரும் உண்டு!) தின்று நன்றாகப் பழகியிருக்கும்போது, மாடு கடுதாசி தின்னா லென்ன என்று நினைத்துக் கொண்டேன்.

பெருமாள் மாட்டுக் காரன் வழக்கம்போல், வீடு வேணுமா? நகை வேணுமா? என்றெல்லாம் ஒவ்வொன்றாகக் கேட்டுக் கொண்டேயிருந்தான். எதுவும் வேண்டா மென்றே தலையை ஆட்டிக் கொண்டிருந்தது. கடைசியாக, "எஜமான் கட்டிக்கிற துணி வேணுமா" என்று கேட்டான். அதுவும் வேண்டாம் என்று தலையை ஆட்டிற்று.

இதென்ன, வழக்கத்திற்கு விரோதமாய் இருக்கிறதே! துணி கூட வேண்டாமாமே! இது ஒருக்கால் முற்றுந் துறந்த

முனிவர் மாடு போலிருக்கு, என்று நினைத்துக் கொண்டேன். துணி ரேஷன் இருந்த காலத்தில் பழக்கியிருக்கிறான் போலிருக்கு என்று சந்தேகித்தேன்.

'என்னப்பா, இது? துணி கூட வேண்டாமாமே இதுக்கு? வேறு என்ன தான் வேணுமாம்?" என்று கேட்டேன்

"இதோ பாருங்க எஜமான்! நல்ல புத்திசாலிங்க, இவன்! ........டேய்! சொல்லுடா, சொல்லு! மனங் கூசாமே சொல்லு! மகராஜர் எஜமான் வாங்கித் தருவாரு! மந்திரி வேலை வேணுமா? பூம்! பூம்!! பூம்!!! " என்று அடித்தானே ஒரு அடி!

என்ன ஆச்சரியம்! 'வேணும்' என்று வெகு ஜோராகத் தலையை ஆட்டிற்று! விழுந்து விழுந்து (மாட்டின் மேலே அல்ல!) சிரித்தேன்! பெருமாள் மாட்டுக்காரர்கள் தம் கைக் கயிற்றை ஆட்டித்தான் மாட்டின் தலையை ஆட்டுமாறு செய்வது வழக்கம். இவன் கயிற்றையே கையில் பிடிக்காமல் இவ்வளவு அருமையாகக் கற்றுக் கொடுத்திருக்கிறானே, என்று ஆச்சரியப்பட்டேன்.

"எனப்பா! இந்த மாட்டை ஒரு வேளை யாராவது மந்திரியார் வீட்டிலிருந்து வாங்கினாயோ?' என்றேன்.

"இல்லிங்க" என்றான்

"மாஜி மந்திரியார் வீடுகூட இல்லையா?" என்று கேட்டேன்

'இல்லை' யென்று கூறினான்.

வேடிக்கையான ஆசாமி, என்று சொல்லிக் கொண்டே நாலணாவைக் கொடுத்து (அந்த மாதச் சம்பளத்தில் கடைசி மிச்சமான தொகை) போகச் சொன்னேன். பெரிய தியாகம் என்று நினைக்க வேண்டாம்! மறுநாள் எனக்கு சம்பள நாள் என்ற தைரியந்தான்!

இதிலிருந்து பெருமாள் மாட்டுக்குக் கூட மந்திரி வேலை என்றால் பரமானந்தம் என்று நினைத்து விடாதீர்கள்! அவ்வளவு நன்றாகப் பழக்கி வைத்திருக்கிறான்! அவ்வளவுதான்

ஓமந்தூரார் மந்திரி சபையைக் கவிழ்ப்பதற்கு செய்யப்பட்ட சதி வேலைகளெல்லாம் விதவையின் கர்ப்பம் போல அதிவிரைவாக கரைந்து வருகின்றனவாம்!

இந்த ஆண்டு முடிவுக்குள்ளேயே புதிய தேர்தல் வந்து விடுமாகையால் அதற்குள்ளாக எந்தப் புது நடிகர்களும் தேவையில்லை யென்று முடிவு செய்து விட்டார்களாம்! இந்தச் செய்தி கேட்ட 40-50 காங்கிரஸ் எம் எல் ஏ. க்களுக்கு மயக்கமே வந்துவிட்டதாகக் கூடப் பேசிக் கொள்கிறார்கள்.

நான் முதன் மந்திரி; நீ இன்ன மந்திரி; அவர் அந்த மந்திரி, என்றெல்லாம் கனவும் கண்டு உதட்டைச் சப்பிக் கொண்டிருந்த சிலரின் நா வறண்டு போய்விட்டதாம்! (கூட பெப்பர்மெண்ட்டை சிபார்சு செய்கிறேன்)

அப்பாடி! என்ன கலாட்டா! எவ்வளவு சூழ்ச்சி! எல்லாம் ஓய்ந்தது! ஒவ்வொருத்தரும் (பெருமாள் மாடு உட்பட) அடுத்த மந்திரிசபைக்குள் நுழைந்து விடலாம் என்று தானே நினைத்திருந்தார்கள்?

மந்திரி வேலை மட்டுமா? கவர்னர் வேலைகூட எவ்வளவு தாராளமாய் அடிபட்டது தெரியுமா? காமராஜர் கவர்னரா? ஆச்சாரியார் கவர்னரா? பிரகாசம் கவர்னரா? இன்னொருத்தர் கவர்னரா? இப்படியெல்லாம் பேச்சு!

யாரும் கவர்னரில்லை. சர் ஆர்ச்பால்ட் நையி அவர்களே தான் கவர்னர்! "வெள்ளையரை வெளியேற்ற வேண்டாமா?" என்றுகேட்காதீர்கள். என்னைக் கேட்டால் அவரை ஒரு

பிராமணராகவே ஏற்றுக் கொள்ளலாம். (அது பற்றிய விபரத்துக்கு சங்கராச்சாரியாருக்கு எழுதுக.) அவர் குங்குமம் வைத்துக் கொள்கிறார்! கோயிலுக்குப் போகிறார்! நல்ல மனுஷர்கூட! "ஐயா சாஸ்திரிகளே! நமஸ்தே!" என்று சொல்லிப் பாருங்கள். நகைப்பார்!

அடுத்த தேர்தல் வரையில் இதே மந்திரி சபைதான்! இதே கவர்னர்தான்! இது டில்லிச் செய்தியுமல்ல; பெருமாள் மாடு சொன்னதுமல்ல. என் யூகந்தான்.

இதில் இன்னொரு விஷயம்! அடுத்த தேர்தலில் வயது வந்தவர்களுக் கெல்லாம் 'வோட்' உண்டாமே! அப்படியானால், எந்தக்கட்சியில்தானாகட்டும், எத்தனை பிராமணர்கள் சட்ட சபைக்குள் வரமுடியும்? யாராவது சொல்ல முடியுமா?

ஆபீஸ் கம்பாசிட்டர் சொல்கிறார், 0 பிராமணர்தான் வரமுடியும், என்று. நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? இரகசியமாக எழுதி வைத்துக் கொள்ளுங்கள். அடுத்த வருஷம் பார்க்கலாம்

★

## 4. மரத்தில் மறைந்தது யானை!

"மரத்தை மறைத்தது யானை; மரத்தில் மறைந்தது யானை; ஜீவாத்மாவுக்குள் பரமாத்மா இருக்கும்; பரமாத்மாவுடன் ஜீவாத்மா ஐக்கியமாகிவிடும் ஏ! மனக்குரங்கே, நீ கிளைக்குக் கிளை தாவாதே! 'நான்' என்ற அகந்தைகொண்டு திரியாதே! என்னால்தானே இது நடக்கிறது? நானில்லாவிட்டால் இவர்கள் கதி என்னவாகும்? என் பெயரைச் சொல்லித்தானே இவர்கள் பிழைக்க முடியும்? என் திறமை என்ன? என் தகுதி என்ன? நட்டதெல்லாம் செடியாகிவிடுமா? என்னை ஒழிக்க எந்த மனிதனாலாவது முடியுமா? என் சிறு

விரல் ஆடினால் நூறு உடல்கள் ஆடுமே!" என்றெல்லாம் அகம்பாவப்படாதே! நீ போனால் உன்னைப் போல பலர் வருவார்கள்! உன்னை மிஞ்சக் கூடியவர்கள் கூட வரலாம் உலகம் உன்னை எதிர்பார்த்துத்தான் இருக்கிறது என்று. மமதை கொள்ளாதே! ஏ! மனமே! உச்சி வாழ்வு நிச்சய மல்ல; உருண்டு வீழ்ந்தே தீர வேண்டும்! உஷார்!"

"சுத்தூசி! இதென்ன மனோதத்துவ விசாரணையில் இறங்கிவிட்டாய்? யாரை மனதில் வைத்துக் கொண்டு இப்படியெல்லாம் உளறிக் கொட்டுகிறாய்? மரம் என்கிறாய்! யானை என்கிறாய்! ஜீவாத்மா என்கிறாய்! மனச்குரங்கு என்கிறாய்! கீழ்ப்பாக்கம் ஆஸ்பத்திரியில் காலி இடம் பார்க்கிறாயா?" என்று வாசகர்கள் கேட்கலாம்

நான் யாரையும் கூறவில்லை. என்னையேதான் கூறிக் கொள்கிறேன். நான் குறையற்றவனாக இருந்த பிறகல்லவா பிறர் ஓட்டைகளை அடைக்க வேண்டும்? என்ன அநித்ய மான உலகம் இது! 'நேற்றிருந்தார் இன்று வெந்து நீறானார்! நீர் மேல் குமிழி இந்த சரீரம்! மன்னர் வேடத்துடன் டில்லிக்குப் போன புதுக்கோட்டை அரசர், திரும்பி வரும்போது எப்படி வந்தார் தெரியாதா?

"ஏ! பார்ப்பனீயமே! உன் பேச்சைக் கேட்டேனே! கெட்டொழிந்தேனே! நன்றி கெட்ட நடத்தை என்ற எச்சுக் கிடமானேனே! நேற்று போலீஸ் இலாகா என் சுட்டு விரல் நுனியில்! இன்று நான் சான்ஸ்டேபிள் மிரட்டும் நிலையில்! நேற்று கருஞ்சட்டையைத் தடை செய்தேன்! நாளைக்கு அதையே போட்டாலும் போடுவேன்! இந்த மாகாணத்தை என்ன ஆட்டம் ஆட்டினேன்? நான் கெட்டவனல்ல; ஆனால் தீயார் பேச்சைக் கேட்டேன்! கெட்டேன்! ஆரியக் கோடரி என்னை காம்பாக வெட்டி விட்டு நுழைத்துக் கொண்டது. நானும் இணங்கினேன்! ஓமந்தூர் மரத்தை வெட்டினார்கள். கை முறிந்தது! கோடரி முனை மழுங்கியது! இன்று காம்பும் ஒடிந்து வீழ்ந்தது! ஆரியம் புன்னகை

செய்கிறது. அதற்கு நஷ்டமென்ன? குரங்குகளும் அசுரர்களும்தான் செத்து மடிந்தார்களே தவிர, ஆரிய ரிஷிகளின் தாடி மயிர் ஒன்றேனும் கீழே விழுந்ததாக கதை உண்டா?

கல் நெஞ்சு படைத்தவனே! ஆரியமே; ஏன்! மவுண்ட்ரோடு மூன்றடுக்கு மாடி மீது நின்று கொண்டு என்னை நோக்கி ஏளனச் சிரிப்புச் சிரிக்கிறாய்? உன்னால் கால்வாரிவிடப்பட்டவன் நான், என்று கருதித்தானே! பிரித்தாள்வதில் பெரும் வெற்றி பெற்றாய் என்ற எண்ணந்தானே! சிரி! சிரி! சிரி! அழுகை வரும் வரையில் சிரி!"

உள் நாட்டு மந்திரி டாக்டர் சுப்பராயன் அவர்கள் தமது பதவியை விட்டு விலகிவிட்டார் என்றும், முதன் மந்திரியார் அதை ஏற்றுக் கொண்டு விட்டாரென்றும் தெரிகிறது.

நாடகமே இவ்வுலகம்! நடிகர்களே நாம் எல்லோரும்!

★

## 5. கை முறியாத பல்டி!

'அல்வாவினால் அடித்தால்கூட பயப்பட மாட்டேன்' என்றானாம் ஒரு வீரன்! மெத்தைமீது தலையணைகளை வரிசையாக அடுக்கி அதன்மீது பல்டி போடும் குழந்தைகளைப் பார்த்திருப்பீர்கள்! அவ்வளவு ஜாக்கிரதை அந்தக் குழந்தைக்கு!

'பல்டி' அடிப்பது இருக்கிறதே, அது சாதாரணமாய் எல்லோருக்குமே வராது. சிறு வயதிலிருந்தே பழக வேண்டும். திடீரென்று ஒரு நாளைக்கு 38 ஆவது வயதில் கையை ஊன்றி பல்டியடிக்க ஆரம்பித்தால் கை ஒடியும்; அல்லது கழுத்து முறியும்!

முதலில் மணலில் பல்டி அடித்துப் பழக வேண்டும். அப்புறந்தான் நினைத்த இடத்தில் அநாயாசமாக பல்டி

யடிக்க வரும். தலையை ஊன்றாத பல்டி, தலையை ஊன்றிய பல்டி என்று 'பல்டி'யில் இரண்டு விதம் உண்டு. எந்த பல்டியை அடித்தாலும் 'மடார்' என்று உடம்பைப் போடக் கூடாது, முதுகில் அடிபட்டு விடும்.

"அது சரியய்யா! இதெல்லாம் பசங்களுக்கல்லவா வேணும்? அரசியல் சிக்கல்கள் எத்தனையோ இருக்கும் போது 'பல்டி' அடிப்பதைப் பற்றி பிரமாதமாக பிரசங்கம் செய்ய ஆரம்பித்திருக்கிறீரே! இது யாருக்குத் தேவை?" என்று உங்களிற் சிலர் ஆத்திரப்படலாம்.

நான் மேலே சொன்னது பையன்களுக்குமட்டுமல்ல. பெண்களுக்குக்கூடத்தான். அவர்களை யார் பல்டி போட வேண்டாம் என்று தடுத்தார்கள்? தாங்களாகவே வெட்கப் பட்டுக்கொண்டு தாயமும் பல்லாங்குழியுமே விளையாடிக் கொண்டிருந்தால் அதற்கு நானென்ன செய்ய முடியும்?

நான் சொன்ன பல்டி பெண்களுக்கும் பொதுவானது போலவே, அரசியல்வாதிகளுக்குக்கூடபொருத்தமாயிருக்கும்.

எந்த அரசியல்வாதியாவது அரசியல் பல்டி அடித்துப் பழக வேண்டும் என்று கருதினால், அவர்கள் முதன் முதல் ஆபத்தில்லாத ஒரு கட்சியில்தான் பழக வேண்டும். இன்றுள்ள நிலைமையில் என்னைக் கேட்டால் அந்த மாதிரி யோக்கியதையும் பெருமையும் தமிழ் நாட்டுக் கம்யூனிஸ்ட் கட்சிக்குத் தவிர வேறு எந்தக் கட்சிக் குமே கிடையாது.

மற்றக் கட்சிகள் என்மீது கோபப்பட்டாலுஞ்சரி, பரவா யில்லை. "இயற்கையோடு இயைந்த வாழ்வு" என்டார்களே, அது அந்தக் கட்சியில்தான் இருக்கிறது! காற்று எந்தப் பக்கம் அடிக்கிறதோ அந்தப்பக்கந்தானே மரம், செடி, சொடிகள் சாய்கின்றன? காற்றை எதிர்த்து சாய்வதைப் பார்த்திருக்கிறீர்களா? இதுதான் 'இயற்கையோடு இயைந்த வாழ்வு' என்பது. இதைப் போலத்தான் இந்தக் கட்சியும்!

கடந்த உலகப் போரில் காங்கிரஸை எதிர்த்து போருக்கு உதவி செய்தது! ஆகஸ்ட் கலவரத்தில் காங்கிரஸைக் கண்டித்தது. பிறகுகாங்கிரஸ்காரர் தேர்தலில்வெற்றிபெற்றார்கள். மந்திரிகளாகவும் வந்தார்கள். கம்யூனிஸ்டுகளை துரோகிகள் என்றார்கள். "மாஸ்கோ கூலிகள்" என்றார்கள். உள்ளே தள்ளி கம்பி எண்ணச் சொன்னார்கள். கம்யூனிஸ்ட் நிலையங்களைப் பூட்டி முத்திரை போட்டார்கள்.

அதன் பிறகு வெள்ளையனைச் சரிப்படுத்திக்கொண்டு அதிகாரத்தைப் பெற்றார்கள். வெள்ளையர் ஆட்சி வெளியேறிற்று. ஆகஸ்ட் 15-ந் தேதியும் வந்தது. சிறைக் கதவுகள் திறந்தன. கம்யூனிஸ்ட் தோழர்கள் வெளியேவந்தார்கள். உடனே தலை கீழாக நின்றார்கள்! (பல்டியடிப்பதற்கு இதுதான் முதற்படி!) இரு கொடி ஏந்தினார்கள். 'சுதந்திரத் திருநாள்' என்றார்கள். கும்மாளம் போட்டார்கள். கொக்கரித்தார்கள். அந்த நாளில் கலக்காமல் ஒதுங்கி நின்றவர்களை கள்ளுக்கடை பாஷையில் திட்டினார்கள்.

"அதெல்லாம் சரி! அதற்கென்ன இப்போது என்று தானே கேட்கிறீர்கள்?

"நாம் சுதந்திரமடையவில்லை என்பதை இந்த சுதந்திர தினத்தில் (ஜனவரி 26) நாம் உணரவேண்டும். உண்மையான சுதந்திரத்திற்காகப் போராடிய மக்களுக்குத் தலைமை தாங்கி பரிபூரண சுதந்திரத்தை நிலை நாட்டுவதற்குப் பதிலாக, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துடன் சமரஸம் செய்து கொண்டு பேரளவு சுதந்திரத்தை நிலை நாட்டியுள்ளனர். ஆகஸ்ட் 15-ந் தேதி தம்பட்டம் அடிக்கப்பட்ட "சுதந்திரம்" எப்பேர்ப்பட்ட சுதந்திர மென்பது இன்று வெட்ட வெளிச்சமாகிவிட்டது. முதலாளிக் கூட்டமும், சமஸ்தான ராஜாக்களும் ஜமீன்தாரிகளும், தேச விரோதிகளான வகுப்புவாதிகளுங்

தான் மக்களை சுரண்டிக் கொழுத்து இன்று சுதந்திர மடைந்து நிற்கின்றனர்.''

யார் இப்படிச் சொன்னது என்றுதானே கேட்கிறீர்கள்?

''ஜனசக்தி'' அச்சுக்கூடத்தில் அச்சியற்றப்பெற்று ஜனவரி 26-ந் தேதியன்று வழங்கப்பட்ட ஒரு கம்யூனிஸ்ட் துண்டு வெளியீட்டில் உள்ளதுதான், இது!

பல்டி அடிப்பதில் பழக்கமில்லாதவர்கள் முதலில் மணல்மீது அடித்துப் பழகுங்கள்! அரசியல் பல்டி அடித்துப் பழகவேண்டும் என்பவர்கள் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதலாம்: - கம்யூனிஸ்ட் ஆபீஸ், 6, டேவிட்ஸன் தெரு, ஜி. டி., சென்னை.

காசு பணமில்லை. இலவசமாகக் கற்றுக் கொடுக்கப்படும்! கையை ஊன்றித்தானே கரணம் போடவேண்டும்,'' என்பார்களே! அதுகூடத் தேவையில்லை. கையை ஊன்றக்கூட வேண்டாம். சேர்க்கை [illegible]! தானாக வந்து விடும். அதன் பிறகு ஓடுகிற பு[illegible]ளவிலும், பறக்கிற ஏரோப்ளேனிலும்கூட பல்டி அடிக்கலாம்!

''பல்டிப் பயிற்சியே அரசியல் உடலுக்கு உறுதி.'' இதுதான் கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் திட்டம்!

# II. அரிசி

## 1. வீட்டுக்கு வீடு தென்னாப்பிரிக்கா

"தென் ஆப்ரிக்கருக்கும் நாய்களுக்கும் உள்ளே அநுமதியில்லை", என்ற போர்டை கராச்சி நகர சபையார் சில இடங்களில் தொங்கவிட்டிருக்கிறார்களாம். தென் ஆப்ரிக்கர் அங்குள்ள இந்தியரைக் கொடுமையாக நடத்துகிறார்கள் என்பதற்காகப் பதிலுக்குப் பதில் புத்தி கற்பிக்கும் முறையில் இக்காரியம் செய்யப்படுகிறது என்பது எனக்கும் தெரியும், உங்களுக்கும் தெரியும்.

"ஆதித்திராவிடர்களும் குஷ்டரோகிகளும், ஐரோப்பியர்களும் உள்ளே நுழையக் கூடாது," என்ற போர்டுகள் தமிழ் நாட்டில் பல கோவில்களில் தொங்கவிடப் பட்டிருக்கின்றன.

"அப்படியானால் ஆதித் திராவிடரும் தென் ஆப்ரிக்கா வெள்ளையரைப் போல ஏதேனும் போக்கிரித்தனமாக நடந்து கொண்டார்களா?" என்று கேட்கிறான், என் தம்பி.

ஆமாண்டா! அப்பா! ஆமாம்! ஆதித் திராவிடர்கள் நிலம உழுது, விதை விதைத்து, நெல் அறுத்துக்கொடுத்துத் தொலைக்கிறார்கள்! குடிப்பதற்குத் தங்களுக்குத் தண்ணீரில்லாவிட்டாலும், மற்றவர்களுக்குக் குளம் வெட்டிக் கொடுக்கிறார்கள். வீட்டையும் வயலையும் காவல் காத்துத் தொல்லை கொடுக்கிறார்கள்!

கோவிலுக்குள்ளே 63 பேர் கூட்டத்தில் 'டிரில் கிளாஸில்' நிற்பது மாதிரி, நந்தன் நிற்கிறான்! ஆனால் வெளியேயோ, நந்தனைத் தடுப்பதற்கு ஒரு போர்டு தொங்குகிறது!

"குஷ்டரோகியும் ஆதித் திராவிடனும்" பிணைக்கப்பட்ட ஒரு போர்டு!

"அதுதான் ஆப்ரிக்காவில் பழிக்குப் பழி வாங்குகிறான், வெள்ளைக்காரன்! நல்லா வேணும்! நமம சந்தனைக் குஷ்டரோகின்னு சொன்னா, வெள்ளையன் அங்கே நமக்கு முத்தம் கொடுப்பானோ?' என்று கேட்கிறான், தம்பிப் பயல். ஒரு சாண் பயலுக்கு என்ன துடுக்குத் தனம், பாருங்கள்!

'டேய்! தம்பி! பிராமணாளுக்குமட்டும் வீடுவாடகைக்கு விடப்படும்" "ப்ராமணாள் காப்பி கிளப்" . "பிராமணர் இங்கே, இதரர் அங்கே" என்ற போர்டுகளைப் பார்த்திருக் கிறாயா, எங்கே யாவது?" என்று கேட்டேன்! இளித் தான்.

12 வயதுப் பார்ப்பனப் பையன், "டேய், முனிசாமி!" என்று கூப்பிடும்போது, 50-வயது முனிசாமி, "ஏன் சாமி?" என்கிறான்.

"ஏனப்பா! உட்கார்ந்து தொலையேன்; வழியிலே ஏன் நிற்கிறே," என்கிறார், ட்ராம்-பஸ்-கண்டெக்டர், ஒரு திராவிடத் தோழரைப் பார்த்து! அவர் 'சூட்' போட் டிருந்தாலுஞ் சரி, 8 மோதிரங்களைத் தூக்கிக் காட்டி னாலுஞ் சரி!

ஆனால் ஒரு பார்ப்பனன் உச்சிக் குடுமி, கிழிந்த வேட்டி சகிதமாக, 'டிபன் காரியரைத்' தூக்கிக்கொண்டு புகையிலை யடக்கிக் கொண்டிருந்தாலும், நமது கண்டக்டர் தோழர் என்ன சொல்கிறார்? "சாமி, ஏன் நிக்கிறீங்க! உக்காருங்க சாமி!" என்கிறார்.

பதில் என்ன சொல்கிறான், அப் பார்ப்பன மடை யன், (சமையற்காரன்)? 'எய்! போப்பா! நீ உன் வேலை யைப் பாரு!" என்கிறான்.

கண்டக்டர் இஞ்சி தின்ன—மாதிரிக் காட்சி யளிக்கிறார்!

ஆப்ரிக்காவைப் பற்றிப் பேசுகிறார்களே, மான வெட்கமில்லாமல்? இங்கே வீட்டுக்கு வீடு தென் ஆப்ரிக்கா! தெருவுக்குத் தெரு ஸ்மட்ஸ் துரைகள்! ஆனால் கேட்க நாதியில்லை!

★

## 2. ஆரியர் காலடியில் க்ஷத்திரியர்!

சர்க்கார் உத்யோகத்தில் கிருஸ்துவர்களுக்கென்று ஒதுக்கப்பட்டிருந்த பதவிகளில் ஒன்றைக் குறைத்துவிட்டதற்காக ஈரோடு ஐக்கிய கிருஸ்துவர் சங்கத்தில் ஒரு கண்டனத் தீர்மானம் நிறைவேற்றி யிருக்கிறார்களாம்.

இதைப்படித்த அப்புசாமி அய்யர் மகன் பின்வருமாறு கூறினான்.

"கிருஸ்துவாளும் எங்களைப் போலத்தானே அதிகமாய் படிச்சிருக்கா? அவாளுக்கு 14-க்கு 1-போறாதோ? எங்கள்வாளுக்கு மட்டும் ரொம்ப கொடுத்தூட்டாளோ? 14-க்கு 2-தானே? நாங்கள் 15 லட்சம் பேர்தான் இருக்கோம். கிருஸ்தவர்கள் 20 லட்சம் பேர் இருக்காங்கள். ஆனாலும் எங்களுக்கு கொடுத்ததைக் குறைக்க முடியுமோ, இந்த சர்க்காராலே? குறைச்சுத் தான் பார்க்கட்டுமே, இந்த ரெட்டியார்? காந்திக்கு ஒரு தந்தி! நேருவுக்கு ஒரு தந்தி, கொடுத்தா நடுங்கிப் போயிட மாட்டாரா, ஆசாமி?

ஏசுநாதர்தான் ஒரு கன்னத்திலே அடிச்சா, இன்னொரு கன்னத்தையும் காட்டணும்னு சொல்லிருக்காரே? ஒரு பதவியைப் பிடுங்கீட்டா, இன்னொண்ணையு மல்லவா தூக்கி எறிஞ்சுட்டுப் போகணும்?

அது கிடக்கட்டும்; இவனையெல்லாம் யார் கிருஸ்தவனாகச் சொன்னது? கீழ் ஜாதிக்காரனாகவே இருந்தாலும்

ஏதோ கொஞ்சம் உத்தியோகம் கிடைச்சாலும் கிடைக்குமே! எங்களவா கொடுமை தாங்கலேண்ணு சொல்லிவிட்டு கிருஸ்துவரானாங்களாமே, ஏன்? நல்லாப்படிச்சு முன்னுக்கு வரலாமுண்ணுதானே? சரி! இப்போ வேலையில்லாமே திண்டாடட்டும். நன்னா வேணும், இவாளுக்கு!"

இந்த மாதிரிச் சொன்னதைக் கேட்டுச் சகிக்காத நான் கேட்டேன்:—

"ஏனப்பா? நீங்கள் மட்டும் சர்க்கார் உத்தியோகமென்றால் வாயைப்பிளக்கிறீர்களே! மற்றவர்களுக்கும் அப்படித்தானே இருக்கும்? உங்களில் ஒருவன் போய் ஒரு ஆபீசில் சாதாரண குமாஸ்தாவாக உட்கார்ந்து கொண்டால், அப்படியே பாதாள கரண்டிபோட்டு இழுக்கிற மாதிரி உன் இனத்தையே தன் கிட்டே இழுத்து விடுகிறானே! அவர் கிருஸ்துவராயிட்டது தப்பு என்கிறாயே! நீ மட்டும் உன் ஜாதித் தொழிலை விட்டுட்டு செருப்புக் கடை, சோற்றுக் கடை, துணிக்கடை, மளிகைக்கடை வைக்கலாமோ?"

இதற்குச் சொல்கிறான் அந்தப் பையன், கேளுங்கள்:-

"அது எங்களிஷ்டம். நாங்கள் கோயிலிலும் இருப்போம், குளத்தங்கரையிலுமிருப்போம். காங்கிரசிலுமிருப்போம். கம்யூனிஸ்ட் கட்சியிலுமிருப்போம். காப்பிக்கடையிலுமிருப்போம், கச்சேரியிலுமிருப்போம். நாங்கள் எங்கேயிருந்தாலென்ன? நாங்கள் எந்தத் தொழிலைச் செய்தாலென்ன? பிராமணன் பிராமணன் தானே! சூத்திரன் சூத்திரன் தானே!" (பளார் என்று கன்னத்தில் அறை விழுந்தது.)

"ஓய்! ஏன் காணும் அடிக்கிறீர்? நீர் நன்னாயிருப்பீரா? கடவுள்தான் உமக்கு கூலி கொடுக்கணும். மறந்துட்டு வாயிலே வந்துடுத்து; அதற்காக அடிப்பீர் போலிருக்கே!

உமக்கு இவ்வளவு ரோஷமிருந்தா உம்ம மனுஷாளுக்கு புத்திசொல்றதுதானே? டில்லியிலே எங்கள் ஆச்சாரி

யார் காலிலே விழுந்து அவர் செருப்பை கண்ணிலே ஒத்திண்டபடியே படுத்திருக்கிறாரே, உங்களவா, அதுக்கு என்ன சொல்றீர்?"

இதைக்கேட்ட எனக்கு ஆத்திரம் தாங்கவில்லை. இந்தப் பையன் எதையோ சொல்லிப் புளுகிவிட்டு ஆரம்பித்த பேச்சை விட்டுவிடப் பார்க்கிறான் என்று நினைத்தேன்.

"ஏனப்பா புளுகுகிறே! இந்தக் காலத்திலா? காலிலே விழுகிற மனுஷனா? எங்களவனா? இருக்கவே இருக்காது", என்று சொன்னேன்.

"இருக்காதா? ஹூம்! அது கூட சாதாரணப் பேர்வழி அல்ல. "க்ஷத்திரியர்" என்று சொல்றியளே, அவாளிலே ஒருத்தர்தான். யாரோ தூத்துக்குடி துரைசாமி நாடாராம்! தெரிஞ்சுதா? நீங்களெல்லாம் அசல் சூத்திரர்தான்! அதில் ஆட்சேபனையே இல்லை," என்று கூறிவிட்டு ஏதோ ஒரு பேப்பரை எறிந்துவிட்டு, பிடித்தான் ஓரே ஓட்டம்!

அவனைப் பிடிப்பதை விட்டு என் காலடியில் கிடந்த பேப்பரை எடுத்து விரித்தேன்! என்ன ஆச்சரியம்! அவன் சொன்னது அப்படியே சரி! "ஹிந்துஸ்தான்—ராஜாஜீ மலர்" (7—12—47) என்று போட்டிருந்தது, அந்தப் பேப்பரில்! ராமன் காலில் அனுமான் விழுகிறமாதிரியே இருந்தது! இராமாயணத்தை ஆரியர் போற்றும் இரகசியமும் நன்றாக விளங்கியது!

★

## 3. பூணூல் வேணுமப்பா!

ஆரியத் தோழர்கள் ஒவ்வொருவராகப் பூணூலை அறுத்து அனுப்பிக் கொண்டிருக்கும்போது, இதென்ன 'பூணூல் வேணுமப்பா' என்று கூறுகிறாரே, குத்தூசி

என்று சிலர் கேட்கலாம். அவசரப்படாதீர்கள்! 'விடுதலை' ஆசிரியர் மேஜை 'ட்ராயரில்' அரை டஜன் பூணூல் வைத்திருக்கின்றார் என்பதை நானே போன மாதம் பார்த்திருக்கிறேன். ஆகையால் பூணூல் போட்டுக்க வேணும் என்று யாருக்கும் நான் கூறவில்லை. ஆசிரியரைக் கேட்டேன், எதற்கு இந்த அழுக்குப் பூணூல்களைச் சேகரித்து வைத்திருக்கிறீர்கள் என்று.

"என்றைக்காவது ஒரு நாளைக்கு மனுதர்ம சாஸ்திரத்தை கடற்கரைக் கூட்டத்தில் கொளுத்த நேரிடும்; அப்போது ஆரியத் தோழன் ஒருவனைக் கொண்டே, இந்த அழுக்குப் பூணூல்களையும் அந்தத் தீயில் போடச்சொல்லப் போகிறேன். அந்தச் சமயத்தில் 'இமிடேஷன்' ஆரியர்களும் தங்கள் பூணூல்களை அறுத்துப் போடுவார்கள்! அருமையான காட்சியாயிருக்கும்! அதற்காகத்தான் வைத்திருக்கிறேன்", என்றார்.

இந்த நிலையில் நான் "பூணூல் வேணுமப்பா" என்று ஏன் கூறுகிறேன் தெரியுமா?

எந்தக் காரியத்திற்கும் பூணூல் இருந்தால்தான் முடிகிறது; அதாவது பார்ப்பனனாய்ப் பிறந்தால்தான் முடிகிறது, என்பதை அறிந்துதான் இப்படிச் சொல்கிறேன்.

"எட்டையாபுரம் பாரதியார் விழாவுக்கு வெள்ளிக்குத்து விளக்கு இரண்டு அனுப்பிய சைவ மடாதிபதியானவர் கா. சுப்பிரமணிய பிள்ளை நினைவு நாள் விழாவுக்கு ஒரு ஆசிச் செய்திகூட எழுதவில்லை. பிள்ளை சைவத்திற்கு எத்தனையோ உதவியவர். ஆரிய வேதத்தின் புரட்டை எடுத்துக் காட்டி, அதைத் திருப்பி தமிழ் வேதமாகவும் எழுதினவர். அவர் அன்று எழுதியதை இனப்பற்றும் உணர்ச்சியுமில்லாத சைவர்களே எதிர்த்தார்கள். அப்பொழுது சுயமரியாதைப் பத்திரிகை 'குடி அரசே' பிள்ளையவர்களை தாங்கி எழுதிற்று. சிஷ்யர்

கள் பேரில் மடாதிபதிகளுக்குள்ள அன்பும் நன்றியும் பார்த்தீர்களா? சைவர்களும் பண்டிதர்களும்பாருங்கள்!"

என்று ஆத்திரத்தோடு எழுதுகிறார், அன்பர் கைவல்யம்.

விஷயத்தை அலசிக் காட்டுகிறேன் பாருங்கள். ஒரு புலவர் நினைவு நாளைக்கு வெள்ளிக் குத்து விளக்கு. அதுவும் தம்பிரான்களைக் கண்டித்துப் பேசியும் எழுதியும் வந்தவருக்கு! மற்றொரு புலவர் நினைவு நாளைப் பற்றிக் கவலையே இல்லை. அதுவும் சைவத்துக்கும் தமிழுக்குமாகவே உழைத்து ஓட்டாண்டியாக உயிர் நீத்த ஒருவருக்கு!

ஏன் இப்படி? அவர் சுப்பிரமணிய அய்யர்! இவர் சுப்பிரமணியப் பிள்ளை! அவர் பூணூல் அணியும் ஜாதியைச் சேர்ந்தவர். இவர் பூணூலை அறுக்க வேண்டுமென்று சொல்லும் இனத்தைச் சேர்ந்தவர். அவரைப் பாராட்டினால் ஆட்சியாளர் முதுகைச் சொறிந்து கொடுத்த மாதிரி! (அதுவும் இனாம்தாரி, நஷ்ட ஈடு, மதப் பிரசார அவசியம்; சு. ம. ஒழிப்பு முதலிய பிரச்னைகள் அடிபட்டுவரும் இவ்வேளையில்) பாரதி இனத்தை திருப்திப்படுத்தினால் பண்டார சந்நிதியின் பஞ்சேந்திரியங்களுக்கும் சுகமுண்டு; இன்பமுண்டு; சுவையுண்டு; எல்லாமுண்டு! எம். எல். பிள்ளையின் இனத்தைத் திருப்திப்படுத்த வேண்டுமானால் பல்லக்கை விட்டு இறங்க வேண்டும்; பாடுபட்டு உழைக்க வேண்டும். இது தெரியாதா, எங்கள் சைவத் திருமேனியாம் பண்டார சந்நிதிகளுக்கு! பகலில் பஞ்சாக்ஷர உச்சரிப்பும், இரவில் இன்பக் கடல் நீச்சும் தவிர வேறொன்றும் அறியாத பரப்பிரமம் பண்டார சந்நிதி கிடக்கட்டும்! உலகமறியாத உல்லாச பிண்டங்கள்!

உலகத்தையே தங்கள் கைக்குள் அடக்கிக் கொண்டிருப்பதாகக் கூறும் சர்வதேச நிபுணர்களைப் பாருங்களேன்!

'தனி ஒருவனுக்கு உணவில்லையெனில் ஜகத்தினை அழித்திடுவோம்," என்று முழக்கமிட்டான் எங்கள் பாரதி!

என்ன தீவிரம்! என்ன புரட்சி! அவனன்றோ தமிழ் நாட்டு லெனின்! காங்கிரஸ் இயக்கத்தின் கார்ல் மார்க்ஸ்!'' என்று பாடிப்பாடி, பேசிப் பேசி, பரவசப்படும் தோழர்களை கேட்டுப் பாருங்கள்!

'' ஏனய்யா! தமிழ் நாட்டின் முதல் பொது உடமைக்காரரான காம்ரேட் சிங்காரவேலுவைப் பற்றி நீங்கள் எதுவும் சொல்வதில்லை? ஏன் இவரைப் பற்றி நீங்கள் எழுதுவதில்லை? நினைப்பது கூட இல்லை? பாரதியாரை விட சிங்காரவேலு அறிவில் குறைந்தவரா? செயலாற்றலில் குறைந்தவரா? ஒழுக்கத்தில்குறைந்தவரா? அவர்தானே தமிழ்நாட்டில் பொதுவுடமைவிதைஊன்றியவர்?'' என்றுகேட்டுப்பாருங்கள்!

ஹீ! ஹீ! என்று இளிப்பதைத் தவிர வேறு ஏதாவது பதில் வருமா?

அந்த ''ஹீ! ஹீ!'' இளிப்புக்கு வியாக்யானம் நான் கூறட்டுமா?

பாரதி பூணூல் தரிக்கும் ஜாதி! சிங்காரவேலு மீன் பிடிக்கும் ஜாதி. அதிலும் அவர் பூணூலை வெறுக்கும் பேர் வழி! அவ்வளவேதான்!

''எதற்கும் பூணூல் வேணுமப்பா'' என்று ஆரம்பத்தில் கூறியது இதற்காகத்தான்! ' பூணூல் அறுப்புக் கழகம் '' என்று ஒரு புதுக்கழகம் ஆரம்பித்தால்கூட அதன் தலைவர் பூணூல் போட்டிருந்தால்தான் முடியும் போலிருக்கிறது! அப்படி யிருக்குதய்யா நம் சமூகம்!

★

## 4. பட்டுக்கோட்டையும் புதுக்கோட்டையும்

தமிழிலும் சரி, இங்கிலீஷிலும் சரி, அடிக்கடி மாறாட்டம்ஏற்பட்டுவிடுகிறது. கடிதங்களைப் பிரித்துப்போடும் போஸ்டல் ஊழியர்கள் அவசரத்தில் வேலைசெய்பவர்கள்!

ஊரின் பெயரிலுள்ள இரண்டொருஎழுத்துக்களை மட்டுந் தான் படிப்பார்கள். 'டபக்' என்று ஏதோ ஒரு புறாக் கூட்டில் (புறாக்களுக்குப் பதிலாக கடிதங்கள் இருக்கும்) போட்டு விடுவார்கள். திருவள்ளூர் கடிதம் திருவாரூருக்கும், காரைக்கால் கடிதம் காரைக்குடிக்கும், மதராஸ் கடிதம் மதுரைக்கும், வடலூர் கடிதம் கடலூருக்கும், மங்களூர் கடிதம் பங்களூருக்கும் போவது சர்வ சாதாரணம். இப்படித் தட்டுக்கெட்டுப்போய், துறவிகளைப் போல, ஊர்சுற்றிக் கொண்டேயிருக்கும்! சில சமயங்களில் சொந்த ஊருக்கே திரும்பிவருவதும் உண்டு!

புதுக்கோட்டை, பட்டுக்கோட்டை இரண்டும் பெயரளவில்தான் ஒரேமாதிரி இருக்கின்றன என்று நினைக்க வேண்டாம். அங்கிருந்து ஒருவர்—இங்கிருந்து ஒருவர்; இரண்டு பிராமணத் தோழர்கள் எனக்கு கடிதம்எழுதி யிருக்கிறார்கள்.

"டேய்! குத்தூசி! காந்தியைக் கொன்றவன் பார்ப்பான் என்பதை நீ ஏன் அடிக்கடி ஞாபகப்படுத்துகிறாய்? உன் கூட்டம் இல்லாவிட்டால் அந்தச்சங்கதியே இங்கே பரவியிருக்காதே! ஜாக்கிரதை! எங்கள் ஜாதியைப் பற்றி எழுதாதே! உன் பத்திரிகையைப் பற்றியும் உன் இயக்கத்தைப்பற்றியும் படேலுக்கும் நேருவுக்கும் விவரமாக எழுதி யிருக்கிறோம். பிராமணர்கள் அத்தனை பேரும் கையெழுத்துப் போட்டு மகஜர் அனுப்பி யிருக்கிறோம். பார்! இன்னும் ஒரே மாதத்தில் உன் பேப்பர் நிறுத்தப்படும். உன் சங்கம் சட்டவிரோதமாக்கப்படும். உன் கூட்டத்தார் கைது செய்யப்படுவார்கள்!"

இதே நடையில் அல்ல. இதைப்போன்ற வேகமான இங்கிலீஷ் நடையில்.

இந்த இரண்டு ஊர்த்தோழர்களும் "ஒரு பிராமணன்" என்றுதான் கையெழுத்துப் போட்டிருக்கின்றனர்.

இரு கடிதங்களையும் என் நண்பரான ஒரு காங்கிரஸ் திராவிடத் தோழரிடம் காட்டினேன்.

"ஆமா! சார்! இருக்கலாம்! எங்கள் தலைவர்கள்கூட கமிட்டிக் கூட்டத்தில் குசு குசு வென்று ஏதோ இது சம்பந்தமாய்ப் பேசிக்கொண்டார்கள். டில்லியிலிருந்து உத்தரவுவந்திருக்கிறதாம்; காங்கிரசுக்கு எதிராகவுள்ள கட்சிகளை அடக்கி நசுக்கிவிடும்படியாக. இன்னும் ஒரு வருஷத்தில் புதுத்தேர்தல் நடக்கும்போது உங்களையெல்லாம் உள்ளே வைத்திருந்தால் தொல்லையில்லாமல் ஜெயிக்கலாம் என்று வடநாட்டார் கருதியிருக்கிறார்களாம். வடக்கே சோஷ்யலிஸ்ட்களைத்தவிர காங்கிரசுக்கு வேறு எதிர்ப்பில்லையாம். அவர்களை எப்படியாவது சரிப்படுத்தி விடலாம் என்று நினைக்கிறார்களாம். இந்த மாகாணத்தில் கம்யூனிஸ்டுகளையும், உங்கள் கூட்டத்தையும் அடக்கி விட்டால் போதும் என்பதுதான் அவர்கள் நினைப்பு," என்றார் காங்கிரஸ் தோழர்.

"ஓஹோ! வெலிங்டன் மாத்திரையை சாப்பிட்டிருக்கிறாரோ பட்டேல்? அது அகோரமான வெறியை எழுப்பிவிடுமே!", என்று சொன்னேன்.

"எனக்குக்கூட அதுதான் சரி என்றுபடுகிறது, ஸார்! ஆனால் ஒன்று. எங்களைப் பொறுத்தவரையில் இனிமேல் எந்தப்பிராமணரையும் காங்கிரசுக்குள் ஆதிக்கஞ் செலுத்த விடமாட்டோம். அது நிச்சயம். கொஞ்சநஞ்சம் இருந்த ஆசையும், ஓமந்தூரார் விஷயத்தில் அவர்கள் நடந்துகொள்கிற அயோக்கியத்தனமான நடத்தைக்குப் பிறகு மறைந்தே போய்விட்டது. இனி காங்கிரஸ் தலைமை, மந்திரி பதவி, என்று தமிழ் நாட்டைப் பொறுத்தமட்டில், எந்த பிராமணனும் நினைக்கமுடியாது. ஆனால் உங்களோடு சேரமுடியாது, எங்களால்"

"அடடே! எங்களோடு சேரச்சொல்லியா கட்டாயப் படுத்துகிறோம்? அங்கிருந்தபடியே எங்கள் வேலையைச்

செய்யலாமே! இப்போ நீங்கள் சொன்ன விஷயமிருக்கே, அதுவே எங்கள் புத்தகத்திலிருந்து பிய்த்த எடுதானே! பரவாயில்லை அந்த எட்டையே திருப்பித் திருப்பி படியுங்கள்! அது போகட்டும்! எங்களை உள்ளேதள்ளிவிட்ட பிறகு நீங்களே நாங்களாகி விடுவீர்களே! அப்புறம் நீங்கள் ஜெயித்தாலென்ன? நாங்கள் ஜெயித்தாலென்ன? நீங்களும் நாங்களும் திராவிட இனத்தின் இரண்டு கைகள்தானே! ஒருகை இன்னொரு கையைப்பார்த்து பரிகசிச்கலாமா? பொறாமைப்படலாமா? இடது கைக்கு ஒரு வேலையுமே கொடுக்காதிருந்துவிட்டால் சூம்பிப்போய்விடுமே! எங்களை உள்ளே தள்ளிவிடுவதும் அப்படித்தான்! இரண்டு கைகளுக்கும் சரிபங்கு வேலை கொடுத்தால்தான் பார்ப்பதற்கு அழகாயிருக்கும். ஆனால்லன்று. பட்டுக்கோட்டை—புதுக்கோட்டை பிராமணர்கள் மிரட்டியிருப்பதுபோல எங்களை அடக்கி விட்டால், உங்கள் கதி என்ன ஆகும் தெரியுமா? நாங்கள் திராவிட இனத்தின் உள் தாழ்ப்பாள். அதை ஒடித்து விடாதீர்கள்! திருடன் நுழைந்து விடுவான். எங்கள் வாயையும் பேனாவையும் அடக்கிவிடுவது எது போன்றது தெரியுமா? " திருடர்கள் ஜாக்கிரதை!" என்ற போர்டுகளைக் கழற்றி எறிவதுபோன்ற செய்கை! " ஜன்னலுக்கு வெளியே கை நீட்டவேண்டாம்." "கதவைத்திறந்து கொண்டு வாசலில் உட்காராதே!" இம்மாதிரி அபாய அறிவிப்பு போர்டுகள்தான் நாங்கள், திராவிட கழகத்தார்! இவைகளைக் கழற்றி எறிந்துவிடுவது ஒரேநிமிஷத்துவேலை. ஆனால் அதன்பலனை யார் அநுபவிப்பது? பாமரர்கள் தானே! அதுமட்டும் உங்கள் நினைவிலிருந்தால் போதும்! நாங்கள் எங்கிருந்தாலென்ன?...அது சரி! ஜெயில் அரிசி ரேஷன் அரிசியைவிடச் சுத்தமாகவும் ருசியாகவும் இருக்கிறதாமே, நிஜந்தானா? மோர்கூட தாராளமாகக்கிடைக்கிறதாமே!" என்று கேட்டேன்.

காங்கிரஸ் தோழர் சிரித்துக்கொண்டே போய்விட்டார். ஆனால் போன அவசரத்தில் நான் கொடுத்த கடிதங்களை

யும் எடுத்துப்போய்விட்டாரே! அவர் ஒருமாதிரியான முரட்டுப்பேர்வழி! போலீஸ் மந்திரியிடம் காட்டிவிடப் போகிறார்! காட்டினால்தான் என்ன? அவரும்தான் அசெம்பிளியில் பிராமணர்களைத் தாக்கிப்பேசியிருக்கிறாரே! நாம் ஜெயிலுக்குள்ளே போனால் அவரைமட்டும் விட்டு விட்டாபோய்விடுவோம் நடக்கிறதுநடக்கட்டும். பட்டுக்கோட்டை—புதுக்கோட்டை பிராமணத்தோழர்களே! நடக்கட்டும் உங்கள் வேலையும்! ஆகஸ்ட் 15-ந் தேதி கிடைத்த சுதந்திரம் உங்களுக்குத்தானே! இல்லாவிட்டால் உங்கள் இனத்தான் காந்தியாரைக் கொன்றுங்கூட நீங்கள் இப்படி மஞ்சள் குளிப்பீர்களா? சரி! அடுத்த மகஜரையும் தயார் செய்யுங்கள்!

★

## 5. "டேய்! பூணூலை அறுத்தெறிடா!"

'டேய்! வரதா! இந்தா! கிட்டேவா! இது எண்டா இன்னம்? அறுத்தெறி சனியனை! இதாலே எத்தனை தொல்லை நமக்கு!' என்றாள் அண்ணாசாமி அய்யங்கார் மனைவி அம்புஜம், தன் மகன்வரதனின் பூணூலை கையில் பிடித்தபடியே.

"அம்மா! அம்மா! நான் மாட்டேன். அப்பா உதைப்பார்!" என்றான் 12 வயதுப் பையன்.

"உதைப்பாரா? அதெல்லாம் அந்தக்காலம். இந்தக் காலத்தில் தான் கழுதைமேய அந்த வேலையை மறந்துடுத்தே! அது கூட அஹிம்சைபேச அரம்பிச்சுடுத்தே, காலால் ஆகாத்தனத்தால்! இந்தா, இனிமேல் இது வேண்டாம். இது போட்டதினாலே நீயும் உன் அப்பாவும் உயர்ந்த ஜாதி ஆயிட்டேளோ! நான் பூணூல்போடலையே! அப்படீன்னா, நான் சூத்திர ஜாதியா? சொல், கேட்கிறேன்."

"எண்டீ நீ என்கிட்டே இப்படி கோபிச்சுகறே! அப்பா ஆபீசிலிருந்து வந்தப்பறம் அவருகிட்டே சொல்லேண்டீ."

"டேய்! நான் உன் பெண்டாட்டியா? 'எண்டீ' போண்டீ என்று கேட்கிறே! அவா கூப்பிடுறாளே! எவ்வளவு மரியாதையா, 'வாங்கோ, 'போங்கோ'ண்ணு? அப்படியே நீயும் கூப்பிட்டாலென்ன? நம்ப ஜாதியைப் போலே கெட்டுப் போன ஜாதியே கிடையாதப்பா! எனக்கென்னமோ ரெண்டு மாசமா நம்ப ஜாதியை கொஞ்சங் கூட புடிக்கலே. இனிமேல் நம்ப ஜாதிக்கு கேடுகாலம் வரப்போகு துண்ணு தான்தோண்றது! இவ்வளவு படிச்சிருக்காரே, அவருக்கே இதெல்லாம் தோணலையே! நீ சின்னப்பயல், னோக்கு என்ன தெரியப் போறது? நம்ம பிற்காலம் எப்படியிருக்கும் என்பதைப் பற்றி அவருக்கு ஏதேனும்........."

"எவருக்குடீ! என்னடீ! என்னைத் திட்டீண்டிருக்கே? என்று கேட்டுக்கொண்டே உள்ளே நுழைந்தார் அண்ணாசாமி அய்யங்கார்.

"எல்லாம் உங்களுக்குத் தான். நாம் இனிமேல் புத்திசாலித் தனமா நடந்துக்கணும்! பூணூலைப் போட்டுண்டு பெரிய ஜாதிண்ணு சொல்லிண்டு மிரட்டின காலமெல்லாம் இனிமே முடியாது. காலம் வரவர ரொம்ப கெட்டுப் போயிடுத்து! இதோ படிக்கிறேன், கேளுங்கள்:—

,,இவர் அசல் வகுப்பு வெறி பிடித்த ஒன்றரை அணா பஞ்சாங்கம் என்பதை தமிழ் மக்கள் உணர வேண்டும். வைத்தி நாதய்யர்களுக்கு இனி தமிழ் நாட்டில் பகல் வேஷம்போட இடமில்லை என்பதைசெய்தாக வேண்டும்."

பாருங்களேன்! மகா தியாகி மதுரை வைத்தி நாதய்யரைப் பற்றி எழுதியிருப்பதை! இன்னும் படிக்கிறேன், கேளுங்கள்:—

"தமிழ் மக்கள் இனியாவது வடி கட்டின வகுப்பு வாத வரதாச்சாரிகள் நாட்டுத் துரோகிகள்-நேர்மைக்கே புறம்பானவர்கள் என்பதை உணரவேண்டும். எளிமையும் ஏழ்மையும் மிகுந்த வாழ்க்கைநடத்துவதாக சட்டை கூட போடுவதில்லை என்று வேஷம் போட்டுவரும் இந்த ஜகஜ்ஜால புரட்டர்களை தமிழ் மக்கள் இனி பொது மேடையிலிருந்து விரட்டி அடிக்கவேண்டும்".

கேட்டீர்களா? நம் குலத்துக்கே ஒரு குத்து விளக்கைப் போன்ற ஒரு தியாகியைப்பற்றி எப்படி எழுதுகிறான் பார்த்தீர்களா ?"

"ஏண்டீ! அதென்ன 'விடுதலை' பேப்பரோ?" என்று கேட்டார். அண்ணாசாமி அய்யங்கார்.

"விடுதலை' பேப்பர் இப்படித் தானிருக்குமோ? அது கூடவா தெரியாமற் போயிடுத்து உங்களுக்கு? இது ஒரு காங்கிரஸ் வாரப் பத்திரிகை. காண்டீபமாம், இதன் பெயர்! காங்கிரஸ் மனுஷாளே நம்மை இப்படித்தாக்க ஆரம்பிச்சால் இனிமேல் நம்ம கதி என்ன ஆவது? அதற்காகத்தான் பூணூலை அறுத்துத் தொலையுங்கோண்ணா, ஏதோ திருமங்கல்யக் கயிற்றை அறுப்பது மாதிரி பயப்படுறியகளே! காலத்துக் கேற்றபடி மாறவேணும் என்கிற புத்தி கூட நமக்கு இல்லையே! நம்ப ராஜகோபாலாச்சாரியாரைப் பாருங்கோ! பூணூலா போட்டிருக்கிறார்? அவர் பெண்ணைக் கூட வேறு ஜாதியிலே கொடுத்திருக்கிறாரே! நாமும் அப்படி யெல்லாம் செய்யணும். செய்தால் என்ன? அதற்காக நம் வேலையை விட்டுடப்போறோமா, என்ன? எந்த வேஷம் போட்டாலும் நம்ம வேலை நடந்திண்டு தானே இருக்கப் போறது? ராஜாஜியையே பாருங்களேன்! நம்ம இனத்துக்காக 24 மணி நேரமும் பாடுபடுகிறாரா இல்லையா?"

"பூணூலை மட்டும் கழற்றி விட்டா போதுமாடீ? அவன்கள் அப்போதும் நம்பமாட்டான்களே!"

"ஆமா, கொஞ்ச காலத்துக்கு நம்பத்தான் மாட்டான்கள்; நாம் நடந்துக்கிற மாதிரியிலே இருக்கு! என்னைப்பாரும்! எதிர்த்த ஆத்து நாடார் சம்சாரம் நன்னா 'பிர்ஞ்ச்' சேஞ்சிருந்தாள்! இப்பத்தான் சாப்பிட்டுட்டு வர்றேன்! நிறையா நெய் போட்டு என்ன நன்னா சேஞ்சிருந்தா, தெரியுமோ?"

"அடே! கர்மகாண்டமே! மாமிசம் போட்டிருப்பாளே, அதிலே!"

" "அதெல்லாமில்லே! அவளைக் கேட்டேனே! அப்படித்தான் போட்டாலென்ன? ஸ்மார்த்தாள் யாகத்திலே மாமிசம் சாப்பிடறாளே! அவா ஆத்திலே நீர் அன்னிக்கு சாப்பிடலையோ?"

[இதற்குள் பையன் வரதன் தன் பூணூலை ஒரு அங்குல நீளத்திற்கு துண்டு துண்டாக கத்திரித்துக் கொண்டுவந்து தன் தாயிடம் காட்டினான். சிறு பையன்கள்" சுறுசுறுப்பு பெரியவர்களுக்கு எப்போதுதான் வருமோ?]

★

## 6. தப்பட்டைத் தீயில் டஞ்சாங்கத்தை எறி!

சில மாதங்களுக்கு முந்தி ஜோலார்பேட்டையில் நடந்த ஒரு பொதுக் கூட்டத்தில் பல ஆதித்திராவிடத் தோழர்கள் தங்கள் தப்பட்டைகளைக் கொண்டு வந்து குவித்து அவைகளுக்குத் தீ வைத்தார்களாம். தங்களுக்கிருக்கும் இழிநிலைக்குக் காரணம் தப்பட்டை அடிப்பதுதான் என்று கருதியே அவ்விதம் செய்தார்களாம். இனிமேல் தப்பட்டை அடிப்பதில்லை என்றும் உறுதி கூறினார்களாம். தஞ்சை, திருச்சி, சேலம் போன்ற வேறு பல ஜில்லாக்களிலும் இம் மாதிரியே நடந்திருக்கிறது.

இப்படிச் செய்வது சரியா தப்பா என்று என்னைக் கேட்காதீர்கள். எந்தத் தொழிலும் கேவலமானதல்ல என்பதே என் கருத்து.

தொழில் பற்றித்தான் முதன் முதல் ஜாதிகள் ஏற்பட்டன என்று சொல்கிறார்கள். இருக்கலாம். ஆனால் அந்தப் பிரிவுகூட இன்று எவ்வளவு ஆபத்தை உண்டாக்கி விட்டது பாருங்கள்! மண் பானை செய்பவனின் மகன் வக்கீலாகிறான். ஆனால் வக்கீல் வரதாச்சாரி பெண்ணைத் திருமணம் செய்து கொள்ள முடிகிறதா? தொழில் பற்றி ஜாதி என்றால், வக்கீல் ஜாதியிலுள்ள இரண்டு பேரும் ஒரே ஜாதி தானே?

பறை யடித்ததற்காக 'பறையன்' என்ற ஜாதி (பிரிவு) ஏற்பட்டதாம்! ஆனால் அவன் மகன் செல்வராஜ் போலீஸ் இன்ஸ்பெக்டராயிருக்கிறானே! இன்ஸ்பெக்டர் ஜாதியைச் சேர்ந்த கிருஷ்ணசாமி முதலியார் வீட்டுடன் சம்பந்தம் வைத்துக்கொள்ள முடிகிறதா?

தொழிற் சங்கங்கள் ஏற்பட்டால், சமத்துவம் மலரும், சமத்துவத்தினால் பொதுவுடைமை காய்க்கும் என்கிறார்களே, கம்யூனிஸ்ட் தோழர்கள்? ட்ரைவர் சங்கத்திலுள்ளவர்களெல்லாம் உண்ணல், உறவாடல், மணஞ் செய்தல் முதலியவைகளில் ஒரே ஐக்கியத்துடனிருக்கிறார்களா? ஏன் இல்லை? கார்ல் மார்க்ஸ் புத்தகத்தில் இதற்குப் பதில் காணமுடியாது.

தான் ஒரு தொழில் செய்வதனால்தான் தன்னைப்பிறர் இழிவாகக்கருதுகிறார்கள் என்று கருதுபவர்சிலர்இருக்கலாம். தான் இழிவாகக் கருதும் ஒரு தொழிலை விட்டுத் தொலைப்பதை யாரும் ஆட்சேபிக்கக்கூடாது. இனித் தப்பட்டை அடிப்பதில்லை என்றால் யாரையும் வற்புறுத்தக் கூடாது. அந்தத் தொழிலை நாமே செய்யப் பழகவேண்டும். இல்லாவிட்டால் அது இல்லாமலே வாழ்க்கை நடத்தவேண்டும்.

" இனி க்ஷவரத் தொழில் செய்யமாட்டோம்," என்று அத்தொழிலாளர்கள் முடிவு செய்துவிட்டால், அதற்காக அவர்கள்மேல் குற்றஞ் சொல்லலாமா? 'எந்த நாட்டிலும் க்ஷவரம் செய்கிறவர்கள் இருக்கின்றனர்; அது ஒரு இழிவுத் தொழிலல்ல ஆனால் அதற்கென ஒரு தனி ஜாதிதான் இருக்கக்கூடாது,' என்று சொல்லிப்பார்க்க வேண்டும். அவர்கள் பிடிவாதமாயிருந்தால் நாம் எல்லோருமே க்ஷவரம் செய்துகொள்ளக் கற்றுக்கொள்ள வேண்டியதுதானே! (இப்போதுமட்டும் என்ன வாழ்கிறது?) அல்லது தாடி மீசைகளை வளர்த்துக்கொள்ளவேண்டும்!

" இந்தப் பாழும் பஞ்சாங்கம் இருப்பதனால்தானே, எல்லோரும் என்னை இப்படி முறைத்துப் பார்க்கிறார்கள்! பலர் "ஏ! ஏமாற்றுக்காரா!" என்று அழைக்கிறார்கள்! சிலர் "ஓய்! கோட்ஸே!" என்று கூப்பிடுகிறார்கள்! இந்தச் சனியன் இனி வேண்டாம். இனிமேல் நான் விறகு உடைத்தாலும் உடைப்பேனே தவிர இந்த ஈனத்தொழிலைச் செய்யமாட்டேன்," என்று சொல்லி தன் பஞ்சாங்கத்தை தப்பட்டை எரியும் அதே தீயில்போடுவதானால் நாம்எப்படித் தடுக்கமுடியும்? அவனிஷ்டம் பாவம்! நாம் என்னசெய்வது? இனி நாமே நம்காரியத்தைப் பார்த்துக்கொள்ள வேண்டியது தான். எனக்கு நானே புரோகிதன் என்று தானே திருப்திப்படவேண்டும்?

" இனிமேல் என்னால் சமையல் செய்ய முடியாது," என்று சமையற்கார ஜாதி (சக்தி என்று சொல்கிறீர்களே, அந்தப் 'பெண்' ஜாதியைத்தான் சொல்கிறேன்.) சொல்லி விட்டால் நீங்களும் நானும் பேனாவை வைத்துவிட்டு கரண்டியைக் கையிலெடுக்க வேண்டியதுதானே!

இதெல்லாம் எதற்காகச் சொல்கிறேன், தெரியுமா?

நாளைக்குச் சில பார்ப்பனர் நம் கூட்டங்களுக்கு வரலாம்! " ஏனய்யா எங்கள் பாவத்தைக் கொட்டிக்கொள்கிறீர்கள்? கோட்ஸே இனம், கோட்ஸே இனம் என்று

சும்மா, சும்மா சொல்லித்தொலைக்கிறீர்களே! இனி நாமெல்லோரும் ஒன்றுதான். இதோபாருங்கள்! ஏமாற்றுச் சின்னங்கள் !" என்று சொல்லி பூணூல், பஞ்சாங்கம், தர்ப்பை, முதலியவைகளைக் கூடை கூடையாக நம் எதிரில்கொட்டி அவர்களே அவைகளுக்குத் தீ வைக்கலாம் (தோழர்கள் தப்பட்டைகளுக்கு வைத்ததுபோல) அந்தச்சமயத்தில் அவர்களை நீங்கள் யாரும் தடைசெய்யாதீர்கள் என்பதற்காகவே இதை எழுதினேன். பார்ப்பனர் எதைச்செய்தாலும் தடுப்பது என்று கருதிவிடப் போகிறீர்கள் ! அவர்களுடைய இழிவைக் (!!!) குறிக்கும் எதையும் எரிப்பதற்கு அவர்களுக்கு உரிமையுண்டு. அந்த உரிமையில் தலையிடாதீர்கள் ! நீங்களாகவும் அதைச்செய்யாதீர்கள் !

என் அருமைப் பார்ப்பனத் தோழர்களே ! போதுமா, நான் எழுதியது ? எங்கே பார்க்கலாம் ! புறப்படுங்கள் தீப்பெட்டியோடு ! போங்கள் திராவிடர் கழகக் கூட்டங்களுக்கு, வைத்திநாத லீலை செய்வதற்கல்ல ! உங்கள் இழிவைப் போக்கிக் கொள்வதற்குத்தான் !

**"கொலைத்தொழில் புலைத் தொழில்களைக் கைக்கொண்டு ஒழுகினமைபற்றி வேளாளரால் தாழ்த்தப்பட்ட ஆரியப் பார்ப்பனர் பையப்பைய அவ்விழி தொழில்களைக் கைவிட்டுத், தம்மைத் தாமே உயர்த்துப் பேசிக்கொண்டு, தம்மைத் தாழ்த்திய வேளாளர்களைத் தாமும் தாழ்த்துதற் பொருட்டு அவரைச் "சூத்திரர்" என்று வழங்கலாயினர்."**

**—மறைமலையடிகள்.**

("வேளாளர் நாகரீகம்" பக். 8).

# III. துவரை

## 1. இன உணர்ச்சி, ஸார்!

"அரியக்குடி ராமானுஜ அய்யங்காரை விட சித்தூர் சுப்பிரமணியத்தின் குரல் என் காதுக்கு இனிக்கிறது; அல்லாடி கிருஷ்ணசாமி அய்யரின் 'அறிவைவிட எதிராஜ் அறிவு மேலானதாக எனக்குப் படுகிறது; சத்யமூர்த்தி அய்யர் பேச்சைவிட சர். ஏ. இராமசாமி பேச்சை சிறந்ததாகக் கருதுகிறேன். இதற்குக் காரணம், என்னை அறியாமலே எனக்குள் எழும்பும் இன உணர்ச்சிதான். காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு அல்லவா?" என்று ஆசைமிக்க என் தோழர் ஒருவர் அடிக்கடி பொது மேடைகளில் கூறுவார். இந்த மாதிரி உதாரணத்தின் மேல் உதாரணமாக, அழகான தமிழ் நடையில் அடுக்கிக் கொண்டே போகும்போது, என் பக்கத்தில் நிற்கும் பிராமணத் தோழரின் முகம் சுட்ட மாம்பழம் போலச் சுருங்குவதைப் பார்த்திருக்கிறேன். என் உடல் சிலிர்ப்பையும் அநுபவித்திருக்கிறேன்.

"இது என்ன ஸார், பச்சையான பிராமணத் துவேஷம்!" என்று என்னைக் கேட்டவர்களுக்கெல்லாம் "துவேஷம் அல்ல ஸார்; திராவிட இன உணர்ச்சி ஸார்!" என்று பதிலளித்திருக்கிறேன்.

அதே பதிலை இன்று நானே, என் சார்பிலேயே, எனக்காகவே, கூறவேண்டி வந்துவிட்டதே! இதுதான் ஆச்சரியம்! கேளுங்கள், நடந்ததை.

ஒரு பிராமண பத்திரிகாசிரியர் எனக்கு ரொம்ப வேண்டியவர். நல்ல மனுஷர் கூட! 12 வருஷங்களாக நாங்கள் நண்பர்கள்.

இருவரும் நேற்று கடற்கரைக்குப் போனோம். அங்கே மணலில் சிறிது நேரம் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்து விட்டு வீட்டிற்குப் புறப்பட்டோம். பிரசிடென்சி கல்லூரியை அணுகியதும் அங்கே புதிதாக நாட்டியிருக்கும் "தமிழ்த் தாத்தா" உ. வே. சாமிநாதய்யர் சிலை எங்கள் கண்களில் பட்டது.

"தமிழ்த் தாத்தா சிலையைப் பார்த்தீர்களா? என்ன அருமையான வேலைப்பாடு! சிலை மட்டுமா? அவருக்கு கோயில் கூடக் கட்டலாம், தமிழர்கள். அவரில்லாவிட்டால் தமிழ் ஏது?" என்றார், என் நண்பர்.

"அதிலென்ன தடை? சங்க நூல்கள் என்றாலே சாமிநாதய்யர் ஞாபகந் தான் வரும். அவர் செய்த தமிழ்த் தொண்டு பாராட்டக்கூடியதுதான்," என்றேன், பந்தத்திக்காக.

"என்ன அவ்வளவு சாதாரணமாகச் சொல்கிறீர்களே! எவ்வளவு மகத்தான சேவை, போங்கள்! இந்த ஒரு சிலை தானா? தமிழ் நாட்டில் நகரந்தோறும் சிலை இருக்க வேண்டாமா?," என்றார் தமிழ் உணர்ச்சி பொங்கும் பத்திரிகாசிரியத் தோழர்.

இதற்குமேல் என்னால் பொறுக்க முடியவில்லை. வேறு யாரேனும் இப்படிக் கூறியிருந்தால் 'வெடுக்' கென்று பதில் சொல்லியிருப்பேன். பிராமணனாயிருந்தும் தோழமைப் பாசம் என் நாவுக்கு 144 போட்டுவிட்டது.

"அது சரிதான்! ஆனால்—", என்று இழுத்தேன்.

"என்ன இழுக்கிறீர்களே! இதில் கூடவா அபிப்பிராய பேதம்?" என்று ஆச்சரியத்துடன் கேட்டார்.

"ஆமாம்! இதில் கூடத்தான். என்ன செய்வது? எவ்வளவுதான் அடக்கிப் பார்த்தாலும் உண்மை பீறிட்டுக் கொண்டுதானே வருகிறது? கேளுங்களய்யா,—

சாமிநாதய்யரின் குருவான வித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை கம்பரை விடப் பல மடங்கு அதிக மான பாடல்களைப் பாடியவர். சுமார் ஒரு லட்சம் பாடல் கள் இருக்கும் என்று கூடச் சொல்கிறார்கள். அத்த னையும் சுவை பொருந்திய பாடல்களாம். ஆனால் அவருக்குப் படமோ சிலையோ இல்லை, தமிழ் நாட்டில்.

அடுத்தபடி மறைமலை யடிகள். தமிழ், சமஸ்கிருதம், இங்கிலீஷ் மூன்றிலும் நல்ல தேர்ச்சி, ஆராய்ச்சி உடை யவர். பல பெரும் புலவர்களுக்கு ஆசிரியர். சுயமாகச் சிந்தனை செய்து பல முதல்தரமான தமிழ் நூல்களை எழுதியவர். அதுவும் மணிப் பிரவாள தமிழ்க் கொலை நடையிலல்ல. தூய தனித் தமிழ் நடையில். தமிழரின் தனிச் செல்வம். ஆனால், அவர் படமும் இல்லை; சிலையுமில்லை.

இன்னும் சொல்கிறேன். கா. சுப்பிரமணிய பிள்ளை வறுமையை மணந்து தமிழுக்காகவே வாழ்ந்து உயிர் நீத்தவர். தமிழ் இலக்கிய ஆராய்ச்சி நிபுணர். பேரறிஞர். தமிழை விலைபேசி ஒரு லட்சம், 2 லட்சம் சம்பாதித் தவரல்ல. டாக்டர் ஜான்சனைப் போல, தம் அறிவுப் பொக்கிஷத்தை 50 ரூபாய்க்கும், 75 ரூபாய்க்கும், மூட் டைப் பூச்சி வியாபாரிகளிடம் விற்றவர். கிழிந்த வேட் டியோடு இறுதிவரையில் தமிழ்ச் சேவை செய்தவர். ஆனால் அவருக்குப்படம் உண்டா? சிலை உண்டா ?

இன்னும் கேளுங்கள். கா. நமசிவாய முதலியார்: நீங்களும் நானும் இன்னும் பல லட்சம் பேர்களும், ஆரம்ப வகுப்பு முதல், பி. ஏ. வரையில் தமிழ்ப் பாட புத் தங்களைப் படிப்பதற்கு முதற் காரணமாயிருந்தவர். இதோ, இந்தக் கல்லூரியேயே பல ஆண்டுகள் தமிழ்ப் பேராசிரியராக இருந்தவர். உரை நடை என்பதையே பள்ளிகளுக்குள் முதன் முதல் புகுத்தியவர். நல்ல அறி

வாளி. கொடை வள்ளல். வறுமையைக் காணவும் சகிக்காத உள்ளம் படைத்தவர். அவருக்கு ஒரு சிலை உண்டா ?

கோபிக்காதீர்கள் ! இன்னொரு பெயரும் ஞாபகத்துக்கு வருகிறது. திரு. வி. க. ஆமாம் ! தமிழ்த் தென்றல், திரு. வி. க. வைத்தான் சொல்கிறேன். திருவள்ளுவரைப் போன்ற ஒரு தனி நடை ! இதற்கு முன்பு இருந்ததில்லை; இனியும் இருக்க முடியாது. அரசியல் துறைக்குள் முதன் முதல் நல்ல தமிழைப் புகுத்தியவர். தன்னலமற்ற தியாகி. பரந்த படிப்பு. உயர்ந்த ஒழுக்கம். தலைசிறந்த நற்குணம். அமைதியும் அன்புமே உரு. ஆனால் அவருக்கு ஒரு படம் உண்டா ? சிலை உண்டா ?

இன்னுங்கேளுங்கள். திருச்சியில் வசித்த நா. மு. வேங்கடசாமி நாட்டார். அவர் என்ன, சாமான்ய......

"போதுமய்யா ! போதும் ! இப்படியே எத்தனை மணி நேரம் பேசுவதாக எண்ணமோ ? நீங்கள் என்ன தான் படித்தாலும், பழகினாலும் ஜாதித் துவேஷம் என்ற சின்னப் புத்தி மட்டும் போவதில்லையே ! என் ?" என்று கேட்டார் சிறிது கோபமாக.

"சின்னப் புத்தியா ? ஆமாம் ! எல்லாம் தங்கள் கூட்டத்தைப் பார்த்துத் தெரிந்து கொண்டதுதான். அதற்கு முன்பு நானும் 'பெரிய புத்தி'யுடன்தான் இருந்தேன். ஒருக்கால் எனக்கு 'பெரிய நிலை' எதாவது திடீரென்று வந்தால் எனக்கும் 'பெரிய புத்தி' வந்தாலும் வரலாம்; அந்தப் பெரிய நிலையும் எனக்கு வேண்டாம்; பெரிய புத்தியும் வேண்டாம். சின்னஞ் சிறு உளியைக் கொண்டு தானே பெரிய பெரிய மலைகளை உடைக்கிறார்கள்? நானும் ஒரு சிற்றுளியாகவே இருந்து தொண்டு செய்து விட்டுத் தொலைகிறேனே ! இதில் யாருக்கு என்ன கஷ்டம்?" என்று கேட்டேன்.

என் நண்பர் அலட்சியமாகப் பார்த்து, ஏளனமாகச் சிரித்தார்.

அவரைக் குற்றஞ் சொல்வானேன்? நம்மவர்களிலேயே பலர் அவரைப் போலத்தானே பேசுகிறார்கள்? அவர் பூணூல் போட்டவர்; நம்மவர் அது இல்லாதவர்கள். அவ்வளவுதானே வித்தியாசம்!

★

## 2. பட்டம்மாளும், சுந்தராம்பாளும்

சங்கீத விமர்சனமல்ல. கலை ஆராய்ச்சியுமல்ல. தமிழ் இசை வளர்ச்சியுமல்ல. அற்பமான ஒரு விஷயம், புரட்சி வீரர்களைப் பொறுத்த வரையில். ஆனால் அடிப்படையான விஷயம் என்னைப் பொறுத்தமட்டில்.

"பார்ப்பானை அய்யன் என்ற காலமும் போச்சே! வெள்ளைப் பறங்கியைத் துரை என்ற காலமும் போச்சே," என்று எழுதினார், சுப்பிரமணிய பாரதியார். இதனாலே அவரை ஒரு பெரிய சமுதாயப் புரட்சிக்காரர் என்று கூறவில்லை. எத்தனையோ இடங்களில் 'ஆரியர்' என்று பெருமையாக கூறிக்கொள்கிறார். அதுபோகட்டும்.

"ஆடுவோமே! பள்ளுப்பாடுவோமே;" என்ற பாடலில் உள்ளதுதான் 'பார்ப்பானை அய்யன் என்ற காலமும் போச்சே' என்பது ஆனால் சினிமாவிலும், இசைத் தட்டிலும் இந்த அடியைமட்டும் விழுங்கிவிட்டார், இன உணர்ச்சிகொண்ட பாடகியார் பட்டம்மாள்.

பல மாதங்களுக்குப் பிறகு தமிழ் இசை அரங்கில் பாடகியார் சுந்தராம்பாள் இதே பாட்டைப் பாடினார். "பார்ப்பானை அய்யனென்ற காலமும் போச்சே! என்ற அடியைத் தொடங்கியதும் ஒரேகைதட்டலும், ஆரவாரமும்! ஏன்? பாரதியின் புத்தகத்தில் இருப்பதுதானே! எல்

லோரும் சாதாரணமாகப் பாடுவதுதானே! இதற்கு ஏன் இவ்வளவு பெரிய கூச்சல்?

புரட்சிப் பிரசங்கியார்களுக்கு இவ்விஷயம் புரியாது. பிரமாண்டமான அரசியல் — பொருளாதார பிரச்னை களைப்பற்றி மட்டுமே வேலை செய்யக்கூடிய முதிர்ந்த மூளைகளுக்கு இதன் காரணம் விளங்காது.

பார்ப்பன பாடகி விழுங்கிய பகுதியைத் திராவிடப் பாடகி பாடினார்! அதற்காகத்தான்!

இதற்காக இங்கிலீஷ் வாரப் பத்திரிகையொன்று (ஆரியரை ஆசிரியராகக் கொண்டது) துள்ளிக் குதிக்கிறது. இந்த அடி பாரதியாரால் பாடப்பட்டதில்லையாம்! இடைச்செருகலாம்! எவனோ அயோக்கியன் நுழைத்து விட்டானாம்! பிராமணர்களைத் தாக்குகிற சொற்களாம்! நாக்கிலும், மூக்கிலும் நானூறு தேள் கொட்டிவிட்டது போல அலறிக் குதிக்கிறது, அந்த ஆரியப் பத்திரிகை!

உள்ளதை மறைக்கலாமாம். ஆனால் அதை எடுத்துச் சொல்வது "பிராமணத் துவேஷமாம்!

காந்தியாரை ஒரு பார்ப்பான் கொல்லலாமாம்! அதை எடுத்துச்சொல்வது குற்றமாம்! எல்லா அயோக்கியர்களும் மறைப்பதுபோல நாமும் மறைத்துவிட வேண்டுமாம்! விஷமிகளும் பேடிகளுந்தான் மறைத்துவிட்டார்கள்! பட்டம்மாள் இனத்தார்! அல்லது அவர் புன்சிரிப்புக்குக் காலை நக்கும் "கயமை"க் கூட்டம்!

எனக்குப் பழக்கமான பணமூட்டை ஒருவர் பெரிய பாங்கியின் தலைவர். ஒரு நாள் தற்செயலாய் என்னைச் சந்தித்தார்.

"ஹிந்து" ஆசிரியர் என்னை மிரட்டுகிறாரே; என்ன செய்வது ஸார்?" என்று கேட்டார்.

"ஏன் மிரட்டுகிறார்? அவரை என்ன செய்தீர்கள்?" என்று கேட்டேன்.

"நான் ஒன்றும் செய்யவில்லை. மாதம் 1,000 ரூபாய்க்குமேல் விளம்பரம்கூடத் தந்துகொண்டிருக்கிறேன். என் பாங்கியில் இந்த 3, 4 வருஷத்துக்குள்ளா 5—6 பிராமண குமாஸ்தாக்களை எடுத்துவிட்டு தமிழர்களைப் போட்டு விட்டேனாம்! அதற்கு நானும் புதிதாக வந்திருக்கும் திராவிடக் காரியதரிசியும்தான் காரணமாம்! என்ன முதலியார் சார், ஈரோட்டு வாசனை வீசுகிறதோ? வேண்டாம். கேளும். பாங்கியே ஒழிஞ்சுபோகும்' என்று மிரட்டுகிறார். எனக்கு' பயமாயிருக்கிறதே! என்ன செய்வது?" என்று கேட்டார்.

"இவ்வளவு பெரிய பணக்காரர் ஏனய்யா அவருக்காக பயப்படுகிறீர்? 'உன் ஹிந்து' ஆபீசிலும் நீ நிர்வாக உறுப்பினராயிருக்கும் 'ஹிந்து ஹைஸ்கூலிலும்' எத்தனை தமிழர்கள் இருக்கிறார்கள்? எல்லாம் உங்கள் கூட்டமாகத் தானே இருக்கிறது? அதுமட்டும் பரவாயில்லையோ?' என்றுதிருப்பிக்கேட்கிறதுதானே, ஸார்?" என்றுகேட்டேன்.

"ஐயையோ! அவரையா? ஓமந்தூராரே அவரைக் கண்டால் நடுங்குகிறாரே! இன்ன ஆர். எஸ். எஸ். தலைவரை விட்டு விடுங்கள் என்று சொன்னவுடனே விட்டு விடுகிறாரே! நான் எந்த மூலை? உங்கள் பேச்சைக் கேட்க மாட்டேனய்யா!" என்று கூறிவிட்டார்.

அத்துடன் நிற்கவில்லை. "என்னை அவர் மிரட்டிய சங்கதியை யாருக்கும் சொல்லித் தொலைக்காதீர்கள்; நான் ஒரு "பிஸினசல்" உள்ளவன்", என்று கேட்டுக் கொண்டார்.

"ஆஹா! அப்படியே ஆகட்டும். இரகசியமாகவே வைத்திருக்கிறேன்," என்று கூறினேன்.

வாசகர்களே, யாருக்கும் கூறாதீர்கள். உங்கள் மனதிலேயே போட்டு வைத்து, உங்கள் கடமை எதுவோ

அதைச் செய்யுங்கள், போதும்! ஒரு ஆரியப் பத்திரிகாசிரியர் ஹைகோர்ட் ஜட்ஜ் நியமனம் முதல் பாங்க் கிளார்க் வேலை வரையில் என்னென்ன காரியங்களில் தன் இனத்தைக் கவனிக்கிறார், பாருங்கள்!

நம்மைச் சேர்ந்ததுகளோ, நாலுகாசு கையில் கிடைத்தவுடனே ஒரே தலை கீழாய் நிற்குதுகள்! 'கட்சியாவது, இனமாவது, என்கிறதுகள். 'என் சொந்த யோக்கியதையால் பெரிய மனுஷன் ஆனேன், என்குதுகள். உங்களுக்கும் எனக்கும் சம்பந்தமேயில்லை என்குதுகள்' ',இதெல்லாம் சில்லறைப் பிரச்னை; பரந்த நோக்கம் வேண்டும்" என்று பேசுதுகள்!

சீனுவாசனைப் பார்த்தாவது இதுகளுக்குப் புத்தி வராதா?

★

"திராவிடர்களே தென் இந்தியாவின் பண்டை மக்கள். அதற்கு மாறான கொள்கைக்குத் தக்க சான்றில்லை. பாகவதம், ஸ்கந்தம் 8, அத்தியாயம் 24, சுலோகம் 13-ல் இந்திய நோவராகிய (Indian Noah) சத்திய விரதன் என்பான் திராவிடத் [illegible] என்று அழைக்கப்படுகிறான்; "திராவிடர்" என்ற சொல் கி. பி. 5-ம் நூற்றாண்டில் ஏற்பட்ட வராகமிகிரருடைய பிருகச் சம்மிதையில் காணப்படுகிறது: "திராவிடர்" என்ற சொல் தமிழ்நாட்டைக் குறிப்பதற்கு வால்மீகி இராமாயணத்திற் பயன்படுகிறது. குமாரிலபட்டர் என்பார் கி. பி. 8-ம் நூற்றாண்டில் திராவிடர் என்ற சொல்லைத் தமிழ் மொழியைக் குறிக்கவே வழங்கினர்"

கா. சுப்பிரமணிய பிள்ளை, எம். ஏ., எம். எல்.

("மொழி நூற் கொள்கையும் தமிழ்மொழி அமைப்பும்"
—பக்கம் 61-62)

# IV. கேழ்வரகு

## 1. கதிர் அறுப்பதா? கம்பி அறுப்பதா?

10, 12 வருஷங்களாக உழவு வேலை செய்துகொண்டிருந்த மண்ணாங்கட்டி (இது மனிதன் பெயர்தான்; தென் ஆற்காடு ஜில்லாவில் அதிகம்!) நேற்று ஒரு மாதிரியாக வந்தான், என்னிடம்! அவன் முகத்தில் ஒரு 'க்ஷத்திரிய களை' வீசிற்று!

"இந்தாங்கய்யா! நீங்கதானே பேப்பர்லே எழுதுறவுங்கோ? என் பெயரையும் எழுதிப்பிடுங்கோ! இனிமேலே நான் கதிர் அறுக்கப் போறதில்லை. இன்னையோடே விட்டுட்டேன்!"

"ஏனப்பா விட்டுட்டே? பட்டாளத்தில் சேரப்போகிறாயா?" என்று கேட்டேன்.

"பட்டாளத்திலேயா! அந்தச் சனியன் எனக்கெதுக்கு? என் தம்பிதான் பட்டாளத்திலே நாலு வருஷம் இருந்துட்டு இப்போ வந்து ஈ ஓட்டிகிட்டு குந்திக் கிடக்கிறானே! நான் என் பட்டாளத்தில் சேரப்போறேன்? அதுதான் "பட்டாளத்தில் சேராதே! பாங்கியில் பணம் போடாதே!" அப்படின்னு காந்தி கட்சிக்காரங்க சொல்லியிருக்கிறாங்களே!"

"அது அப்போது சொன்னதப்பா! இப்போத்தான் பட்டாளத்திலே சேரச்சொல்லி கூப்பிடுறாங்களே! அது கிடக்கட்டும்! நீ என்னதான் பண்ணப்போறே? சொல்லித் தொலையேன்!"

"நானா? கம்பி அறுக்கப்போறேன்; தந்தியில்லே, தந்தி; அந்தத் தந்திக் கம்பி அறுக்கப் போறேனுங்க!

இதோ பாருங்கோ கத்திரிக்கோல்; இரும்பைக்கூட ஒரே வெட்டிலே 'டப்'புன்னு நறுக்கிப்புடுங்கோ! நல்ல கத்திரிக்கோல்!" என்று கூறி இடுப்பில் சொருகியிருந்த கத்திரியை எடுத்துக் காட்டினான், மண்ணாங்கட்டி.

"டேய் மண்ணாங்கட்டி! வேண்டாம்! வேண்டாம்! ஜெயிலுக்குள்ளே தள்ளிப்புடுவாங்க! தடியாலே அடிச்சு மண்டையைத் தூளாக்கிப்புடுவாங்க! வேண்டாம், இந்தக் கெட்ட புத்தி!"

'எனக்கா கெட்ட புத்தி? என்னை ஏமாத்தப் பாக்கிறீங்களா? இதோ இதைப் படிச்சுப் பாருங்கோ!" என்று சொல்லி ஒரு பத்திரிகை வெட்டுத் துண்டை நீட்டினான். வாங்கிப் படித்தேன். அதில் இருந்தது, இது:—

## தியாகிகளுக்கு இனாம் நிலங்கள்

திருநெல்வேலி, ஜனவரி. 11—

"கம்யூனிஸ்டாக இருந்தாலும் சரி, சோஷ்யலிஸ்டாக இருந்தாலும் சரி, ஆகஸ்ட் தியாகிகளுக்கு ஆளுக்கு 5 ஏக்கர் நிலம் இனாமாகத் தரப்படும். ரிமாண்டில் இருந்தவர்களுக்கும் அடிபட்டவர்களுக்கும் கஷ்ட நஷ்டமடைந்தவர்களுக்கும் நிலம் தரப்படும்," என்று ரெவின்யூ மந்திரி ஸ்ரீ காளா வெங்கடராவ் அறிவித்தார்."

இதைப்படித்தேன். 'ஆமாப்பா, மண்ணாங்கட்டி! நீ என்ன செய்யப்போறே?" என்று கேட்டேன்.

"தந்திக் கம்பியை அறுத்துத்தான் இவுங்கெல்லாம் ஜெயிலுக்குப் போனாங்களாம்! நானுந்தான் 12 வருசமா கதிர் அறுக்கிறேன்; ஒரு குழி நிலமாவது எனக்கு சொந்தமா கொடுக்கறாங்களா, யாராவது? தந்திக் கம்பியை அறுத்தவுங்களுக்கு கதிர் அறுக்கத் தெரியாதே! உழத் தெரியாதே! அவுங்களுக்குமட்டும் 5 ஏக்கர் நிலம் கொடுக்கி

தாங்களே என்? அதனாலே இனிமே தந்திக்கம்பியைத் தான் அறுக்கப்போறேன்!" என்று சொல்லிக்கொண்டே நடக்க ஆரம்பித்தான்.

"அப்பா மண்ணாங்கட்டி! இங்கே வா! போகாதே; அப்போது அறுத்த தந்திக் கம்பி வேறே! இப்போ இருக்கிறது வேறேயப்பா! இதை அறுத்தா உனக்கு நிலம் குடுக்கமாட்டாங்க! உதைதான் குடுப்பாங்க! இப்போ இருக்குதே, இது பட்டேல் தந்திக்கம்பி, தெரியுமா" என்று பயமுறுத்தினேன்.

"அதெல்லாம் முடியாது! உங்களுக்கு என்மேலே பொறாமையோ? பாருங்களேன், 5 ஏக்கர் வாங்குறேனா, இல்லையான்னு!" என்று சொல்லிக் கொண்டே ஓட்டம் பிடித்து விட்டான்!

கறுத்த உருவம்; நடுத்தரமான உயரம்; கொஞ்சம் பரட்டைத் தலை; வலது கையிலே காந்தியார் உருவத்தை பச்சை குத்திருப்பான்! யாராவது கண்டால் புத்தி சொல்லுங்கள்! பாவம்! நல்லவன்தான்! ஏமாற்றத்தால் இந்தப் புத்தி ஏற்பட்டிருக்கலாம்! அவன்மேலும் அதிகத் தப்பு இல்லையே! நடக்கிறதும் அப்படித்தானே இருக்கிறது?

★

## 2. அரச மரத்தைச் சுற்றிவந்து அடிவயிற்றை—

கனம் ஆர். கே. ஷண்முகம் அவர்கள் தமிழ் நாட்டுக் கலைச் செல்வங்களையெல்லாம் வீணாக டில்லியில் வாரி இறைக்கிறார்!

பட்ஜெட் விவாதத்தின் போது, 'கிராமப் புனருத்தாரண வேலை ஒன்றுமே நடக்கவில்லையே' என்று ஓர் உறுப்பினர் புகார்செய்தார். "அதற்குள்ளாக அவசரப்படுகிறீர்களே! சமீபத்தில் தானே அதிகாரத்தை ஏற்றுக் கொண்டோம். அரச

மரத்தை மூன்று சுற்று சுற்றிவிட்டு கர்ப்பம் தரித்திருக்கிறதா என்று அடிவயிற்றைத் தடவிப்பார்க்கும் பெண்மணியைப் போல அவசரக் குடுக்கைகளாக இருக்கிறீர்களே! சற்றுப் பொறுங்கள்," என்று பதில் கூறினார்.

"முதலாளி மாதுமட்டும் இதற்குள்ளாக கர்ப்பந்தரித்து விட்டாளே, அது எப்படி?" என்று கேட்டார் விடாக் கண்டரான உறுப்பினர்.

நல்ல வேளையாக டாக்டர் லட்சுமணசாமி முதலியார் டில்லி சட்டசபையில் இல்லை! பலே நிபுணர், இந்தத் துறையில்! ஆனால் இங்கே சிக்கிக்கொண்டு விட்டார். அங்கே மட்டும் இருந்திருந்தால் உடனே ஓடிப்போய் நிதி மந்திரியின் வயிற்றைத் தடவிப்பார்த்திருப்பார்! நிதி மந்திரியார் ஒரு முதலாளி! அவர் கர்ப்பம் கலைந்திருக்கிறதா இல்லையா, என்பதை டாக்டர்தான் கூறவேண்டும்!

முதலாளி மாது ஒரு புறமிருக்கட்டும். ஆகஸ்ட் 15-ல் அரசமரத்தைச் சுற்ற ஆரம்பித்தார்கள், காங்கிரஸ் தலைவர்கள். அவர்களைத் தொட்டுத் தாலிகட்டிய (நடந்தது அமெரியாதைக் கல்யாணம் என்பதனால்) பிரிட்டிஷ் கணவன் கப்பலேறி விட்டான்! மணமக்கள் ஒருவரையொருவர் விட்டுப் பிரிந்து ஏழுமாதங்களுக்கு மேல் ஆகிறது! ஏழு மாதமாக அரசமரத்தைச் சுற்றி வந்தும் கர்ப்பந்தரிக்கவில்லை! ஆகையால் அந்த முறையைக்கைவிட வேண்டும், புத்திசாலிப் பெண்ணாக இருந்தால்! கர்ப்பந்தரிக்காததைத் தெரிந்தும்கூட அரசமரத்தையே சுற்றிக்கொண்டிருந்தால் அவளுக்கும் செக்கு மாட்டுக்கும் வித்தியாசந்தான் என்ன?

'முதலாளி மாது தான் கர்ப்பந்தரித்து விட்டதாக நினைத்திருக்கிறாள்! ஆனால் கருகலைந்து விட்டது' என்கிறார் பிள்ளைப்பேறு டாக்டர் ஆர். கே. ஷண்முகம்! கரு கலைந்துவிட்டதா இல்லையா என்பது உங்களுக்கும் எனக்கும்தெரிந்ததுதானே! உலகப்போருக்குப்பிறகு பல முதலாளி சிசுக்கள் பிறந்துவிட்டன. தாயாரோ இளமை மாறாமலிருக்கி

றாள்! 'காங்கிரஸ் தங்க பஸ்பம்' சாப்பிட்டுக்கொண்டேயிருக்கிறாள்! மேனி மினுமினுப்புடன்! 18 வயதுபெண்மாதிரியே! நடமாடும் தங்கப்பதுமை போலிருக்கிறது! பிரிட்டிஷ் கணவன் போய்விட்டால் பரவாயில்லையென்று அமெரிக்கனைப் புதுக் கணவனாகப் பெற்றிருக்கிறாள். (பிள்ளைப்பேறுக்காக ஒரு பெண் தன் கணவனின் சகோதரனையும் கூடச் சேரலாம், என்பது யாக்ஞவல்கியர் கூற்று! (தவறு என்று நிரூபித்தால் நிபந்தனையற்ற மன்னிப்புக்கேட்டுக்கொள்ளத் தயார்) ஆரிய தர்மத்தை முதலாளி மாது பின்பற்றுவதில் ஆச்சரியமென்ன?

முதலாளி மாதுவின் கர்ப்பம் சிதைந்துவிட்டது என்று கூறுவது தவறு. கம்யூனிஸ்ட் கால் உதைக்கே தப்பித்துக் கொண்டிருக்கிறதே அந்தக் கரு! ஆர். கே. எஸ். பூச்சாண்டிக்கா கலைந்து விடப் போகிறது? கலைந்துவிட்டதுபோலப் பாசாங்கு செய்கிறாள், முதலாளி மாது! அது கலையவுமில்லை; கலையும் வழியையும் காணோம். பிரபல பிரசவ டாக்டர்களான ஆர். கே. எஸ்ஸும், சர்தார் பட்டேலும் பக்கத்திலேயே இராப் பகலாகக்காத்திருக்கும்போது அவள் கர்ப்பம் சிதையுமா? காங்கிரஸ் திட்டம் என்னும் 'பென்சிலின்' சஞ்சீவி மருந்து கையிலிருக்கும் போது முதலாளி மாதின் வயிற்றுக் கருவுக்கு எந்த ஆபத்தும் வராது!

ஆனால் பசியும், வறுமையும், வேலையின்மையும், சுரண்டலும், அந்நியன் ஆதிக்கமும் அதிகமானால் என்னவாகும்? தாய் பிழைப்பதேகஷ்டமாகிவிடும்! உலகத்திலேயே பிரசவ மரணம் இங்குதான் அதிகம் என்பதையும் ஞாபகமூட்டி வைக்கிறேன்!

அரசமரம்— அடிவயிறு— கர்ப்பம் — சிதைவு—காங்கிரஸ் பென்சிலின்— பிரசவ டாக்டர் பட்டேல்!

இவைகளல்ல, நீங்கள் கவனத்தில் வைக்கவேண்டியவை. சாரத்தை மட்டும் எடுத்துக் கொள்ளுங்கள்.

# V. உளுந்து

## 1. பண முடிச்சு பத்திரம!

சிவகெங்கை எஸ்டேட்டிலுள்ள சுமார் 600 கோவில்களையும் தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் திறந்து விடுவதென்று சிவகங்கை மன்னர் முடிவு செய்திருப்பதாகச் செய்தி கிடைத்திருக்கிறது. நல்ல முடிவுதான்! திராவிடக் குறுநில மன்னர் ஒருவர் துணிவுகொண்டு இம்மாதிரி முடிவு செய்திருப்பது தமிழர்களுக்கே பெருமை என்று கூடக் கூறலாம்.

சிவகங்கைப் பகுதியிலுள்ள தாழ்த்தப்பட்டவர்களுக்கு ஒரு வார்த்தை! "கோவிலுக்குள் நுழையப் போகிறீர்களா? போங்கள்! கோவிலை "விபசார விடுதி" என்று கூறியிருக்கிறார், தோழர் காந்தியார். "கள்வர் குகை" என்று கூறியிருக்கிறார், ஏசுநாதர். "அறிவைப் பறிமுதல் செய்யும் ஆரியர் கோட்டை," என்கிறார், பெரியார். ஆகையால் உங்கள் அறிவு ஜாக்கிரதை! பணமுடிச்சு ஜாக்கிரதை! கிண்டி குதிரைப் பந்தயத்திற்கு சென்னையிலிருந்து ரயில் வழியாகப் போகிறவர்கள், "ரிட்டர்ன் டிக்கெட்" வாங்கிப் போவதுண்டு. ஏன் தெரியுமா? திரும்பி வர வேண்டுமே, அதற்காக. அதைப்போல நீங்களும் உங்கள் மணிபர்ஸை (ஒரு வேளை இரண்டொருவருக்கு இருந்தால்) வீட்டில் வைத்து விட்டுப் போங்கள்! பண முடிச்சும் பத்திரம்! திருடர்கள் கத்திரித்து விடுவார்கள்! அதிகாரத் திருடர்கள் சேட்டு வாங்கி விடுவார்கள்!

அது மட்டுமல்ல; பெரிய பெரிய புத்திசாலிகளையெல்லாம் மண்டியிடச் செய்யும் இடம், அது! உலகப் புகழ்பெற்ற அரசியல் நிபுணர்களைக் கூடத் தலை வணங்கச் செய்யக் கூடிய திமிங்கிலங்கள் உண்டு, கோவிலுக்குள்ளே! உஷார்!

ஏமாந்து விடாதீர்கள்! பல பணக்காரர்களை ஓட்டாண்டி யாக்கி யிருக்கிறது, கோவில்!

மளமள வென்று எல்லா இடங்களுக்கும் போங்கள்! கண்காட்சிகளைப் பார்ப்பதுபோல எல்லாச் சிலைகளையும், வாகனங்களையும், தட்டு முட்டு சாமான்களையும் பார்த்து விடுங்கள்! சிலைகளையும் வாகனங்களையும் தொட்டுப் பார்க்க வேண்டுமென்று ஆசையிருக்குமே! இயற்கைதானே! ஆஹா! பேஷாய்த் தொட்டுப் பாருங்கள்! பரவாயில்லை! ஆனால் எங்கேயும் அசுத்தப்படுத்தாதீர்கள்! அந்த வேலையை மடப்பள்ளிப் பெருச்சாளிகளுக்கும் அர்ச்சகப் பூனைகளுக்குமே விட்டு விடுங்கள்! உங்களுக்குத் தெரியாத எதையாவது கூறினால் மானமற்ற இதர மக்கள் செய்வது மாதிரி ஊமையாய் நிற்காமல், 'தமிழிலே சொல்லித் தொலை யேண்டா! அதுதானே முதலாவது பாஷை என்று மந்திரி அவனாசிலிங்கஞ் செட்டியார் கூட உத்தரவு போட்டிருக் கிறார்,'' என்று கன்னத்தில் அறைவது மாதிரிக் கேளுங்கள்

கடைசியாக ஒரு விஷயம்! ஒரே நாளில் எல்லாவற்றை யும் பார்த்துவிட்ட பிறகு, மீண்டும் சும்மா—சும்மா, உள்ளே போகாதீர்கள்! "விபசார விடுதியில் நமக்கென்ன வேலை" என்று காந்தியார் கேட்பார்.

இதெல்லாம் தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் தரும் எச் சரிக்கை. இனி, பரந்த மனங்கொண்ட ராஜாவுக்கும் ஒரு விஷயம் கூறவேண்டி யிருக்கிறது.

"ராஜா அவர்களே! தாழ்த்தப்பட்டவர்களை நீங்கள் உயர்த்தி விட்டீர்கள், கோவிலைப் பொறுத்த மட்டிலாவது. இனித் தங்களை "உயர்த்திக்" கொள்ள வேண்டாமா? எப் போது? நாளையே புறப்படுங்கள்! உற்றார், உறவினரோடு மூல விக்கிரகம் உள்ள இருட்டறைக்கும் போங்கள்! போகும்போது "எலெக்டிரிக் டார்ச்" எடுத்துச் செல்லுங் கள், மறந்துவிடாமல்! கீழே அர்ச்சகர் வெற்றிலை பாக்குத்

தப்பியிருப்பார்! மூலையில் வாழைப்பழத் தோல் கிடக்கும்! சரப்பாம் பூச்சிகள் நடமாடும். பெருச்சாளிகள் சப்ளாங்கூடு (சடுகுடு) விளையாட்டு விளையாடும்! கையில் விசிறியும் இருக்கட்டும்! வேர்த்துக் கொட்டும்! மூலவர் மீதுள்ள துணியைத் தொட்டு விடாதீர்கள்! ஜாக்கிரதை! ஏன் தெரியுமா?'' "தீட்டுப்பட்டு விடும்'' என்பார், அர்ச்சகர். சோப் போட்டுக் கையைக் கழுவ வேண்டுமே, தாங்கள் என்கிறேன், நான்!

அதோ மூலையில் இருக்கிறதே, "டிபன் காரியர்'' அதைத் திறந்து பார்த்து விடாதீர்கள்! அதில் அர்ச்சகர் திருடி வைத்திருக்கும் உணவுப் பொருள்கள் இருக்கின்றன! பிறகு தங்களுக்கு அவர் மீது கோபம் வரும்! அடே மறந்து போனேனே! அதைத் தொடுவதற்கு விடுவாரா, அர்ச்சகர்?

இந்த மாதிரி சத்தியாக்கிரக மேற்பார்வை முடிந்து வீட்டுக்கு வந்ததும் தங்களுக்கு ஒரு மாதிரியான துணிவும் அறிவும் உதயமாகும். உடனே தங்கள் சுற்றத்தாரில் ஒருவரையே அர்ச்சகர் வேலையில் போடுங்கள்! தமிழிலேயே அர்ச்சனை செய்யச் சொல்லுங்கள் (தாய் மொழி முதலாவது மொழி என நம் மந்திரியார் கூறியிருப்பது நினைவிருக்கட்டும்)

இவைகளையெல்லாம் செய்து விட்டீர்களானால் கோவிலைப் பொறுத்த வரையிலாவது தாங்கள் ஓரளவு சம உரிமை பெற்றவர்கள் எனக் கூறுவேன். அது வரையில் தாங்களும் ஒரு வகையில் தீண்டப்படாதவர் தானே!

★

## 2. மதயானை வருகிறது!

"அப்பா! மதம்பிடித்த யானை வருகிறதாமே! வாங்களேன் போவோம், வேடிக்கை பார்க்க! நான் பார்த்ததே இல்லையே, மதம்பிடித்த யானையை! வாங்க! வாங்க! சீக்கிரம் வாங்க!''

இப்படி ஒரு சிறு பிள்ளை கூடக் கூப்பிட மாட்டான்.

யானை பார்த்திராதவர்கள் பலர் இருக்கலாம். அவர்கள் யானை வந்தால் கட்டாயம் பார்த்தே தீருவார்கள். முன்பு பார்த்தவர்களே கூட மீண்டும் பார்க்கத்தான் ஆசைப்படுவார்கள்!

யானையிலேயே வெள்ளையானை வருகிறது என்றால், நீங்களும் நானும் கூடத்தான் பார்க்க ஆசைப்படுவோம்! காரணமென்ன? யானை பூனையைப் போல நாள்தோறும் வீட்டில் பார்க்கப்படும் விலங்கல்ல. அதன் அமைப்பே ஒரு அலாதி! ஆசையால்தான் பார்க்க ஆசைப்படுகிறோம். யானையின் நிறம் சாதாரணமாகக் கறுப்பு. ஆதலால் வெள்ளை யானையென்றால் இன்னும் ஆச்சரியமல்லவா? இந்திரனிடத்தில் மட்டும் (இது மேல் உலக விஷயம்! என்னைப் போல அடிக்கடி பார்க்கிறவர்கள் மட்டுந்தான் நம்புவார்கள்!) ஒரே ஒரு வெள்ளை யானை இருப்பதாகக் கதை! போன வருஷத்தில் பர்மாக் காட்டிலிருந்து ஒரு வெள்ளை யானையைப் பிடித்து வந்ததாகப் பத்திரிகையில் படித்தேன். நீங்களும் படித்திருக்கலாமே! ஒருக்கால் இந்திரன் யானையேதான் பர்மாவைப் பார்த்து விட்டுப் போகலாம் என்று கருதி வந்ததோ என்னவோ? யார் கண்டது? நாரதர் அடிக்கடி வந்து போனதாக (போவதாக அல்ல) படிக்கிறோமே! (போஸ்ட்மென் தந்தி கொண்டு வருவதுபோல!) ஏன் ஐராவதம் மட்டும் ஒரு 'விசிட்' ஜாலியாக வந்துவிட்டுப் போகக் கூடாது?

வெள்ளையானை யென்றாலே ஆச்சரியப் படும்போது சிவப்பு யானை வந்திருக்கிறது என்றால் எத்தனைப் பேர் ஓடுவோம்? அபூர்வப் பிறவிகளைப் பார்க்க வேண்டும் என்பதில் மனிதனுக்கு ஆசையிருப்பது இயற்கைதானே!

ஆனால் ஒரு மதம்பிடித்த யானை வருகிறது என்று கேள்விப்பட்டால் என்ன செய்வீர்கள்? கதவைத் தாளிட்டுக்

கொள்வீர்கள், வீட்டிலுள்ளவர்கள். ஓட்டமாகஓடி ஒளிந்து கொள்வார்கள், தெருவில் போகிறவர்கள். சுட்டுவிட முயற்சிப்பார்கள், ஆட்சிப் பொறுப்பை ஏற்றுள்ளவர்கள்.

மனிதர்களிலும் கருப்பு யானை, வெள்ளை யானை மதயானை என்ற பல பிரிவுகள் உண்டு. யானையை மதம் பிடிக்காமல் வைத்திருப்பது தான் கஷ்டமே யொழிய மதமேறும்படி செய்வது சர்வசாதாரணம் என்பார்கள், யானைப் பாகர்களைக் கேட்டால்! செல்வமாக வளர்க்கும் யானைக்கு மதம்பிடித்து விடுமேயானால் அதன் பாகன் அதைத் தட்டியா கொடுப்பான்? இல்லவே யில்லை. தப்பித்துக் கொள்ளத்தான் பார்ப்பான்! ஆனால் முதலில் அந்த மதயானை தனக்குத் தீனி கொடுத்து குளிப்பாட்டி வளர்த்து வந்த பாகனைத்தான் கொல்லும்! அப்படித்தான் மத மனிதனும்!

மனிதனுக்கு மதம் பிடிப்பதும் இயற்கை (யானையைப் போலவே-) மதம் பிடிக்காமல் வைத்திருப்பதுதான் கஷ்டம். ஒரு குழந்தையை 'பீடி' குடிக்கப் பழகாமல் வளர்ப்பதுதான் கஷ்டமே தவிர, பீடி குடிக்கக் கற்றுக் கொடுப்பது கஷ்டமே அல்ல. அது அவசியமுமல்ல; தானாகவே வந்துவிடும், மற்றவர்களைப் பார்ப்பதனால்.

"தம்பீ! அவன் கிருஸ்தவன்! இவன் முஸ்லிம்! அவன் கீழ் ஜாதி! இவன் மேல் ஜாதி! என்று சிறு பிள்ளைகளுக்கு ஊட்டுவது இருக்கிறதே, அது மிக மிகச் சுளுவானது. இதற்கு ரொம்ப புத்தி வேண்டியதில்லை. படிக்காத பெண்களைப் பேய் பிடித்து ஆடும்படி செய்கிறான் பூசாரி. அவன் என்ன ரொம்ப திறமைசாலியா என்ன? "பேயாவது பிசாசாவது, எல்லாம் பொய்,'' என்கிறானே, அவன்தான் திறமைசாலியாய் இருக்க வேண்டும்.

சில பத்திரிகாசிரியர்கள் இருக்கிறார்கள். இவர்கள் பூசாரிப் பிறவிகள். கையில் உடுக்கை இருப்பதற்குப் பதிலாக தவறிப் போய் பேனா வைத்திருக்கிறார்கள்! இவர்கள் மதப்

பேயை வரவழைப்பதில் பலே கைகாரப் பேர்வழிகள்! ஜாக்கிரதை! அந்தப்பக்கம் போகாதீர்கள்! மற்றவர்களையும் போக விடாதீர்கள்!

இதோ! மதயானை ஓடி வருகிறது! நாதுராம் வினாயக் கோட்ஸே வருகிறது! அதை அவிழ்த்து விட்ட கூட்டம் கோவில் கோபுரத்தில் நின்று கொண்டு கை கொட்டிச் சிரிக்கிறது! உஷார்! உஷார்! கதவுகளை மூடுங்கள்! மதயானை சந்திலோ பொந்திலோ மறையுமேயானால் பேலீசாரிடம் காட்டிக் கொடுங்கள்! அவர்களிடம் துப்பாக்கி இருக்கிறது! எப்படியாவது அதைச் சுட்டு வீழ்த்தி விடுவார்கள்! ஆனால் நீங்கள் மட்டும் ஜாக்கிரதை! அதோ வருகிறது! எதிரே வந்த 7 வயதுக் குழந்தையை (தன்னை வளர்த்த பாகனின் செல்வத்தை) மிதித்துக் கொன்றுவிட்டு ஓடி வருகிறது! உஷார்! உஷார்!!

★

## 3. ஆச்சாரியாரும் அல்லாசாமி பண்டிகையும்

'குலாம் காதருக்கும் கோகிலாஷ்டமிக்கும் உள்ள சம்பந்தம் போல' என்று இனிமேல் பரிகாசத்துக்குக்கூட யாரும் சொல்லக் கூடாது! தெரியுமா? எங்களூர் குலாம் காதர் இனி கோகிலாஷ்டமி கொண்டாடுவதாக முடிவுசெய்து விட்டாராம்!

"என்னய்யா திடீரென்று இப்படி மாறிவிட்டீர்?" என்று கேட்டேன்.

"மாறுவது ஒன்றுமில்லை. உங்களில் எத்தனைபேர் நாகூருக்கு மொட்டையடித்துக் கொள்கிறார்கள்? எத்தனை பேர் மசூதி வாசலில் காத்து நின்று குழந்தைகளுக்கு ஊதிக்கொள்கிறார்கள்? எத்தனைபேர் தர்காவுக்குப் போய் சர்க்கரை போடுகிறார்கள்? எத்தனைபேர் மயில் தோகையால் மந்திரித்துக் கொள்கிறார்கள்? எத்தனைபேர் அல்லாசாமி

பண்டிகையில் வேஷம் போட்டு ஆடுகிறார்கள்? நாங்கள் மட்டும் ஏன் உங்கள்பண்டிகைகளைக் கொண்டாடக்கூடாது? உரிமை என்பது பொது தானே?" என்று கேட்டார் என் நண்பர்.

"எனக்கு எந்தப் பண்டிகையும் கிடையாதய்யா! பார்ப்பார பண்டிகைகள் என்று சொல்லுங்கள்!" என்றேன்.

"எப்படியோ வைத்துக்கொள்ளுங்கள். நான் இனிமேல் தீபாவளிகூட கொண்டாடப்போகிறேன். அதிலே தப்பென்ன? ஹிந்து—முஸ்லிம் ஒற்றுமை வேறு எப்படித் தான் ஏற்படும்? சரஸ்வதி பூஜைகூட செய்யப்போகிறேன், தெரியுமா? நான் ஒரு தேசிய முஸ்லிம். இனி எல்லா முஸ்லிம்களுமே தேசிய முஸ்லிம்களாவதைத் தவிர வேறு வழியில்லை. எங்கள் ராஜாஜி என்ன சொல்கிறார் தெரியுமா? என்று மார்பை நிமிர்த்திக் கேட்டார்.

"என்ன சொல்கிறார், எனக்குத் தெரியாதே," என்று கேட்டேன்.

"கிறிஸ்துவப் பண்டிகைகள், முஸ்லிம் பண்டிகைகள், இந்துப்பண்டிகைகள் எல்லாமேஎல்லோருக்கும்மகிழ்ச்சி தரும் சந்தர்ப்பங்கள். அது அவர்கள் பண்டிகை, இது இவர்கள் பண்டிகை என்கிறவித்தியாசமில்லாமல் எல்லா வற்றிலும் எல்லாரும் கூடியமட்டில் கலந்து கொண்டு நம் நாட்டில் மகிழ்ச்சியடைந்து வருகிறோம். இதுவே நல்லமுறை,"

என்கிறார், எங்கள் ராஜாஜி! இது அவருடைய சொந்த வாசகம். பத்திரிகைக்கு எழுதிய கட்டுரையில் கண்டபடியே சொல்கிறேன்."

"இந்துக்கள்தான் வேளாங்கண்ணிக்கும் (கிருஸ்துவ க்ஷேத்திரம்) நாகூருக்கும் போகிறார்களே ஒழிய முஸ்லிம் களில் யாரும் ஸ்ரீரங்கம் சுவர்க்க வாசலுக்கோ, சிதம்பரம் ஆருத்ரா தரிசனத்துக்கோ, காஞ்சிபுரம் கருடசேவைக்கோ

வருவதில்லையே! இந்துக்களில்கூட யார் அல்லாசாமி பண்டிகையில் வேஷம் போட்டுக் கொள்கிறார்கள்? ஆச்சாரியாரா போட்டுக்கொள்கிறார்? அல்லது அவர் இனத்தில் யாராவது நாகூருக்கு மொட்டையடித்துக் கொள்கிறார்களா? எழுதப் படிக்கத் தெரியாத திராவிட இன இப்பந்திகள்தானே இப்படி வெறி பிடித்து அலையுதுகள்? என்று கேட்டேன்.

" திராவிடனோ, ஆரியனோ, அதெல்லாம் எனக்குத் தெரியாது. இனிமேல் முஸ்லிம்கள் பழையமாதிரியே இருக்கப்போவதில்லை. திடீரென்று ஒரு நாளைக்கு எல்லோரும் பிராமணர்களாக ஆனாலுங்கூட ஆகிவிடுவோம். இதோ, ஒரு உதாரணம் கூறுகிறேன் கேளுங்கள். சென்னை விவேகானந்தா கல்லூரியில் ஷாபி முகமது சாகிபு சமஸ்கிருதத்தின் உயர்வைப்பற்றி பேசியிருக்கிறாரே, படித்துப்பார்த்தீர்களா? "சமஸ்கிருத உச்சாரணத்தின் அழகு, அர்த்த புஷ்டி முதலியவைகள் வேறு எந்தபாஷையிலும் இருக்க முடியாதென்றும், குறுகிய நோக்கத்தைவிட்டு எல்லோரும் சமஸ்கிருதம் கற்கவேண்டும் என்றும்" பேசியிருக்கிறாரே! இனிமேல் என் பிள்ளையைக்கூட சமஸ்கிருதம் படிக்க வைக்கலாமென்றிருக்கிறேன். 'குலாம் காதரும் கோகிலாஷ்டமியும்' என்று யார்சொன்னாலும் இனிமேல் என்னால் பொறுக்க முடியாது. "ஷாபி முகமதும் சமஸ்கிருதமும்" ஒன்று சேரும்போது, ஏன் நான் கோகிலாஷ்டமி கொண்டாடக் கூடாது? அதிலும் தேசீய முஸ்லிமாயிருக்கும்போது இந்து மார்க்கத்தை ஏன் வேறாகக் கருதவேண்டும்? என் பையனைக் கூட வேத பாடசாலைக்கு அனுப்பிவிடக் கருதியிருக்கிறேன்," என்றார் நண்பர் குலாம் காதர்.

" ஆஹா! பேஷாகச் செய்யுமய்யா! விபூதிப்பட்டை வேணுமானாலும் அடித்துக் கொள்ளும்! உம்இஷ்டத்தை நான் எப்படித் தடுக்கமுடியும்? ஆனால் ஷாபி முகமது சமஸ்கிருதத்தின் உயர்வைப்பற்றிக் கூறினாரே, அவர் எத்தனை பாஷை படித்திருக்கிறார்? அதைமட்டும் சொல்

னுமே! தன்னை எல். டி. சாமிக்கண்ணு பிள்ளையென்று நினைத்துக்கொண்டிருக்கிறாரோ? சரி! அவருக்கு காங்கிரஸ் சர்க்காரில் ஏதாவது நல்ல வேலை போட்டுக் கொடுக்கச் சொல்லுமே! அவ்வளவுதான்! பணமிருந்தாலும் ஒரு பதவியும் இருந்தால் ஒன்றுக்கொன்று எவ்வளவு ஒத்தாசையாயிருக்கும்?

இந்த உரையாடலுக்குப் பிறகு எனக்கு ஒருவிதமான மனத்தெளிவு ஏற்பட்டது. பண்டிகைகளைக் கொண்டாடுவதில் வேற்றுமை பாராட்டக் கூடாதா? என்று எனக்குள்ளே சொல்லிக்கொண்டேன். பின் வரும் காட்சிகளைப் பார்க்கவேண்டும் என்பது என் ஆசை:—

1. உஸ்மான் சாகிபும் உபயதுல்லாவும் விநாயக சதுர்த்தி அன்றைக்கு ஆளுக்கொரு களிமண் பிள்ளையாரை வாங்கி பலகையில் வைத்துக்கொண்டு கடைத் தெருவில் போவது.

2. ஆச்சாரியாரும் அல்லாடி அய்யரும் ஆளுக்கொரு துருக்கி குல்லாய் அணிந்து கொண்டு, இடுப்பில் லுங்கி அணிந்து, மண்டியிட்டுக் கொண்டிருப்பது.

3. ரெத்தினசாமியும் ரோச் விக்டோரியாவும் உச்சிக் குடுமி வைத்துச் கொண்டு, மார்பில் பூணூல் அணிந்து பஞ்சகச்சம் கட்டி, நெற்றியில் திருமண் தரித்து, அக்குளில் விசிறியுடன் கை கோர்த்துக்கொண்டு "பச்சைமா மலைபோல் மேனி பவளவாய் கமலச் செங்கண் அச்சுதா அமரர் ஏறே,......" என்று திருவாய்மொழி பாடிக் கொண்டு பார்த்தசாரதி சுவாமி ஊர்வலத்தின் முன்பு செல்வது!

கனம் ஆச்சாரியார் புண்ணியத்தில் இம்மாதிரி யெல்லாம் நடக்குமேயானால் இந்து—முஸ்லிம் ஒற்றுமையை உடைக்க அமெரிக்க அணுக்குண்டால்தான் முடியுமா?

★

## 4. கும்பே சிவம்! வில்லே சைவம்!!

ஒரு அற்பப் பூச்சியைக் கூடக் கொல்லத் துணியாத ஜைனமார்வாடிகள் ஏழைகளின் இரத்தத்தை மட்டும் (தோலையும் எலும்பையும் பாதிக்காதபடி) உறிஞ்சிக் குடிப்பார்கள்! இது ஒரு வகையான ஜீவகாருண்யம்!

இதற்கிணையான அறிவு மதமே இல்லையென்பார்கள், சில வைதீக முஸ்லிம்கள் ஆனால் பஞ்சாவும், சந்தனக் கூண்டும், மாரடியும், நாகூர் மொட்டையும், முகமூடியும் இருக்லாமா என்றால் 'கொஞ்சங் கொஞ்சமாகத்தானே இவைகளைச் சரிபண்ண முடியும்' என்பார்கள்!

வலது கன்னத்தில் அடித்தால் இடது கன்னத்தைக் காட்டு என்று ஏசுநாதர் கூறுகிறாரே! நீங்கள்தானே முதன் முதல் ரிவால்வரும், அணுக்குண்டும், விஷப் புகையும் கண்டு பிடித்தீர்கள்? இந்த விஷயம் ஏசுநாதருக்குத் தெரியுமா, என்று கேட்டால், அவர் சொல்லுகிறபடியெல்லம் நடக்கமுடியுமா? பைபிள் ஞாயிற்றுக்கிழமைக்கு மட்டுந்தானே! என்பா கள்!

பிரம்மத்தை உணர்ந்து மும்மலத்தை நீக்கியவர்தானே பிராமணன்? வெங்காய சாம்பாரும்; பாதிவேக்காடு முட்டையும், தின்றுகொண்டு, நீச பாஷையால் வயிறு வளர்ப்பவன் கூடவா பிராமணன்? என்று கேட்டால், 'நீங்கள் மு டாள் தனமாக எங்களைப் பிராமணன் என்று ஏன் சொல்கிறீர்கள்' என்று தங்கள் 'கிராப்' தலையை ஆட்டிக்கொண்டே கேட்கிறார்கள்!

லட்சக்கணக்கான இத்தாலிய நாணயங்களைக் கையாண்டுவிட்டு, ஆள் மாறாட்டம் செய்து தப்பிர்யாட முயபற்சித்ததாக மார்ச் 9-ந் தேதிடன்று சிப்பிகோ என்ற இத்தாலிப் பாதிரியாரையும், பயூலியோ கைடெட்டி என்ற பாதிரியாரையும் ரோம் போலீசார் கைது செய்திருக்கிறார்களாம்!

பாதிரியார் என்றால் நம் ஊர்புரோகிதர் போன்றவர்கள்! மோக்ஷ உலகத்திற்கு குறுக்கு வழி காட்டுபவர்கள். கடவுளுக்கு மெய்காப்பாளர்கள்! இவர்கள் பணத்தைச்கையாண்டு விட்டார்கள் என்றால் சொந்த உபயோகத்திக்காக இருக்கவே இருக்காது! ஏதாவது ஈஸ்வரகைங்கர்யத்துக்காகத்தான் இருக்கும்! மாணிக்கவாசகரைப் போல! ராமதாஸரைப் போல! பாதிரிகளைப் போலீசார் கைது செய்தல் அடுக்காது! போகட்டும், நாஸ்திகர்கள்! நம் ஊர் போலீசாராய் இருந்தால் ஒரு பிராமணனோ, சந்நியாசியோ, என்ன செய்தாலும், 'போகட்டும் பாவம்! அவர்களைத் தொடக்கூடாது!' என்று சும்மா இருந்துவிடுவார்கள்! அத்தனை பக்தி!

சைவர்கள் என்று (சைபர்கள் அல்ல) ஒரு திருக்கூட்டத்தார் இருக்கிறார்கள். இவர்கள் விபூதிப் பூச்சையும், உருத்திராக்க அலங்காரத்தையும் பார்த்தால் சாக்ஷாத் சிவபெருமானைப் போலவே (சினிமாவில் பார்க்கிறோமே, அவரைத்தான் சொல்கிறேன்) இருக்கும்! ஒரு சிலர் தவிர மற்றவர்கள் நடத்தையோ! அடாடா, வெளியே சொல்வானேன்?

சைவர்களுக்குத் தலைவர்தான் மடாதிபதி. இந்த அவதார மூர்த்திகளின் சைவத் தொண்டு இருக்கிறதே, கிருஷ்ண லீலைகளைக் கூட மிஞ்சியது! 'எத்தொழிலைச் செய்தாலும் ஏதவத்தைப்பட்டாலும், முத்தர் மனமிருக்கும் மோனத்தே,' என்பது ஒன்றே அவர்கள் நடத்தைக்கு உள்ள சுமை தாங்கி.

15-2-48-ல் ஒரு நிகழ்ச்சி. ஒரு ஆதீனத்தில் குத்தகை ஏலம் நடைபெற்றதாம் பிறகு நடுப் பகல் உணவு; ஒரேவகை உணவுதான்; ஆனால் இரண்டு தனிப் பந்திகள். முதலில் 100 பேர் (தம்பிரான் உட்பட) சாப்பிட்டு முடிந்தபின் அடுத்த பந்தி நடந்ததாம் அதில் மேளம்வாசிப்பேர் போன்ற தொழிலாளர்கள் மட்டுமாம்.

இவர்களும் சேர்ந்து உட்கார்ந் திருந்தால் என்ன என்று கேட்கலாம். புலியும் ஆடும் எப்படிச் சேர்ந்து நிற்க முடியும்? தம்பிரான், புலி; தொழிலாளர் ஆடு!, ஆனாலும் தம்பிரான்கள் உபதேசிப்பதோ, (அப்படி யொன் றிருக்குமேயானால்) 'அன்பே சிவம்,' என்பது. இது பழைய சைவமாயிருக்கலாம்!

இன்றைய சைவம் என்ன தெரியுமா? வில்லே சைவம்! அதிலிருந்து வீசும் அம்பே சிவம்! ஆகையால் தான் என்னைப் போன்ற ஆயிரக்கணக்கான இளைஞர் கள் அந்த அம்பிலிருந்து தப்பியோடி விட்டனர்

சுவாமிகாள்! சௌக்கியந்தானே! சைவம் உள்ள வரையில் தங்கள் பாடு யோகந்தான்! நித்திய போகந்தான்! ஆனாலும் ஓய்வு நேரத்தில் யோகாப்பியாசம் இல்லாத வேளையில் கோடரி, மண் வெட்டி போன்றவைகளைக் கைபாண்டு பழகிக் கொள்ளுங்கள். வருங்காலத்தில் இவை கள் தான் உங்கள் திருமேனியின் பெரும் பகுதியாகிய திருவயிற்றுக்குச் சோறு போடும்! தாங்கள் இன்று அணிந் துள்ள வேஷங்களை நம்பி யிருக்காதீர்கள்! அவைகள் ஆபத்தான நேரத்தில் மோசம் பண்ணிவிடும்! சிநேகித முறையில் சொல்கிறேன்!

★

## 5. பைப் இல்லா பட்டணம் பாழ்!

"மண் இல்லா மண்டைபாழ், புண் இல்லா உடம்பு பாழ்," என்றார் ஒரு பெருங் கவி. அதாவது, நான்!

(இ—ள்) அதாவது இதன் பொருள்:—களிமண் இல்லாத மண்டை பாழாகும்; ஒரு புண் கூட இல்லாத உடம்பு பாழாகும்!

இந்த அபத்தப் பேச்சு வேண்டாமப்பா, குத்தூசி! மண்டையில் மூளையல்லவா வேண்டும்? உடம்பு நோயற் றல்லவா இருக்கவேண்டும்? என்று கேட்பீர்கள்.

இவ்வாறு கேட்பவர்கள் "நீறில்லா நெற்றி பாழ்" என்று கூறியிருப்பதைக் கவனிக்கவும் 'திருமண் இல்லாத் திருமுகம் பாழ்' என்று ஏன் சொல்லவில்லை யென்பது பற்றி சைவ மெய்யன்பர்கள் ஆராய்ந்து கொண்டிருக்கலாம், வேறு வேலை தெரியாதவர்களாயிருந்தால் !

"டேய் ! குப்புசாமி ! ஏன் நெற்றியில் ஒன்றும் வைக்கவில்லை ? பெஞ்ச் மேல் ஏறு !"

"ஸார் ! விபூதி இட்டிருந்தேன், அழிஞ்சு போச்சு ஸார், வேர்வையினால்"

"அழியாமல் பூசுவதற் கென்னடா அதிகப் பிரசங்கி ? என் நெற்றியைப்பார் !"

இது உபாத்தியாயரின் அறைகூவல் !

"உங்கள் நெற்றியிலும் அழிஞ்சு தான் ஸார் போயிருக்கு ! ஒண்ணுமில்லையே !"

"அடேடே ! ஆமாண்டா ! அதுவா அழியலே ! நான் தான் அழிச்சேன். வரும்போது பிரசிடெண்ட் ராமசாமி நாயுடுவைப் பார்க்க வேண்டியிருந்தது ! அதற்காக அழிச்சேன் ! அது கிடக்கட்டும். இனிமேல் அழியாதபடி பூசிவர வேண்டும், தெரியுமா ?"

"சரிங்க, ஸார் ! அப்படியே ஆகட்டும் !"

"டேப் ! சுந்தரம் ! நீ ஏண்டா திருமண் இடாமல் வந்திருக்கே ? ஏறு பெஞ்ச் மேலே !"

"இட்டேன் ஸார் ! கலைஞ்சு போச்சுங்க"

"கலைஞ்சு போச்சா? போகும்! போகும்! உங்களையெல்லாம் என்ன செய்யணும் தெரியுமா? ......சரி!"

"டேய் சாம்பசிவம் ! நீ என்ன பொ புளை மாதிரி சாந்துப்பொட்டு வச்சிருக்கே ! திருமண்ணாவது, விபூதியாவது இடப்படாதோ ?"

"இது அழியாமலிருக்கு முங்க! அதுக்காகத் தான்."

"அழியாமலிருப்பதற்காக எதை வேணுமானாலும் இட்டுக்கிறதோ? ரொம்ப பேஷ்!"

இந்தமாதிரி சில பள்ளிக்கூடங்களில் ஆசிரியர்கள் தங்கள் புத்தியில் கவனஞ்செலுத்தாமல் மாணவர் நெற்றியில் கவனஞ் செலுத்தி வருகிறார்களாம்! நெற்றியில் எதுவுமில்லாத பையன்களை வீட்டுக்கே அனுப்பி விடுகிறார்களாம்! பெற்றோர்கள் தலையிட்டால் மாணவர் தலை உப்புகிறதா!

"ஆறில்லா ஊருக்கு அழகு பாழ்" என்றார்கள், அந்தக் காலத்தில்; நகரங்களே ஏற்படாத காலத்தில். அது இன்று சரியாயில்லையே! சென்னை நகரத்திலுள்ள ஆறு (கூவம்) இல்லாமலிருப்பதே அழகு என்பதை நானா சொல்லவேண்டு? பெரிய பட்டணங்களில் ஆறு இருந்தால் கூடப் போதாது. குழாய் அவசியம் வேண்டும். அப்போதுதான் வீட்டுக்கு வீடு தண்ணீர் கிடைக்கும் "பைப் இல்லாத பட்டணம் பாழ்" இது சுகாதார சுலோகம்!

பள்ளி ஆசிரியர்கள் நெற்றிக் குறிகளைப் பற்றி இவ்வளவு அக்கரை செலுத்துவானேன்?

ஒரு யோசனை. அழிக்கவே முடியாத வெள்ளைப் பூச்சு வேண்டுமானால், முத்து வெள்ளையை எண்ணெயில் கலந்து கனமாக ஒரு அடி அடித்து விடலாம்! நாமம் போடுவதில் கூட (பணத்தைக் கடனாக வாங்கிக் கொண்டு போடுவதைக் குறிக்கவில்லை!) வார்னிஷ் மூலம் செய்யலாம்! அவசரமாக ஆபீசுக்குப்போக வேண்டியவர்கள் தகரத்தில் வெட்டி வைத்துக் கொண்டு நெற்றியில் வைத்து ஒரு பூச்சுப் பூசுவது நல்ல முறை! மது தாங்கும் மரங்களுக்கு நம்பர் போடுவதுபோல, மதம் கொண்ட மக்களுக்கு இது!

வார்னிஷும் முத்து வெள்ளையும் அழியாமலிருக்கும்! ஆனால் இந்த உடல் மண்ணாகவும் சாம்பலாகவும்

5

போகக் கூடியது என்ற உயர்ந்த தத்துவத்தை ஞாபகப்படுத்தாதே !

பெண்களை ஏன் நாமம்போட்டுக் கொண்டோ விபூதிப்பட்டை அடித்துக் கொண்டோ வரச்சொல்லி பெண் ஆசிரியர்கள் கட்டாயப் படுத்துவதில்லை? பெண்கள் மட்டும் இஷ்டம்போல ஏதாவது ஒரு வர்ணப்பொட்டு இடுவானேன் ? சிவபிரானும், மகா விஷ்ணுவும் பெண்கள் விஷயத்தில் படுமோசமாக நடந்து கொண்டிருக்கிறார்கள் என்ற கோபமாயிருக்கலாமோ ? அல்லது அடுப்பங்கரையில் உபயோகப்படும் சாம்பலும் மண்ணும் தங்கள் நெற்றியில் வைக்கத் தகுதியற்றவை என்ற நினைப்பே ? இதுவும் ஆராய்ச்சிக்குரிய அருமையான விஷயம் !

வெளி நாடுகளில் விஞ்ஞான ஆராய்ச்சி ! இங்கே விபூதி ஆராய்ச்சி ! ஏதோ ஒரு ஆராய்ச்சி நடக்க வேண்டியது தானே !

“ஏ ! கைலாசபதி ! வைகுண்டவாசா ! எங்களுக்கு இவ்வளவு அழகான உருப்புகளைப் படைத்த உங்கள் தோழன் பிரம்மா எங்கள் நெற்றியில் குறுக்கிலோ நெடுக்கிலோ மூன்று கோடுகளையும் இழுத்து விட்டிருந்தால் இவ்வளவு தொல்லையில்லையே ! நாங்கள் டீச்சர்களிடத்தில் அடிபடாமலாவது இருப்போமே ! ”

இது தான் மாணவர்கள் பிரலாபம்!

இனிமேல் வரும் மனிதனின் புது எடிஷன் (பதிப்பு) களிலாவது நெற்றியில் மூன்று நிரந்தரக் கோடுகள் இருக்குமென்று எதிர் பார்க்கப்படுகிறது ! அல்லது நெற்றியே இல்லாமலிருந்தாலும் இந்தத் தொல்லை இல்லாமலாவது இருக்கும் !

அதுவரையில் வாசகர்களே ! உங்கள் நெற்றி ஜாக்கிரதை ! ஸ்டாலினே ! உம் நெற்றியும் ஜாக்கிரதை ! பர்னாட்ஷாவே! உமக்குந்தான் சொல்கிறேன். எங்கள் ஊர்க்

காரர்கள் எமகாதகப் பேர்வழிகள். திருவள்ளுவர் நெற்றியிலேயே விபூதிப் பட்டை போட்டு விட்டார்கள்! உங்களுக்கும் போட்டாலும் போட்டுவிடுவார்கள்! எதற்குந் துணிந்த ஆசாமிகள்!

ஜின்னா நெற்றியில் (படத்தில் தான்!) நாமம் போடுவார்கள்! பெரியார் மார்பில் பூணூல்போடுவார்கள்! அசகாய சூரர்கள்!

★

## 6. நம் பேச்சாளிகளா ஓடும்?

ஸ்ரீலஸ்ரீ சங்கராச்சாரியாரே! பண்டார சந்நிதிகளே! ஜீயர்களே! மெய்வழி ஆண்டகைகளே! ரமண ரிஷிகளே! அரவிந்தர்களே! பாதிரிமார்களே! முல்லாக்களே! பார்ப்பனப் புரோகிதர்களே! அர்ச்சகர்களே! பூசாரிகளே! பண்டாரங்களே! தீக்ஷிதர்களே! போத்திகளே! குருமார்களே! மதத்தலைவர்களே! ஓடுங்கள்! ஓடுங்கள்! தாமதிக்காதீர்கள்! நாங்கள் செத்தாலும் பரவாயில்லை. நீங்கள் கடவுளோடு அடிக்கடி பேசுகிறவர்களாச்சே! நீங்கள் செத்துத் தொலைஞ்சால் கடவுளுக்குப் பேச்சு வார்த்தைக்குக்கூட ஆள் இருக்க மாட்டார்களே! கடவுள் தன்னந்தனியே கிடந்து தவிப்பாரே! தனியாயிருக்க பயமாயிருக்குமே அவருக்கு! ஓடுங்கள்! ஓடித் தொலையுங்கள்! —

என்று கூச்சல்போட்டேன்! கதறினேன்! பதறினேன்! மூச்சுப்பேச்சில்லை. ஒருவர்கூட நகரவில்லை; நங்கூரம் போட்டுவிட்டார்கள்!

ஏன் ஓடச் சொன்னேன்? அவர்கள் சொத்துக்களைக் கைப்பற்றி ஏழைகளுக்குப் பங்குபோட்டுக் கொடுப்பதற்காகவா? அது என்னால் மட்டுமே முடிகிறகாரியமா? வாசகர்கள் வசத்தில் அரசாங்கம் வந்த பிறகல்லவா இந்தக்

காரியம் முடியும்? ஏன் ஓடச்சொன்னேன், தெரியுமா? காரணத்தோடுதான்.

உலகின் ஊழிகாலம் (அழிவுவேளை) நெருங்கி விட்டதாகவும் நகரங்கள்தான் முதலில் அழியுமென்றும் கூறிக்கொண்டு ஆஸ்ட்ரேலியாவிலுள்ள மெல்போர்ன், சிட்னி, பிரிஸ்போன் ஆகிய நகரங்களிலிருந்து மத குருவான விக்டேக்கர் என்பவரும், அவரது 10,000 சீடர்களும் ஓட்டமெடுத்து விட்டார்களாம். அணுக்குண்டு மூலம் நகரங்கள் அழியலாம்; அல்லது ஏசுநாதர் இரண்டாம்முறை அவதரிக்கலாம் என்று அம்மதகுரு கூறினாராம்.

ஆசையால் நம் குருமார்களும் எங்கேயாவது ஓடிப் பிழைக்கட்டும் என்று கருதியே கூச்சல்போட்டேன்.

அவர்களா ஓடுவார்கள்? பெரிய பெருச்சாளிகளாச்சே!

"ஏ குத்தூசியே! அப்படியாவது நாங்கள் தொலைபட்டும் என்றுதானே நினைக்கிறாய்? உன் உள் எண்ணம் எங்களுக்குத் தெரியும். இந்த உலகமே அநித்தியமானது; என்றைக்கிருந்தாலும் சாவு நிச்சயம். சாவுக்கு பயந்தா நாங்கள் ஓடுவோம்? ஆண்டவன் அருள் எதுவோ அதுநடக்கும்; நாங்கள் நகரத்திலிருந்தாலும் ஒன்றுதான். கிராமத்திலிருந்தாலும் ஒன்றுதான். ஆஸ்ட்ரேலியாவில் அணுக்குண்டு வீழ்ந்தாலும், இந்தப் புண்ணிய பூமியில் விழாது. ஒரு வேளை ப்ளேக், பஞ்சம், காலரா, காய்ச்சல், க்ஷயரோகம் முதலியவை வந்தாலும் வருமே தவிர, அணுக்குண்டு வராது எங்களுக்குப் பயமில்லை. அற்ப மனிதர்களாகிய நீங்கள் வேண்டுமானால் எங்கேயாவது ஓடிப்பிழையுங்கள். ஆண்டவன் எங்களைக் காப்பாற்றுவான்," என்று கூறிவிட்டார்கள், மேற்படி குருமார்கள்.

இவர்களைத் தனித்தனியே கேட்கவேண்டும் என்பது என் ஆசை. நீங்களாவது கேட்டுப்பாருங்களேன். கேட்டால் நிச்சயம் சரியானபதில் கொடுப்பார்கள்!

"நான் இருக்கப் பயமேன்?" என்பார் ஒருவர்.

"கோவர்த்தன கிரியைத் தூக்கிவருவார், கிருஷ்ணன்" என்பார் ஒருவர்.

"அணுக்குண்டுக்கெதிராக வர்ணாஸ்திரத்தைப் பிரயோகிப்பார் மகாவிஷ்ணு," என்பார் ஒருவர்.

"நெற்றிக் கண்ணைத் திறந்துகாட்டி அதற்குள் அணுக்குண்டைவிழும்படிசெய்வார், எங்கப்பன்பரமசிவன்," என்பார் ஒருவர்.

"இந்தக் கன்னத்தில் அணுக்குண்டு வீழ்ந்தால் மறு கன்னத்தையும் காட்டுவேன்," என்பார் ஒருவர்.

"ஒரு சிட்டிகை விபூதியை வீசி, 'மந்திரமாவது நீறு' என்ற திருப்பதிகத்தை உரக்கப்பாடுவேன்," என்பார்ஒருவர்.

இப்படியெல்லாம் சொல்வார்களே ஒழிய, ஓட்டமெடுக்கும் பேச்சுமட்டும் இருக்காது.

உலக மக்களே அழிந்துபோனாலுங்கூட இந்த குருமார் கூட்டம் ஆடாது, அசையாது. மிருகங்களையும் புழு பூச்சிகளையும் மிரட்டிக்கொண்டாவது காலந்தள்ளும்! அதுவும் அழிந்துவிட்டால், பிறகு ஒருவரை ஒருவர் ஏமாற்றப் பார்ப்பார்கள்!

பலே பெருச்சாளிகள்! எந்த எலிப்பொறியிலும் அகப்படாதவை!

★

## 7. ஏறினல் தூக்கமாட்டோம்!

"ஓய்! அய்யரே! நீர் ஏறக்கூடாது! ஆயிரம் பவுண்ட் வாகனத்தையும் தூக்கி, உன்னையும் ஏன் தூக்கித் தொலைக்கவேண்டும்? நீர் ஏறினால் கட்டாயம் தூக்கமாட்டோம்," என்று கூறினார்கள், சாமி தூக்குபவர்கள்.

அய்யர் கோயில் டிரஸ்டியிடம் சரண்புகுந்தார்; டிரஸ்டி ஆட்களை மிரட்டினார். 'பட்டைச்சோற்றில் மண் விழுந்து விடும், ஜாக்கிரதை!'' என்று கூறினார்.

பட்டைச் சோற்றைவிடப் பருமனான காய்ப்புக்களையுடைய தோள்கள் படைத்த தோழர்கள் தூக்கினார்கள், முணு முணுத்துக் கொண்டே! ஒரு பர்லாங் இரண்டு பர்லாங்கா? ஊரை விட்டே ஊர்போகவேண்டிய உற்சவம். வாய்க்கால் பாலம் வந்தது. இராத்திரிவேளை! 4 தீப்பந்தங்களைத் தவிர வேறு வெளிச்சமில்லை. பாலத்தில் போய்க்கொண்டிருக்கும் போது எதிரில் ஒரு எருமை! மதங்கொண்ட யானையைப்போல் ஓடி வந்தது. சாமி தூக்கியவர்கள் வாகனத்தைக் கீழே போட்டுவிட்டார்கள். அர்ச்சகர் வாய்க்காலுக்குள் வீழ்ந்தார், அய்யோ என்று அலறியபடியே! 'சாமி விழுந்திட்டாரே!'' என்று சத்தம் போட்டுக்கொண்டே பக்தர்கள் ஓடினார்கள். அதாவது அர்ச்சகரைத்தான் 'சாமி' என்றார்கள், அறிவற்ற அவர்களுக்கு இரண்டும் ஒன்றாகையால். 'சாமி'க்கு (அர்ச்சகருக்கு) வலது கை முறிந்து விட்டது! பாவம்! விபூதிகொடுத்து அருளிய கை அல்லவா அது!

சாமி தூக்கியவர்கள் வேணுமென்றே போட்டுவிட்டார்கள் என்பது அர்ச்சகர் தொடுத்திருக்கும் வழக்கு. முடிவென்னவாகுமோ தெரியவில்லை.

இந்த நிலையில். தமிழ்நாட்டில் இந்த பகிஷ்கார வேலை பல ஊர்களில் நடந்துவருவதாகத்தெரிகிறது.

அர்ச்சகன் உயரஏறினால் தூக்கமாட்டோம்,'' என்று இதுவரையில் 4 ஊர்களில் கிளர்ச்சிசெய்து வெற்றி பெற்று விட்டார்களாம். ஒரே ஒரு ஊரில் மட்டும் அர்ச்சகரோடு வாகனத்தையும் அதன்மேலுள்ள மூர்த்தியையும் கீழே போட்டிருக்கிறார்கள் !

இந்த உணர்ச்சி முற்றிவிட்டால் என்ன ஆவது என்று அர்ச்சகர்கள் ஆலோசித்து வருகிறார்களாம் !

அர்ச்சகர்கள் கிடக்கட்டும் ! சாமியேகூட ஆலோசிக்க வேண்டிய காலம் நெருங்கி விட்டது.

"ஏ ! சாமியே ! அவன் உன் பக்கத்தில் அமரவும் நான் உன்னைத் தூக்கவுந்தானா இந்த உலகத்தில் பிறந்தோம் ? உன்னைத் தூக்கி உடம்பொடியப் பாடுபடும் எனக்கு தினம் 2 உப்பில்லாச் சோற்றுப்பட்டை ! உன்னோடு அமர்ந்திருக்கும் அவனுக்குமட்டும் சர்க்கரைப் பொங்கல், தேங்காய், பழம், மாலை, பணம், இத்தனையும், இதற்கு மேலும் ! இந்த அக்கிரமம் ஏன் ? உனக்குக் கண்ணில்லையா ? அல்லது உறங்கி விட்டாயா ? அவனும் கொஞ்ச நாளைக்கு தூக்கிப் பார்க்கட்டுமே ! நான் நாலு வருஷத்துக்கு உன் பக்கத்தில் நின்று பார்க்கிறேனே!'' என்று கேட்பார்கள், தூக்கும் தொழிலாளிகள்.

'அர்ச்சகன் மேலே ஏறினால் தூக்கமாட்டோம் ; கட்டாயப்படுத்தினால் கீழே போட்டு விடுவோம்,'' என்பது சாதாரண உணர்ச்சியல்ல. வயிற்றுப் பிழைப்பையே பாதிக்கக்கூடிய பிரச்னை. இது தெரிந்தும் பல ஊர்களில் துணிந்து இறங்கியிருக்கிறார்களே ! வீரர்கள்தான், சந்தேகமில்லை.

"நீ விபூதி கொடுத்தால் நான் வாங்கமாட்டேன்.''

"நீ சடகோபம் சாத்தினால் நான் தலையைக் குனியமாட்டேன் ''

"நீ சமஸ்கிருதத்தில் சொன்னால் நான் ஒப்பமாட்டேன்''

"நீ தேங்காய் உடைப்பதை நான் ஏற்கமாட்டேன்."

"நீ அபிஷேகம் செய்வதை நான் அநுமதிக்கமாட்டேன்."

"நீ மட்டும் மடப்பள்ளிக்குள் செல்வதைப் பொறுக்கமாட்டேன்."

இந்த மாதிரி யெல்லாம் சொல்ல, படித்த பக்தர்களுக்கும், பணக்கார ஆஸ்திகர்களுக்குமே துணிவில்லையே!

அப்படி யிருக்கும்போது சாமி தூக்குகிறவர்கள் இவ்வளவு துணிச்சலுடன் இருப்பதை நினைத்தால் இவர்களே சரியான வீரர்கள் என்றுதானே உங்களுக்குக் கூறத்தோன்றுகிறது? எனக்கும் அப்படித்தான் தோன்றுகிறது. மற்றவர்களெல்லாம் வெறும் தப்பட்டைகள்! அதுவும் கிழிந்த தப்பட்டைகள்!

"கடவுளாரே! உலகமே மாறிப்போய்க்கூட நீங்கள் ஏன் இன்னும் பழைய மடிசஞ்சியாகவே இருக்கிறீர்கள்? வாகனம், தேர் முதலியவைகளையே கட்டிக் கொண்டு அழுகிறீர்கள்? ஷோக்காக மோட்டார்காரிலே போகலாம். ரயிலில் போகலாம். (ஒரு தனி வண்டி வேண்டுமானாலும் ரிசர்வ் செய்து தருகிறேன்.) அவசரமாகப் போகவேண்டுமானால் ஆகாய விமானத்தில்கூடப் போகலாமே! ஏழைக் கடவுளாயிருந்தால் என் சைகிளில் வேண்டுமானாலும் வைத்து அழைத்துப் போகிறேன்," என்று நம் சாமிகளையும் ஒரு வார்த்தை கேட்டு வையுங்கள்!

மேல் நாட்டுபாண்டுக்கும், மின்சாரத்துக்கும் ஒப்புக்கொண்ட நம் சாமிகள் மேல் நாட்டு வாகனங்களுக்கு மட்டுமா ஒப்புக்கொள்ள மறுத்து விடும்? பக்தர்கள் கேட்டுப் பார்த்தால்தானே! வாயை மூடிக் கொண்டு கோயிலுக்குப் போவதும் வருவதுமாயிருந்தால் போதுமா? சாமி கூச்சப்பட மாட்டாரா, தானாக எதையும் கேட்பதற்கு? சூடனும் சோறும் அவரா கேட்கிறார்? நாமாகத்தானே கொடுக்கிறோம்! அதுபோல வாகனங்களைப் பற்றியும் கேட்டுப்

பார்க்காமலேகூட நாமாகவே மாற்றி விடலாமே! குதிரை வாகனத்தை விற்று ஒரு மோட்டார் சைகிள் வாங்கிக்கொடுத்தால் என்ன? நீங்கள் மட்டும் வாங்கிக் கொள்கிறீர்களே! இருந்தாலும் உங்களைப் போன்ற சுய நலமிகளை நான் கண்டதே யில்லை!

★

## 8. ச மிகளைக் க க்க ஆச மிகள்!

'கடவுள் இல்லாவிட்டால் மனிதன் இருக்க முடியுமா?'' என்று கேட்டார், ஒரு வைஷ்ணவ பக்தர்.

"மனிதன் இல்லாவிட்டால் கடவுள் இருக்க முடியுமா?" என்று பதிலுக்குக் கேட்டாராம், ஒரு வேதாந்தி.

"இந்த உலகத்தை உண்டாக்கியது யார்?" என்று கேட்டான் ஜான் ஸ்டூவர்ட் மில் என்ற இளைஞன், தன் தந்தையைப்பார்த்து.

"கடவுள்தான்," என்றார் தந்தை.

'அவரை உண்டாக்கியது யார்?" என்று கேட்டான் சிறுவன்.

"அவர் தானாகவே உண்டானார்," என்றார் தகப்பனார்.

"அப்படியானால் உலகம் மட்டும் ஏன் தானாக உண்டாகவில்லை," என்று திருப்பிக் கேட்டானாம், பிடிவாதக்காரச் சிறுவன்.

இந்த ஜான்ஸ்டூவர்ட் மில்தான் பெரிய தத்துவ ஞானியான பிறகு பின்வருமாறு கடவுள் இலக்கணத்தைப் பற்றிக் கூறினார்:— "கடவுள் என்ற சொல், நம் கருத்துக்களைக் கூறுவதற்கு அல்ல; கருத்து சூன்யத்தைக் குறிப்பிடவே ஏற்பட்டது."

"இந்த விசாரணை யெல்லாம் இப்போது ஏனய்யா, குத்தூசியாரே! செலவுக்குப் பணம், வயிற்றுக்குச் சோறு

கட்டுவதற்குத் துணி, தங்குவதற்குக் குடிசை இவைகளைப் பற்றி ஏதாவது வழி இருந்தால் சொல்லுமே! இவைகளெல்லாம் கிடைத்த பிறகல்லவா, தத்துவ விசாரணை, ஆஸ்திக – நாஸ்திக விவாதம், கலை யுணர்ச்சி, ஆகியவைகளைப் பற்றி நினைக்க வேண்டும்?'' என்று கேட்கலாம், வாசகர்கள்.

பணக் கஷ்டமும், பசிக் கொடுமையும் இல்லாத சுகவாசிகள்தான் இவைகளைப் பற்றி ஆராய்ச்சி செய்ய முடியும். உண்மைதான். இதோ படியுங்கள்:—

1. கிருஷ்ண பரமாத்மா இறந்து போனாரா அல்லது சிரஞ்சீவியாக இருக்கிறாரா?-இது பற்றி "ஹிந்து" பத்திரிகையில் விவாதம் நடைபெறுகிறது. கவர்னர் ஸி. ஆர். கிருஷ்ண பரமாத்மாவை ஒரு மனிதன் என்று கூறி விட்டதால் ஏற்பட்ட வினை இது!

[ஏ, பரந்தாமா! வாசுதேவா! நந்தகோபாலா! நீ சிரஞ்சீவியாயிருந்தால் உடனே வா! 'ஹிந்து' ஆபீஸ் எதிரில் காலை 10-மணிக்கு வா! நான் அப்படியேதான் வருவேன்! சந்தித்துப் பேசுவோம்.]

2. சிந்தாதிரிப்பேட்டை 'காக்ஸ்' சேரியைத் தரை மட்டமாக்கி விட்டுப் புதிய ரோடுகள் அமைத்து வீடுகளும் கட்டித் தர வேண்டும் என்பது நகர சபையின் திட்டம். இந்தப் பகுதியில் (இதோ எனக்குப் பின்னால்தான்) இரண்டு சிறு பழங்கோயில்கள் இருக்கின்றன. அவைகளை இடிக்கக் கூடாது என்கிறார், ராஜகோபாலய்யர் என்ற கவுன்சிலர். வேறிடத்தில் புதிதாக கட்டப்படுவதனால் கூட கோயிலை 'இடிக்கும் உரிமை' கூடாது என்கிறார். மற்ற கவுன்சிலர்கள் பரவாயில்லை என்கிறார்கள்.

[நந்தனார் தரிசனத்திற்காக நந்தியை விலகியிருக்கச் சொன்னாராம் நடராஜர்! அப்படியே விலகினாராம்! நந்தி நல்ல மனுஷரல்லவா? இன்று நந்தனார் சந்ததிகளுக்கு வீடு கட்டுவதற்காக சாமிகளின் வீடுகளையே அப்புறப்படுத்த

வேண்டும் என்கிறார்கள், சில ஆசாமிகள். இதை எதிர்த்தார் ஒரு அய்யர். அவருக்கல்லவா தெரியும் சாமியின் மனோ நிலை! நான் ஒரு யோசனை கூறுவேன் நகர சபை சட்ட விதிப்படி 'இன்னும் ஒரு மாதத்திற்குள்ளாக உம் வீட்டை இடிக்கப் போகிறேன்; ஆட்சேபணை இருந்தால் அதற்குள் கமிஷனரிடம் நேராகவோ, எழுத்து மூலமாகவோ தெரிவித்துக் கொள்ளலாம்," என்று ஒரு நோட்டீஸ் எழுதி அவர் வீட்டுக் கதவில் ஒட்டிவிட்டு ஒரு மாதம் கழித்து மேல் நடவடிக்கை எடுக்கலாமே!]

3. காஞ்சிபுரம் ஏகாம்பரநாத ஸ்வாமிக்கு ஒரு வெள்ளி ரதம் செய்யப்படுகிறதாம். பாதிக்கு மேல் ஆகிவிட்டதாம். பூர்த்தி செய்வதற்கு இன்னும் 60,000 ரூபாய் வேண்டுமாம்! 20,000 கையில் இருக்கிறதாம்! பாக்கி 40,000 வேண்டுமாம்! பக்தர்கள் உடனே பணம் அனுப்புமாறு கோருகிறார்கள்!

[யார்? ஏகாம்பர நாதரா? அதுதான் இல்லை. சாமி பெயரைச் சொல்லி சில ஆசாமிகள் கேட்கிறார்கள். அவரே கேட்டால் 40,000 என்ன? எத்தனை லட்சம் வேண்டுமானாலும் கொடுக்கலாமே! குழந்தைக்குப் பசித்தால், தானே அழுகிறதே ஒழிய, வேறு யாரையாவது அழச் சொல்கிறதா? கன்றுக்குட்டி தானே 'அம்மா' என்று கத்துகிறதே! ஏகாம்பர நாதருக்கு அதுகூடவா முடியாது? அதுதான் போகட்டும். ஒரு லட்ச ரூபாயில் வெள்ளி ரதம் செய்தால் மணிக்கு ஒரு மைல் கூட போகாதே! நல்ல 'ராலி' சைக்கிள் ஒன்றை வாங்கிக் கொடுத்தால் 300 ரூபாயோடு போகுமே! அவரும் மணிக்கு 10 மைல் வேகத்திலாவது போவாரே!]

**"ஏ! சர்வ முட்டாள்களே! இந்த உலகத்தையே நான் தானே படைத்தேன்! நான் சிரஞ்சீவியா, செத்துப்போய் விட்டேனா என்றும், என் வீட்டை இடித்தால் என்ன செய்வேனோ என்றும், எனக்கு வெள்ளி ரதம் வேண்டு மென்றும் பிதற்றித் திரியும் பித்தர்களே! உங்களுக்கு வேண்டிய பள்ளியையோ, ஆஸ்பத்திரியையோ, கட்டிக்**

**கேள்ள அறிவில்லாத நீங்களா என்னைக் காப்பாற்றப் புறப்பட்டிருக்கிறீர்கள்? உங்கள் முகத்திலேயே விழிக்க மாட்டேன்! நீங்கள் 'சாமி, 'சாமி' என்று சொல்லி ஏமாற்றி— ஏமாந்து-திரியும் ஆசாமிகள்!''**

என்று என் கனவில் தோன்றிக் கூறினார், எங்கும் நிறைந்த கடவுள்.

நான் கூறுவதில் சந்தேகமிருந்தால் அதோ நிற்கிறாரே, சிரஞ்சீவி அநுமார், அவரை வேண்டுமானாலும் கேட்டுப் பாருங்கள்!

★

## 9. அரை பிர்ம்மா பிறந்தார்!

"பிர்ம்மாதான் எல்லா மனிதர்களையும் (ஆகாகான், சர்ச்சில், ஸ்டாலின், கோட்சே உட்பட) உண்டாக்குகிறார் என்றால், அவரைப் பெற்றெடுத்தது யார்?''

அவர் மகாவிஷ்ணுவின் உந்திக் கமலத்திலிருந்து பிறந்தார்.

" மகாவிஷ்ணு எப்படிப் பிறந்தார் ? ''

" அவர் மும்மூர்த்திகளில் ஒருவர். தானாகவே தோன்றியவர். சத்தியமாகச் சொல்கிறேன். சந்தேகமிருந்தால் ஏசுநாதரைக் கேட்டுப்பாருங்கள். ''

"பிர்ம்மா இந்தியாவுக்கு மட்டும் சிருஷ்டி கர்த்தாவா? பாகிஸ்தானுக்குக்கூடவா? உலகத்திற்குக் கூடவா ? ''

"இதென்ன, நாஸ்திகக் கேள்வி? கும்பகோணம் சங்கராச்சாரியாரே 'லோககுரு' என்னும்போது பிரம்மா என்ன, சாமான்யப்பட்டவரா? உலகத்துக்கே சிருஷ்டிகர்த்தாதான். ''

"அதுசரி! பிரம்மா ஏன் நான்கு தலைகளுடன் உற்பத்தியானார் ?

"சும்மா, ஒரு தமாஷ்தான்! அப்பத்தானே, எல்லோரும் வேடிக்கைபார்க்க வருவார்கள்? கண் காட்சியில் நாலுகால் பசு மாடு வந்திருக்கிறது என்றால் யார் சட்டைசெய்வார்கள்? ஆறுகால் மாடு, இரட்டை வால் நாய் என்றால்தானே யாருக்கும் ஆச்சரியமாயிருக்கும்?"

பிரம்மாவுக்கு 4 தலை; ஆறுமுகக் கடவுளுக்கு 6 தலை, இராவணனுக்கு 10 தலை; ஆதிசேஷனுக்கு (பாம்பு) 1000 தலை!

'இதெல்லாம் கடைந்தெடுத்த புராணப் புளுகு' என்பீர்கள், நீங்கள்.

இதோ படியுங்கள்: திருப்பதி சர்க்கார் ஆஸ்பத்திரியில் 2 தலையுடனும், 4 கைகளுடனும், 4 கால்களுடனும் ஒரு குழந்தை பிறந்தது. தாயும் குழந்தையும் உடனே இறந்து போய்விட்டார்கள். குழந்தையை மட்டும் ஆர்ட்ஸ் காலேஜ் கண்காட்சி சாலையில் வைத்திருக்கின்றனர்.

இதற்கென்ன சொல்கிறீர்கள்? பிர்ம்மாவில் பாதி! ஆறு முகக் கடவுளில் மூன்றில் ஒரு பங்கு! ராவணனில் ஐந்தில் ஒரு பங்கு!

இம்மாதிரியே ஒரு மைசூர் மாது (சுமார் 35 வயது) கண்காட்சியில் கொண்டுவரப்படுவதைப் பலர் பார்த்திருக்கலாம்.

இது என்ன? தெய்வீகப் பிறவியா? அல்லது அதிசயப் பிறவியா? நான்கு கிளைகளுடைய தென்னை மரம், இரண்டு வால்களுடைய மாடு, முதலியவைகளைப்போல் இதுவும் ஒரு அதிசயப் பிறவிதான் என்பார்கள் சிலர்.

ஆனால் வேறு சிலர் இம்மாதிரிக் கேட்கலாம்;—

1. சரஸ்வதிக்கும் லட்சுமிக்கும் நாலு கைகள் ஏன்?
2. விநாயகருக்கு யானை முகம் ஏன்?
3. அவர் சகோதரருக்கு ஆறு முகம் ஏன்?

4. பரமசிவனுக்குப் பல கைகள் ஏன்?

5. மகாவிஷ்ணுவுக்கு இரண்டுக்கு மேற்பட்ட கைகள் ஏன்?

இவர்களெல்லாம் அதிசயப் பிறவிகளா? அப்படியானால் இவர்களையும் ஏன் மியூசியத்தில் வைத்து வேடிக்கை காட்டக்கூடாது? ''

சரியான கேள்விதான். அதிசயப் பிறவிகள் ஆனால்தான் நம் முன்னோர்கள் இவர்களை மியூசியங்களில் வைத்திருக்கிறார்கள். அவைகளுக்கு அந்தக்காலத்தில் "கோயில்" என்று பெயரிட்டிருக்கலாம்! அவர்கள் நல்ல எண்ணத்துடன் தான் வைத்திருக்கிறார்கள். பின் சந்ததியார்கள் தெரியாத்தனமாக அவைகளை கடவுள் என்று கருதிக்கொண்டு கும்பிட்டால் அதற்கு நம் முன்னோர்களா பொறுப்பு? சென்னை எழும்பூர் மியூசியத்திற்கு வந்து பாருங்கள்! எல்லாக் கடவுள்களும், (அதிசயப் பிறவிகளும்) இருக்கின்றன! தினம் ஆயிரக்கணக்கானவர் வந்து போய்க்கொண்டுதானிருக்கிறார்கள்! எதற்காவது அபிஷேகமோ; ஆராதனையோ, படுக்கை அறையோ, உல்லாசப் பயணமோ, உண்டா? இதற்காக எந்த "சாமியாவது" இதுவரையில் வாயைத் திறந்ததுண்டா? தெய்வமேண்ணு இருக்குதுகள்! வேணுமானால் காவற்காரனைக் கேட்டுப்பாருங்களேன்!

இந்த விஷயம் தெரிஞ்சுதானோ கொஞ்சகாலமாக மகாவிஷ்ணு, பரமசிவன் எல்லோரும் இந்த உலகத்துக்கு முன்போல அடிக்கடி வருகிறதில்லை! வந்தால் யாராவது ஆராய்ச்சிப் பேர்வழிகள் அவர்களைப் பிடித்து தைலபாட்டிலுக்குள்ளே போட்டு மியூசியத்திலே வைத்து விட்டால் என்ன செய்கிறது?

'காலம் கெட்டுப் போச்சு!' என்று அடிக்கடி சொல்கிறார்களே! இது அவர்கள் காதுக்கும் எட்டியிருக்கும் போலிருக்கு!

★

## 10. மகமாயி பிரெக்கன் பிரிட்ஜ் !

நம் சாமி, அம்மன் எல்லாம் இப்போது வெள்ளைக்காரப் பேர் வைத்துக் கொண்டுவிட்டனவோ, என்று நினைக்க வேண்டாம். நம் சாமிக்கெல்லாம் புதுச் சங்கதி எதுவும் அவ்வளவாகப் பிடிப்பதில்லை! சில வருஷங்களுக்கு முந்தி 'சாமிக்குக் கண்கூசும்' என்ற காரணம்கூறி எத்தனையோ கோயில்களில் மின்சார விளக்குப் போடுவதை எதிர்த்தார்களே, உங்களுக்குத் தெரியாதா ?

மனுஷன் சாமியைக்கூட ஏமாற்றுகிறானே! இதுதான் பெரிய அதிசயம்! தான்மட்டும் மோட்டாரிலே போகிறான்; சாமியை மட்டும் தேரில் வைத்து இழுப்பானேன்? தான்மட்டும் காபி, ஓவல்டின், சோடா, பூரி-உருளைக் கிழங்கு, ரொட்டி, சாக்லெட் சாப்பிடுகிறானே! சாமிக்கு மட்டும் எப்போதும் ஒரே தினுசு சோறும், தோசையும், முறுக்கும் போதுமா? அதுக்கும் ஒரு நாளைக்காவது இரண்டு பூரி உருளைக் கிழங்கு சாப்பிட்டு விட்டு ஒரு கப் காபி குடிக்க வேணும் என்ற ஆசை இருக்காதா என்ன ?

மனுஷனைப் போலவே சாமியை குளத்துக்கு அழைத்துப் போகிறானே! நாட்டியக் கச்சேரி காட்டுகிறானே! ஒரு நாளைக்காவது சினிமாவுக்கு அழைத்துப் போனாலென்ன ?

மனுஷன் தன் வீட்டுப் பெண்களுக்கு வேறொரு ஆண் குளிப்பாட்டக் கூடாது என்கிறானே! அந்த மாதிரியே சாமியும் தன் பெண்சாதிக்கு எவனோ வழியிலே போகிற ஒருத்தன் தினந்தோறும் குளிப்பாட்டி விடுவதைப் பற்றி மனம் பதறாமலா இருக்கும் ?

யாருக்காவது அம்மை போட்டவுடனே பக்தர்கள் என்ன செய்கிறார்கள்? எது எப்படியானாலும் கண்களில் அம்மை போட்டு விடக் கூடாது என்றுதானே கவலைப்படு

கிறார்கள்? எதற்காக? வேறு அவயவங்களில் ஏதாவது கோளாறு ஏற்பட்டால்கூடப் பொறுத்துக்கொள்ளலாம். கண்களில்மட்டும் ஒரு கோளாறும் ஏற்படக்கூடாது. எல்லாவற்றிலும் முக்கியமானது- கண்தான். ஒருவர் மற்றவர்மேல் ஆசையாகக் கூப்பிடும்போதுகூட "என் பவுண்டன் பேனாவே!" "என் கெடிகாரமே!" 'என் முழங்காலே' "என் வாயே!" என்றா சொல்கிறார்கள்? "என் கண்ணே!" என்றுதானே சொல்கிறார்கள்?

அவ்வளவு முக்கியமான உறுப்பு, கண்.

"மாரியாத்தா! சமயபுரத்தாளே! ஆயிரங்கண்ணுடையாள்! என் பிள்ளையின் கண்ணைக் காப்பாற்று! உனக்கு ஒரு ஜோடி கண்ணடக்கம் (வெள்ளிக் கண்கள்) செய்து தாரேன்!"

"ஏழுமலையானே! என் கண்ணைக் கெடுத்துவிடாதே! நான் உன் சன்னதிக்கு வந்து மொட்டை யடித்து விட்டு, கண்ணடக்கம் காணிக்கை தாரேன்!"

இந்த மாதிரி அடிக்கடி பேரம் பேசுவார்கள், பலர். நம்ப கடவுள்களும் சாதாரணமாய் அலட்சியமாயிருப்பதில்லை. சில நாணயமற்ற சர்க்கார் பெருச்சாளிகளைப் போலில்லாமல், வாங்குகிற லஞ்சத்திற்கு ஏகதேசம் ஒரு நன்மையாவது செய்து விடுவதுண்டு. இல்லாவிட்டால் பெரிய உண்டியல் நிறைய வெள்ளிக் கண்கள் எப்படி வரும்?

எத்தனையோ பேர் இந்த பேரத்தில் ஏமாந்துகூடப் போயிருக்கிறார்கள். சதா தொல்லை கொடுத்துக் கொண்டிருந்தால் நம் கடவுள்தான் என்ன செய்யும் பாவம்! ஏதாவது வேறு வேலையாயிருக்கிற சமயத்திலே இவர்கள் 'பெட்டிஷன்' போயிருக்கும். அதை வாங்கி மேஜை மேல் வைத்து 'பேப்பர் வெயிட்' வைத்திருக்கும், சாமி! அதற்குள்ளே ரொம்ப அவசரமாக யாராவது ஒரு ஆஸ்திகர் கூப்பிட்டிருப்

பார்! அங்கே போயிருக்கலாம்! எத்தனையோ வேலைத் தொல்லை, பாவம்! அதுவும் மனுஷன்தானே!

மாரியாத்தாளும் ஏழுமலையானும் இங்கே செய்து வரும் வேலையை அமெரிக்காவில் மிஸஸ் பிரெக்கன் பிரிட்ஜ் என்பவர் செய்து வருகிறாராம்! செத்துப்போனவர்களின் நல்ல கண்களை எடுத்து பத்திரப்படுத்தி வைத்து, உயிருடன் இருப்பவர் கண்களை இழந்திருந்தால் அவைகளுக்குப் பதிலாகப் பொருத்தி விடுகிறாராம்! இந்த மாதிரி பல குருடர்களுக்குப் பார்வையை உண்டாக்கித் தந்துவிட்டாராம்!

'இது என்ன, நடக்கும் காரியமா? என்று கேட்கிறார், சமயபுரத்துப் பூசாரி! திருப்பதி அய்யங்கார்கூட அப்படித்தான் கேட்கிறார்!

'விதியையாவது வெல்வதாவது? எல்லாம் சுத்தப் புரட்டு,'என்கிறார், விதிப்படிநடக்கட்டும்என்று சோற்றையே கையால் தொடாத உயர்திரு விதி நம்பிக்கைச்செட்டியார்!

"இது கலி காலமோன்னோ? எதுதான் நடக்காது?" என்கிறார், கலிகாலத்தை அறவே வெறுத்து காபி கிளப் வைத்திருக்கும் ஸ்ரீமான் பகற்கொள்ளை அய்யர்!

"என் பெயரை இனிமேல் மிஸஸ் மகமாயி பிரேக்கன் பிரிட்ஜ் என்று மாற்றிக்கொள்ளப் போகிறேன்," என்கிறாள் கண் கண்ட தெய்வமான ஆயிரங் கண்ணுடையாள், சமயபுரத்து மாரியாத்தாள்!

★

## 11. தீராத வினையெல்லாம் தீர்த்துவைப்பான் கோவிந்தா!

கையில் சிறு உண்டியலுடன் மஞ்சள் துணி அணிந்து நடுரோட்டில் உருண்டு வருபவன் (பிராமணனல்ல; அவன் தான் புத்திசாலி ஆச்சே! அவன் ஏன் உருளுவான்?) ஸ்ரீ கோவிந்தனைப் பற்றி (அவர் தான், மிஸ்டர் ஏழுமலையான்!) வர்ணிக்கும் பல வர்ணனைகளில் இதுவும் ஒன்று.

கோவிந்தன் எல்லா வினைகளையும் தீர்த்து வைப்பான் என்பது! திருப்பதி மகந்துவுக்கே முன்பு பைத்தியம் பிடித்ததும், டாக்டர் ஏழுமலையான் கைவிட்டதும், பிறகு கர்னல் மால்காம்ஸன் குணப்படுத்தியதும் நடுத் தெருவில் புரளும் நாராயணனுக்கு என்ன தெரியும்? ஏதோ, வயிற்றுப் பிழைப்பு! அல்லது மௌடீகம்! திருப்பதியில் காலரா வராமல் தடுப்பதற்கு அங்குள்ள சுகாதார உத்யோகஸ்தர் என்ன பாடுபடுகிறார் என்பது, நடுத் தெரு 'டென்னிஸ் கோர்ட் ரோலர்' கிடக்கட்டும், மற்றவர்களில் எத்தனை பேருக்குத் தெரியும்? தெரிந்தால் திருப்பதி உண்டியலில் காலணா விழுமா? அது தொலையட்டும்.

கடவுளிடத்தில் இன்னின்ன குறைகள் தான் தெரிவித்துக் கொள்வது என்ற நிச்சயமே மனிதனுக்குக் கிடையாதா? குதிரைப் பந்தயத்திற்குப் போகிறவர்கள் கூட கடவுளிடம் ஒரு விண்ணப்பத்தைப் பேட்டு விட்டுத்தான் போகிறார்கள் - லாபமும் உண்டு; நஷ்டமும் உண்டு!

முன் காலத்திலெல்லாம் அப்படியில்லை. தேவர்கள் மகாவிஷ்ணுவைவேண்டுவார்கள். சில சமயம் நாரதரிடம்சொல்லிக்கூட சிபார்சு செய்யச் சொல்வார்கள்! அவரும் அலுத்துக் கொள்ளாமல் உதவுவார்! மகாவிஷ்ணுவும் (இக்காலத்துப் பெரிய மனுஷாள் காருக்கு பெட்ரோல் ஆகிறதே என்று கவலைப்படுவது போலில்லாமல்) தனது கருடவாகனத்தில் ஏறிக்கொண்டு ஜாம், ஜாம் என்று வருவார்! கருடன் சக்கரத்துக்கு காற்றடிக்க வேண்டிய வேலையோ, மெஷினுக்கு கிரீஸ் போட வேண்டிய தொல்லையோ இல்லை. ஏதோ பூச்சியோ, புழுவோ, நண்டோ, நத்தையோ பார்த்துக் கொள்வார், கருடாழ்வார்! வேலையை முடித்து விட்டு மகாவிஷ்ணு திரும்பி வந்து கருடனை "ஸ்டார்ட்" பண்ணிப்புறப்படுவார்!

அந்தக் காலத்தில் தேவர்களுக்கும் ரிஷிகளுக்கும் பெரும்பாலும் ஒரே குறை தான் இருக்கும். "அசுரர்கள் எங்கள் யாகங்களை அழிக்கிறார்கள்!" என்பார்கள்.

"பூ! இவ்வளவுதானா? அதற்காகவா இவ்வளவு தூரம் வரவேண்டும்? அரையணா கார்டு போட்டால் ஓடி வர மாட்டேனோ? உங்களுக்கு வந்த தீங்கு எனக்கு வந்ததுபோல் அல்லவா?" என்பார், மகாவிஷ்ணு!

இது கலியுகமல்லவா? குறைகள் பல்வேறு வகையாயிருக்கின்றன. சைகில் ட்யூபில் காற்றுப்போய் விட்டாலுஞ் சரி, சர்க்கார் உத்யோகத்தில் 'பிரமோஷன்' கிடைக்காவிட்டாலுஞ் சரி, எதற்கும் மனிதன் கடவுளை அழைக்கின்றான்!

"அட கடவுளே!," என்கிறான்.

"ஏனப்பா கூப்பிட்டாய்?" என்கிறார்.

உடனே விஷயத்தைச் சொல்கிறான்!

இப்படி பக்தர்கள் அடிக்கடி தொல்லைப்படுத்துவதைச் சகிக்கமாட்டாமல் இற்றைக்குச்சரியாக 73 ஆண்டுகட்கு முன்னர் (செந்தமிழ் நடை கவனிக்க!) மகாவிஷ்ணு ஒரு முடிவு செய்தார். "அடிக்கடி நான் வைகுந்தத்திலிருந்து வருவதானால் என் கருடன் 'ஸ்ட்ரைக்' செய்கிறேன் என்கிறது! கம்யூனிஸ்டுகள் வைகுந்தத்திலும் வந்து கலகம் செய்கிறார்கள் ஆகையால் நான் சங்கு சக்கரத்துடன் மவுண்ட்ரோடில் 'ஹிந்து' பத்திரிகையாக அவதாரம் செய்துவிட்டேன். (சங்குச் சின்னம் இப்பத்திரிகைக்கு இருந்தது என்பதை ஞாபகப்படுத்திக்கொள்க.) இனிமேல் என்னிடம் கூறவேண்டியவைகளை அங்கேயே கூறிவிட்டால்! போதும்!" என்று கூறினார்!

அதன்படியே அன்று முதல் துஷ்டநிக்ரஹ சிஷ்டபரிபாலனவேலைகள்முறையாக நடந்துகொண்டேயிருக்கின்றன!

இப்படி யிருக்கையில் ஒரு நாள், (அதாவது இன்றைக்குத்தான்) மயிலாப்பூர் கபாலீஸ்வரர் கோயிலைப்பற்றி ஒரு பூதேவர் கீழ்க்கண்ட குறையைத் தெரிவித்தார்:—

"14-ந் தேதி முதல் திருவிழா நடந்துவருகிறது. ஆனால் வேதபாராயணம் நிறுத்தப்பட்டிருக்கிறது. கோயில் நிர்

வாதிகள்செயல் கண்டிக்கத்தக்கது. இன்று முதலாவது வேதபாராயணம்தொடங்கப்படுமா?" (பக்கம்-6.பத்தி-1)

மவுண்ட்ரோடு மகாவிஷ்ணுவுக்கு ("ஹிந்து") எவ்வளவு மகத்தான தொல்லைகள் பாருங்கள்? ஹைகோர்ட் நீதிபதி நியமனம் முதல் வேதபாராயணம் வரையில் கவனிக்கவேண்டி யிருக்கிறது.

இந்நேரம் டெலிபோன் மூலம் சர்க்கார் உத்தரவிட்டிருப்பார்கள்! இன்றிரவு முதல் வேதபாராயணம் தொடங்கப்படலாம்! 'ஹிந்து'வின் விரல் அசைந்தால் சர்க்காரின் சப்த நாடிகளும் ஆடுமல்லவா?

வேதபாராயணம் நின்றுபோனதுபற்றி கபாலீஸ்வரர் கவலைப்படக்காணோம்! பூ தே வ ர் கரைந்துபோகிறார்! பாவம்! என்ன பக்தி!

ஒருக்கால் கோட்ஸே இனத்தார் வேதபாராயணம் செய்வதையே வெறுக்கிறார்களோ என்று கருதவேண்டியிருக்கிறது. ஏனென்றால் லால்குடி திருவிழாவில்கூட வேத பாராயணம் நின்றுவிட்டதாம்! மன்னார்குடியிலும், மதுரையிலும் கூடநின்றுவிட்டதாக செய்தி கிடைத்திருக்கிறது.

எவ்வளவு மனவேதனை இருந்திருக்கவேண்டும், நம் பிராமணத் தோழர்களுக்கு! "நம் இனத்தான் செய்த கொடுஞ்செயலுக்குப் பிராயச்சித்தம், நாம் இனி பிராமணத் தன்மையை விட்டொழிக்க வேண்டியதுதான். அதன் ஆரம்பச்செயலாக இனி வேதபாராயணத்தை நிறுத்தி விடுவோம்", என்று சில பிராமணோத்தமர்கள் முடிவு செய்திருக்கிறார்களோ என்னவோ?

வைதீக பூதேவர்களின் இந்த முடிவைப்பாராட்டுகிறேன். நீங்கள் அவர்களைப்பாராட்டுங்கள். நாணயமான நல்ல தொழில்களைத்தேடி இவர்களுக்குக் கொடுங்கள்! எந்த வேலையையும் சுறுசுறுப்பாகச் செ ய் வா ர் க ள்! நல்ல மனுஷர்கள்!

# VI. நவதானியம்.

## 1. தபாற்காரர் துணை !

தபாற்காரர் வேலைநிறுத்தம் செய்துவிட்டபடியால் பாட்னாவில் குப்பைத் தொட்டிகளில் பெருவாரியான கடிதங்கள் கிடந்தனவாம் !

இக்கடிதங்களிலெல்லாம் "ஸ்ரீராமஜெயம்" என்று தலைப்பில் குறித்திருக்கமாட்டார்கள் என நினைக்கிறேன். குறித்திருந்தால் குப்பைத்தொட்டிக்குப் போயிருக்குமா ?

வெளி மாகாணங்கள் எப்படியோ போகட்டும். தமிழ் நாட்டு "ஆஸ்திகர்"களுக்கு இப்போது சோதனைக்காலம். அதாவது, "ஸ்ட்ரைக்" நடிகிறவரையில் "உ" என்று தலைப்பில் போட்டுவிட்டுத்தான் பலர் கடிதம் எழுதுவார்கள், இங்கே! அதற்குப் பிள்ளையார் சுழி என்று பேராம் !

நான் சிதம்பரய்யர் என்ற உபாத்தியாயரிடத்தில் சில வருஷங்கள் படித்தேன். அவர் அடிக்கடி சொல்வார், எங்கள் வகுப்பில்:—"ஏய் ! எவனாவது பரீட்சையில் பிள்ளையார் சுழி போட்டீர்களோ, மார்க்கும் 'சுழி'தான் கிடைக்கும்! உங்கள் பக்தியையெல்லாம் பரீட்சை அறைக்கு வெளியே மூட்டைகட்டி வைத்துவிட்டுப்போங்கள் ! தெரியுமா?" என்று கூறுவார். அவரைப்போல எங்களுக்கும் கேட்ட கேள்விக்குப் பதில் எழுதத் தெரிந்திருந்தால் அவர் சொன்னபடி கேட்டாலும் 100-க்கு 100 மார்க் வாங்கிவிடுவோம். அதுதானே இல்லை ! ஆகையால் பரீட்சையின் போது மேஜையின்மீதாவது பிள்ளையார் சுழி ("உ") போட்டுவிட்டுத்தான் தொடங்குவோம். ஆனால், பிள்ளை

யார் சுழி போட்டவர்களெல்லாம் பரீட்சையில் தேறிவிட்டார்களா?'' என்று கேட்காதீர்கள்.

பிள்ளையார் சுழி மட்டுமல்ல; "ஓம்,'' "கடவுள் துணை'', "முருகன் துணை'', "ஸ்ரீராமஜெயம்",'' என்ற மந்திர வார்த்தைகளில் ஒன்றையாவது எழுதாமல் கடிதம் எழுதத் துணிவு (அறிவு) கொண்டவர்கள் தமிழ்நாட்டில் 100-க்கு 10 பேராவது இருப்பார்களா? சந்தேகந்தான்.

எனக்குத் தெரிந்த காரைக்குடி வாசி யொருவர் 15 நாட்களுக்கு முந்தி ஒரு கார்டு எழுதினாராம்! எழுதி முடித்துவிட்டு, அடியில் "இப்படிக்கு, அண்ணாமலையார் துணை'' என்று தம் வழக்கம்போல் எழுதித் தபாலில் போட்டுவிட்டாராம். சென்றவாரம் என்னைச் சந்தித்த போது, "என்ன இப்படிச் செய்துவிட்டீர்கள்? உடனே புறப்பட்டு வரச்சொல்லி எழுதினால், பேசாமலிருந்துவிட்டீர்களே! உங்களால் முடிந்திருக்கவேண்டிய ஒரு முக்கியமான காரியம் பாழாய்ப்போச்சே!'' என்று உரிமையோடு கோபித்துக் கொண்டார். "கடிதம் எதுவும் வரவில்லையே, அட, பாவமே!'' என்றேன், நான்

ஒரு நிமிஷம் யோசித்தார். மூக்கில் விரல் வைத்தார். "ஆஹா!'' என்றார். வலது கையை உதறினார்.

"என்ன?'' என்று கேட்டேன்.

"அவசரத்தில் உங்கள் விலாசத்தை எழுத மறந்து போனேன்'', என்றார்.

"விலாசம் கிடக்கட்டுமய்யா! "அண்ணாமலையார் துணை'' என்று மறக்காமல் போட்டீர்களோ?,'' என்று கேட்டேன், வேடிக்கையாக. அன்றுமுதல் இன்றுவரையில் என்னோடு பேசுவதில்லை அவர்!

தபாற்காரர் துணை யில்லாவிட்டால் 'கடவுள் துணை' யால் மட்டும் கடிதம் போய்ச் சேரமாட்டேன் என்கிறது

இப்போது பழுத்த ஆஸ்திகர் ஒருவர், (ஏன்? மகான் ரமணரிஷியாகத்தான் இருக்கட்டுமே! அல்லது விநாடி தோறும் கடவுளை அழைக்கும் காந்தியாராகத்தான் இருக்கட்டுமே! பயபக்தியோடு, 'கடவுள் துணை' யென்று மெதுவாகவோ, அல்லது தனிப்பட்ட முறையில் நெருங்கிப் பழகிய காரணத்தால் "முருகன் துணை" யென்றோ, கடிதத்தில் எழுதிவிட்டு, விலாசமும் எழுதாமல், ஸ்டாம்பும் ஒட்டாமல், தபால் பெட்டியில் போட்டுப்பார்த்தால் அப்போது தெரியும்! இவ்வளவு ஏன்? வேண்டும்போதெல்லாம் கடவுளைக் கண்டு விஷயங்களைக் கலந்து பேசி, ஒரு முடிவுக்கு வரும் தோழர் காந்தியாருக்குக்கூட, கடவுள் கையை விரித்துவிட்டாராமே, 5, 6 நாட்களாய்! தபாலே வருவதில்லையாமே, கடவுள் துணை யிருந்தும், தபாற்காரர் துணை யில்லாத காரணத்தால்.

இதற்காக இனிமேல் "தபாற்காரர் துணை" யென்று எழுத ஆரம்பித்துவிடாதீர்கள்! அவர்களுக்கு நீங்கள் துணையாயிருந்து உதவி செய்தால் போதும்! இப்போது மட்டுமல்ல! எப்போதும்! விலாசத்தைத் தெளிவாக எழுதுங்கள், தவறில்லாமல்! ஸ்டாம்பு ஒட்டுங்கள், மறந்துபோகாமல்! பிறகு "கடவுள் துணை" அமோகமாய்க் கிடைக்கும், கார்டுக்கும், கவருக்கும்!

★

## 2. அய்யர் கையில் தீ!

"என்ன சாஸ்திரி! ரொம்ப நாளாய்க் காணோம்? புரோகித வரும்படி எப்படி? உங்களுக்கென்ன யோகம்? ரேஷன் அரிசி ஒரு பக்கம்! திதி கொடுக்கும் முட்டாள்கள் தரும் பச்சரிசி ஒரு பக்கம்! நல்ல வேட்டைதான்!" என்றார், என்னுடன் வந்து கொண்டிருந்த காங்கிரஸ் நண்பர், எதிரே வந்த புரோகிதர் புருஷோத்தம சாஸ்திரியைப் பார்த்து!

"என்ன வரும்படி அப்பா, இந்தக் காலத்திலே! அந்தப் படுபாவி, (சிவ, சிவா, அவன் பெயரைச் சொன்னாலே ஏழேழு ஜென்மத்துக்கும் பாவம்!) பேச்சைக் கேட்டுண்டு எங்களைக் கண்டால் தான் எரிஞ்சு விழறாளே, இந்த சூத்திராள்!..." என்று சாஸ்திரி கூறி முடிப்பதற்குள் பின்னா லிருந்த ஒருவன், பளார் என்று சாஸ்திரி கன்னத்தில் அறைந்தான்!

"சூத்திரன்" என்றால் அர்த்தம் தெரியுமாடா மிலேச்சா?......யார் சூத்திரன்? ஆடுமாடு மேய்த்துப் பிழைக்க வந்த நீ சூத்திரன்! ஏழைகளை ஏமாற்றிப் பிழைக்கும் உன் ஜாதி சூத்திர ஜாதி! இனி அப்படிச் சொல்லாதே! தெரியுமா!" என்று சொல்லிக் கொண்டே சைகிளில் ஏறிக்கொண்டு போய்விட்டான்!

நான் திடுக்கிட்டு விட்டேன்! சாஸ்திரியோ, தலையி லிருந்து நழுவிய திதி வசூல் மூட்டையைக் கையில் பிடித்துக்கொண்டு, "கட்டாலே போறவனே! உன் தலையிலே தீயை வைக்க! ஒரு பிராம்மணனை இப்படி அடிச்சியே! நீ நன்னா இருப்பையாடா!" என்று சைகிள் மறைந்த பிறகு, அந்தத் திக்கை நோக்கிச் சபித்துக்கொண்டிருந்தார்!

காங்கிரஸ் தோழரோ ஒன்றும் புரியாமல் விழித்துக் கொண்டிருந்தார்!

என் நிலைமை கொஞ்சம் சங்கடமா யிருந்தது. சாஸ்திரி யாருக்கு ஏதோ சமாதானம் சொன்னேன்.

"இந்தப் பயலை சும்மா விட்டேனா பாருங்கோ! இதென்ன காங்கிரஸ் ராஜ்யமுன்னு நினைச்சுண்டானா? அவனுடைய சொந்த ராஜ்யமுன்னு நினைச்சுண்டானா? இந்தப் பயலுகளாலேதான் மாதம் 400 ரூபாய் சம்பாதிச் சிண்டிருந்த எனக்கு இன்னிக்கு 300 ரூபா கிடைப்பதுக்கே நடையா நடக்கவேண்டியிருக்கு!" என்று தன் கஷ்ட நிலைமையைக் கூறினார்!

"ஐயோ பாவம்! சாஸ்திரிகளே! நீங்கள் படித்த படிப்பென்ன! இந்த வியாபாரத்திற்குப் போட்ட மூலதனம் கொஞ்சமா? உழைக்கும் உழைப்பு என்ன? இவ்வளவுக்கும் 300 ரூபாய்தானா கிடைக்கிறது? என்னமோ! இதாவது இன்னும் கொஞ்ச காலத்துக்காவது கிடைக்கணுமே! அது போகட்டும்! யார் பெயரையோ, சொன்னாலே பாவம் என்றீரே! அது யார் பெயர்?" என்று கேட்டேன்.

"அவன்தான்!...ராமசா...அட பாவமே! சொல்லித் தொலைச்சூட்டேனே! படுபாவி! எங்கள் வயிற்றிலடிச்சேன்! நன்னா இருப்பானா!" என்றார், சாஸ்திரி!

"அந்தப் பெயரை தினம் லட்சம் தடவை சொன்னால் எவ்வளவோ புண்ணியமென்கிறார்களே! ஆனால் நீங்களோ நினைத்தாலே பாவம் என்கிறீர்களே!" என்று கேட்டேன்.

இதற்குள் காங்கிரஸ் நண்பர் சிகரெட்டை வாயில் வைத்துக்கொண்டு (அந்நிய நாட்டுப் பொருள்களுக்குத் தீவைப்பதற்காக) தீப்பெட்டியைத் தேடினார்! பாக்கெட்டில் பெட்டிமட்டும் இருந்தது; குச்சி யில்லை! கடையை நோக்கிப் போவதற்காகப் புறப்பட்டார்! சாஸ்திரியிடம், இரு கைகூப்பி "நமஸ்தே," என்றார். தலையில் மூட்டை வைத்திருந்த சாஸ்திரி தம் இடது கையை உயர்த்தினார்!

"இவ்வளவு அடிபட்டுங்கூட இன்னும் அந்தப்புத்தி போகவில்லையே! என், வலது கை சுளுக்கியிருக்கோ?" என்று கேட்டேன்.

"இல்லை! பழைய பழக்கம் லகுவிலே போகாது பாருங்கோ! வலது கையில் பிராமணாளுக்கு அக்னி இருக்கோன்னோ! அதைத் தூக்கினால் எதிரில் இருப்பவர் எரிந்து போவர்! அதுக்காகத்தான்!" என்றார், சாஸ்திரி

"அப்படியானால் தீப்பெட்டிப் பஞ்சத்தைப் பற்றி உமக்குப் பயமில்லை! இந்தாரும்! இவரது சிகரெட்டையும் கொஞ்சம் பற்ற வைத்து விடுமே!" என்றேன்!

முறைத்துப் பார்த்தார்! முழங்கால்கள் முட்டிக் கொண்டன! மூட்டையைப் போட்டார்! ஓடினார்! ஓடுகிறார்! இன்னும் ஓடுகிறார்! அதோ ஓடுகிறார்! ஓடிக் கொண்டேதான் இருப்பார்!

★

## 3. "அடியே, மிட்டாய் எடுத்துக்கோடி!"

"அடி! உன்னைத்தானே! அடி கமலு! இங்கே வாடி! ஓடி வாடி! கேட்டையாடி ரேடியோவை? அவரைச் சுட்டுட்டானாம். செத்தே போய்ட்டாராம்! நான் சொன்னேனா இல்லியா?"

"யாரைச் சுட்டுட்டா! னேக்கு ஒன்றும் புரியலையே!"

"யாரையா? காந்தியைத்தாண்டி! அப்பாடி! நம்பளவாளை என்னபாடு படுத்தினோர் இத்தனை வருஷமா? வாடி! வாடி! வாயைத் திறடீ! இந்தா, இந்த மிட்டாயை வாயில் போட்டுக்கோ!"

"ஐயையோ! மாட்டேன்! நீங்கள் சொல்றதைக் கேட்டால் உடலெல்லாம் வெலவெலக்கிறதே! அவர் மகாத்மா ஆச்சே! அவரை எந்தப் பாவி கொன்றானோ?"

"போடி மண்டு! பாவியா? நம்பளவாதாண்டி! எத்தனை சிரமப்பட்டு, வெகு நாளா 'ப்ளான்' போட்டு சேஞ்சிருக்கான், தெரியுமா? அவன்தாண்டி சரியான பிராமணன்! இந்தாடீ மிட்டாய்!"

"ஐய்யையோ! மகா பாபம்! னேக்கு வேண்டாம்! கட்டேலே போவான்! லோக சிரேஷ்டரைக் கொலை செய்தானே! எப்படித்தான் மனம் வந்துதோ?"

"ஏண்டி, னோக்கு என்ன பைத்தியமா பிடிச்சிருக்கு? எங்களையெல்லாம் முட்டாள் என்று நினைச்சீண்டிருக்கியோ? யாராலே நம்பளவாளுக்கு சௌகரியம், யாராலே தொந்தரவு என்பதெல்லாம் சரியா சலிச்சுப் பார்த்துத்தாண்டி எதையும் செய்வோம். இப்போது நம்ப சங்கராச்சாரியார் இருக்கோர்! அவரைப்பற்றி நம்பளவாளிலே ஒருத்தராவது குறை சொல்வாளோ? "பாலிடிக்ஸ்" தெரியாத உன்னைப் போன்ற முண்டங்களுக்கு எப்படிப் புரியும்?' (என்று சொல்லிக் கொண்டே ஒரு ஜாங்கிரியைத் தன் வாய்க்குள் திணித்தார் ஹரிஹர சர்மா!)

"நீங்கதானே மகாத்மாண்ணு சொன்னேள்? படத்திற்கு பூஜை செய்யச் சொன்னேள்! அவர் சொன்னதற்காக ஜெயிலுக்குக்கூட போனேள்! இப்போ ஏன் இப்படி புத்தி தடுமாற்றமாப் பேசறேள்?"

"ஆமா! நீ சொல்றது ரொம்ப நிஜந்தான். நம்பளவாளுக்குப் பிரயோஜனமா இருக்கிறவரையிலே 'மகாத்மா' தான். நம்பளவாளுக்கு இடைஞ்சலா யிருந்தா, உடனே கவிழ்க்க வேண்டியதானேடி?"

"அவர் என்ன செய்தார், பாவம்? ஏதோ தேவமேன்னு அவர் வேலையைப் பார்த்தீண்டுதானே இருந்தோர்?"

"என்ன செய்தாரா? தீண்டாதவனையெல்லாம் கிளப்பி விட்டோர்! நாம் அஜமேத யாகம் செய்தால், அவர் அஹிம்சை, அஹிம்சை என்று சொல்லீண்டு, ஆட்டுப்பால் குடிச்சீண்டிருந்தோர்! அவராலே நமக்கிருந்த மரியாதையே போயிடுத்தே! ஓமந்தூர் ரெட்டியார் ஆட்சியிலே எங்களுக்கெல்லாம் வேலை கிடைக்கலேண்ணு தந்தியடிச்சா, 'நீங்களெல்லாம் கடவுளைப் பற்றி ஆராய்ச்சி செய்து பிறருக்கும் சொல்லுங்கோ,' என்று எழுதினாரே! என்ன நெஞ்சழுத்தம் பாருடி!"

“ ஆமா ! அதுக்காக அவரை இப்படித்தான் துடிக்கத் துடிக்க கொல்றதோ ? பேஷாயிருக்கே! நாளைக்கு நம்பளவா கதி என்னவாகும் ? மானஈனத்தோடே வெளியேபோக முடியுமா ? கொலைகார ஜாதி என்றல்லவா கூப்பிடுவா?”

“போடீ பைத்தியக்காரி ! பிராமணன்தான் கொலை செய்தான் என்ற சங்கதி வெளியே வராமலே அமுத்திப்பிடு வோண்டீ! ரேடியோவிலே சொல்லமாட்டா! எல்லோரும் நம்பளவா! பத்திரிகைக்காரர்கள் எல்லோரும் நம்பளவா ! வேற்று ஆசாமிகள் இரண்டொன்றுகிடக்குதுகள். அதுகள் நம்ப அடிமைகள்! அப்படியே எவனாவது நம் எதிரிகள் வெளியிட்டாலும், நம்மைத்தவிர மற்றவர்கள் 100-க்கு 90-- பேர் படிக்காத முட்டாள் ஜாதிகள்தானே! எவனுக்குத்தெரி யப்போகிறது? அதெல்லாம் தந்திரமா அமுத்திப்பிட லாண்டீ ! ரொம்ப மீறிப்போறது போலே தோணினால், “இதோ பார்! வகுப்புத்துவேஷத்தைக் கிளப்புகிறான்! ஒழி இவனை!” என்று கூப்பாடு போட்டால்போறது! எல்லாம் நம்ப அடிமை சர்க்கார்தானேடீ! உடனே உத்தரவுபோட்டு அடக்கிப்பிடுவா ! நம்ப பத்திரிகைகளும் கூச்சல்போடும் ! அதெல்லாம் பயப்படாதேடீ !”

“ அது சரி ! நம்பளவாளை ஊராரெல்லாம் முறைச்சு முறைச்சு பார்ப்பாளே ! என்ன செய்யறது ?”

“ ஓஹோ! அந்தப்பயமா னோக்கு? அது என்னடீ பிரமாதம்? மரண அநுதாபத்திலேயே நாமே முதன்மையா இருந்து நடத்தவேணும். கூட்டங்களுக்கெல்லாம்போகணும்! கண்ணீர்விட்டுக் கதறணும்! ஊர்வலம் போகணும்! பத்திரி கைக்கு விடாமேஎழுதணும்! இரங்கற் பாட்டுகள் பாடணும்! அதெல்லாம் எங்களுக்குத் தெரியும்டீ, எந்த சந்தர்ப்பத்திலே எப்படி நடக்கிறதுண்ணு !”

‘ ஆமா, புருஷா தான் இப்படி நடிச்சுப்புடுவேள் ! நாங்கள் பொம்மனாட்டிகள் என்ன செய்யமுடியும் ?”

"நீங்களா?...அவர் படத்தைத் தூக்கீண்டு ஊர்வலம் போகணும். 'ரகுபதி ராகவ ராஜாராம்" என்று மூச்சு விடாமே பாடணும். ஒரு மாசத்துக்கு பல்லைக் கடிச்சுண்டு 'ஆக்ட்' செய்துட்டா போதுண்டீ! அப்புறம் முட்டாள் ஜனங்கள் எல்லாத்தையும் மறந்துவிடும். பிறகு நம்ப ராஜ்யந்தாண்டீ! நீ வேணுமானா பாரேன்!"

இந்த உரையாடல் உண்மையாகவே நடந்தது! கணவனும் மனைவியும் பேசிக்கொண்டிருந்ததையே பார்த்தேன்!

"டேய் அயோக்கியா!" என்று கத்தினேன்.

"அப்பா, என்ன இது? தூக்கத்திலே உளறுகிறீர்கள்? பேப்பர் வந்துட்டுது, எழுந்திருங்கள்," என்று எழுப்பினான், என் பையன்.

கண்ணைத் துடைத்துக்கொண்டேன்; கனவுஎன்பதை உணர்ந்தேன்!

[கனவுப்படியே நடந்ததா? —"கு-சி"]

★

## 4. ஓம்! ஸ்ரீ மஹாத்மா நமஹ!

"ஏண்டா என் பிராணனை எடுக்கிறே? ஏதாவது ஒரு வேலைக்குப் போய்த் தொலையக்கூடாதா? பீ. ஏ. வரையில் படிச்சுட்டு இப்படி ஏண்டா ஊர் சுத்தீண்டிருக்கே!"

"என்னை என்னப்பா பண்ணச்சொல்றேள்? எந்த ஆபீசுக்குப்போனாலும் வேலை காலி இல்லை என்கிறா. இந்தப்பாழாப்போன கம்யூனல் ஜி. ஒ. ஒழிஞ்சால்தான் ஏதாவது வேலைகிடைக்கும். பிரகாசம்காரு மந்திரியாய் வருகிறவரையில் இந்தப் பீடை ஒழியாதுபோலிருக்கே! ஸி. ஆர். வந்தாலும் ஒழியுமேண்ணுபார்த்தா அவர் அக்கடாண்ணு போய் கவர்னரா உட்கார்ந்துட்டார்! நம்மளவா கதி என்னாவது என்கிற கவலைகூட இல்லையே! அவரை

இப்படிச் செய்தால் மற்றவாளைப் பற்றி என்ன சொல்ல முடியும் ?''

"நீ சொல்றது கொஞ்சங் கூட னேக்குப் பிடிக்கலே! நீ எண்டா வேலைக்குப் போகாமே தெண்டச்சோறு தின்னுண்டு இருக்கேண்ணு கேட்டா, வி. ஆர். கவர்னராய்ப் போயிட்டார் என்கிறையே ! அடுத்தாத்து கிட்டு வைப்பார் ! என்ன சமர்த்து ! இண்டர்மெடியட் தான் படிச்சான் ! திவான்பகதூர் சு. மு. செட்டியாரைப் பிடிச்சு 150 ரூபாயிலே பாங்கிலே ஒரு நல்ல வேலையை வாங்கீட்டானே ! எத்தனையோ சூத்திரன்கள் எம். ஏ.—பீ. ஏ பாஸ் பண்ணினவனெல்லாம் அப்ளிகேஷன் போட்டிருந்தான்களாம். அவனுக் கெல்லாம் இல்லாமே கிட்டுவுக்குத் தானே கிடைச்சுது ?''

"அதெப்படிக் கிடைச்சுது ! ஓஹோ ! அங்கே கம்யூனல் ஜி. ஓ. இல்லையோன்னோ; அதனாலேதான் !''.

"போடா, பே ! புத்தி இருக்கிறவா எப்படியும் பிழைச்சுக்குவா. எந்த ஜி. ஓ. இருந்தாலென்ன ? திடீரென்று நல்ல ஆள் கிடைக்கலேண்ணு சொல்லிவிட்டு டெம்பரரியா மூணு மாசத்துக்கு முதலிலே நுழைச்சுப்பிடுவா! அப்புறம் நல்ல ஆள் கிடைக்கிறபோது, அவனுக்கு அநுபமில்லைண்ணு சொல்லிப்பிடுவா ! இப்படி நீட்டிண்டே போய் எத்தனையோ ஆபீசுகளிலே நம்பளவா உத்யோகஸ்தர்கள் எமகாதக வேலை செய்தீண்டிருக்கா ! னோக்கு என்னடா தெரியும்? வெறும் புஸ்தகப் பூச்சி தானே! அது கிடக்கட்டும். அந்த சு. மு. செட்டியைப் போய்ப்பார்த்துக் கேளேன். ஆரம்பத்திலே 30—40 ரூபாயிலே புகுந்திண்டாக் கூடப் போறமே ! அந்த பாங்க் செக்ரட்டரி இருக்கானே, அவனைப் போய்க்கேளேன் ! ஆடுதுறை அண்ணாசாமி அய்யரின் அத்திம்பேர்தானே அவன் ! கேட்டுப்பாரேன் !''

"அதெல்லாம் முடியாது அப்பா! 30-ம் 40-ம் வாங்கினா சிகரெட்டுக்குக் கூட (சும்மா, பேச்சுக்கு சொல்றேன்! நான் சிகரெட்குடிப்பதே யில்லை) காணாது அப்பா! நான் ஒரு புதுயோசனை செய்திருக்கேன். இது வரையில் யாரும் செய்யாதயோசனை! அது முடிஞ்சுதோ! அடாடா! தாராளமான பணம்! நல்ல செல்வாக்கு! நல்ல மரியாதை!"

"என்னடாப்பா, உன் புது யோசனை?"

"மகாத்மா இருந்தாரோன்னோ..................

"டேய்! நிறுத்து! போதும்! அதுதான் ஆர். எஸ். எஸ்., ஆர். எஸ். எஸ். என்று ஆட்டமா ஆடி தலைக்கு வந்தது தலைப்பாயோடு போச்சே! நம்பளவா தலையிடாமே இருந்திருந்தா இந்த சர்க்காரிலே நீயும் நானும் இன்னும் ஜெயிலுக்குள்ளேதானே இருக்கணும்! போதும்! போதும்! அவர் பேரையே நம்பளவா கொஞ்ச காலத்துக்கு உச்சரிக்கக்கூடாது, தெரியுமோ!"

"என்ன அப்பா இப்படி அவசரப்படுறேளே! மகாத்மாதான் போய்ட்டாரே! நம்பளவாளைத்தான் விடுதலை செய்துட்டாளே! இனிமேல் மகாத்மா பெயரைச் சொல்லியே பல நல்ல காரியங்களைச் செய்வதென்று யோசிச்சிண்டிருக்கேன். அதிலே முதல் திட்டம் என்ன தெரியுமோ? பிள்ளையார் கோவில் மாதிரி ஒரு சின்னக் கோவில் கட்டறது; அதற்கு பத்தாயிரம் ரூபா வேணும் என்று சொல்லி நோட்டீஸ் போட்டா, ஒரே வாரத்திலே வசூலாகிவிடும். எவனாவது கொடுக்க மாட்டேனுண்ணு சொன்னா அவனை மகாத்மா விரோதி, தேசத் துரோகி என்று சொல்லி விடலாம். பத்தாயிர ரூபாய் வசூல் செய்து மூவாயிர ரூபாயில் கோவிலைக் கட்டிட்டாப் போறது! கோயிலுக்குள்ளே மகாத்மா விக்ரகத்தை பிரதிஷ்டை செய்து, ஏதாவது நல்ல வேலை கிடைக்கிற வரையில் நானே அர்ச்சகராகக் கூட இருப்பதாக முடிவு செய்திருக்கேன். நீங்கள் நன்னா சமஸ்கிருதம் படிச் சவராச்சே! இதோ

பாருங்கள்! ஒரு காந்தி நாமாவளி கூட எழுதி வெச்சிருக்கேன்! படிக்கட்டுமா?......(பையன் படிக்கின்றான்)—

## ஓம்!!!

(1) ஓம். ஸ்ரீ மஹாத்மா காந்தியே நமஹ! (2) ஓம். ஸ்ரீ ஸதீ கஸ்தூரீ நாதாய நமஹ! (3) ஓம். ஸ்ரீ பூலோக விபாகராய நமஹ! (4) ஓம். ஸ்ரீ சாந்த ஸ்வரூபாய நமஹ! (5) ஓம். ஸ்ரீ ப்ரபஞ்ச பூஜித பாதாய நமஹ! (6) ஓம. ஸ்ரீ நிர் விசாராய நமஹ! (7) ஓம். ஸ்ரீ ஜகத்ஜ்யோதி ஸ்வ ரூபாய நமஹ! (8) ஓம். ஸ்ரீ ஸ்வேதத் வீபாஜன ஸேவிதாய நமஹ! (9) ஓம். ஸ்ரீ ஸர்வஜன வாத்ஸல்யாய நமஹ! (10) ஓம். ஸ்ரீ நிராஹாரவிர்த பிரேமிதாய நமஹ! (11) ஓம். ஸ்ரீ ஸபர்மதி ஆஸ்ரமநிவாஸாய நமஹ. (12) ஓம். ஸ்ரீஸத்யாக்ரஹ வ்ரத தீக்ஷாப நமஹ! (13) ஓம். ஸ்ரீ அஜஹீர ப்ரேமிதாய நமஹ! (14) ஓம். ஸ்ரீ ஜகத்ரக்ஷண தீக்ஷிதாய நமஹ! (15) ஓம். ஸ்ரீ காராக்ருக பிரேமிதாய நமஹ! (16) ஓம். ஸ்ரீ ஜீவன் முக்தி ஸ்வரூபாய நமஹ! (17) ஓம். ஸ்ரீ அபேதஞான மூர்த்தியே நமஹ! (18) ஓம். ஸ்ரீ காதீவஸ்திரப் பிரேமிதாய நமஹ! (19) ஓம். ஸ்ரீ ஹரிஜன ரக்ஷக தீக்ஷாய நமஹ! (20) ஓம். ஸ்ரீ லோக பாவனே ஸ்வரூபாய நமஹ! (21) ஓம் ஸ்ரீ சருதயுக தர்மதேவதா ஸ்வரூபாய நமஹ! (22) ஓம். ஸ்ரீ த்ரேதாயாம் ராம சுந்தராய நமஹ! (23) ஓம். ஸ்ரீ த்வாபரே கிருஷ்ண ஜன்மாய நமஹ!

எப்படி இருக்கு பார்த்தேளா? புலிக்குப் பிறந்தது பூனையாயிடுமா?''

"பலே பேஷ்! நன்னா யிருக்கே! பெகு சீக்கிரத்திலே அஷ்டோத்திரம் வேணுமானாலும் எழுதித்தாரேன்! ஆனால் 24 ஆவது நாமாவளியாக இதையும் சேர்த்துக்கோ! நம்ப பெரியவாளை மறக்கலாமா?

"ஓம்! ஸ்ரீ! கோட்ஸே ஸம்ஹார மோக்ஷ ப்ரேமிதாய நமஹ!"

★

## 5. அசெம்பிளியில் அப்பளம் போடலாம்!

சென்னை சட்டசபையில் தோழர் வைத்தியநாதய்யர் தக்ளியில் நூல் நூற்றுக் கொண்டிருந்தாராம்! தோழர் ரஸாக் என்பவர், தலைவரைப்பார்த்து "சட்டசபையில் நியூஸ் பேப்பர் படிக்கக் கூடாதென்றால், தக்ளியில் மட்டும் நூற்கலாமா,?" என்று கேட்டாராம்! நூற்கக் கூடாதுதான் என்று உத்தரவிட்டாராம், தலைவர்.

"நான் மந்திரிசபையில் கதர்த்திட்டத்தைத்தானே நிறை வேற்றிக் கொண்டிருக்கிறேன்; அங்கத்தினர் பேசுவதைக் காது தானே கேட்கிறது; வேலை செய்வது கைதானே!" என்றாராம், வாதத்தில் நிபுணராம் வைத்தியநாதய்யர்வாள்!

பேஷான ஆர்குமெண்ட்! வக்கீல்ஸார் கேட்கும்உறுப்பு காதுதான் என்பதைக்கூட சட்டசபைத் தலைவர் மறந்து விட்டாரே! காது தவிர இதர உறுப்புக்கள் என்ன செய்து கொண்டிருந்தால், என்ன? பேப்பர்படிப்பதுகூடத் தவறில்லை யல்லவா? காதா படிக்கிறது? கண்தானே படிக்கிறது? கண் பேப்பரைப் படித்துக்கொண்டும், கை தக்ளியைச் சுற்றிக் கொண்டும், வாய் 'ராம், ராம்' என்று ராம்துன் பஜனை செய்து கொண்டும், (சத்தம்போடாமல்தானே!) கால் ஆடிக் கொண்டும், ('காலாடி' என்று சேர்த்துப் படிக்கவேண்டாம்!) அதே சமயத்தில் காது சட்டசபை நடவடிக்கைகளைக் கேட்டுக்கொண்டும், இருப்பதில் தவறென்ன என்று கேளுங் கள், ஒரு நாளைக்கு!

" பார்லிமெண்ட் முறைக்கு இதெல்லாம் ஏற்றதல்ல," என்பார் தோழர் சிவஷண்முகம். பார்லிமெண்ட் முறை என்பது வெள்ளையர் ஏற்றுமதிச் சரக்கு! நாம்தான் வெள் ளையரை விரட்டிக்கொண்டிருக்கிறோமே! ஆகையால் நாம் ஏன் அவர்கள் சட்டதிட்டங்களை அடிமைத்தனமாகப் பின்பற்றவேண்டும்?" என்று அதட்டிக் கேளுங்கள்!

என்னைப் பொருத்தவரையில், நீங்கள் தக்ளி மட்டு மல்ல; கைராட்டினத்தையேகூட, சட்டசபைக்குக்கொண்டு போய் வைத்து, நூல் நூற்றுக் கொண்டிருக்கலாம் என்று தான் சொல்வேன். ஏன் தெரியுமா?

"காங்கிரஸ்காரர்கள் எவரும் மந்திரிசபையை எதிர்த்துப் பேசக்கூடாது, வெட்டுப் பிரேரணைகளிலும் பேசக் கூடாது," என்று தோழர் பிரகாசம் உத்தரவு போட்டிருக்கிறாரே! ஆனால் அவர் எவ்வளவோ தேவலாமே! வெட்டுத் தீர்மானம் தவிர மற்ற சமயங்களிலாவது பேசலாம் என்று ஒப்புக் கொண்டிருக்கிறாரே!

தோழர் ஆச்சாரியார் காலத்தில் அதுவுமில்லையே! கொட்டாவி விட்டால்கூட 'பேசுவதற்கு வாய்திறப்பதாகக் கருதி முறைத்துப்பார்ப்பாரே என்று நடுங்கிக்கொண்டு பின் பக்கம் திரும்பி, வாயில் துணியை வைத்துக்கொண்டு தானே காங்கிரஸ் மெம்பர்கள் கொட்டாவி விட்டார்கள்!

நிலைமை இப்படியிருக்கும்போது, 6 மணிநேரம் சும்மா உட்கார்ந் திருப்பதென்றால், "அந்தத்திறமரிது, சத்தாகி யென் சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே, தேசோமயானந்தமே" என்பதை சட்டசபைத் தலைவர் மறந்து விட்டாரோ?

வெளியே போய் 'செக்ரட்டேரியட்' கட்டிடத்தை யாவது சுற்றிப் பார்க்கலாமென்றால், எத்தனை தடவைதான் பார்க்கமுடியும்? ஹோட்டலில்போய் அடிக்கடி 'காபி' சாப்பிடலாமென்றால், 'செக்ரட்டேரியட்' ஹோட்டல் காபியோ, சர்க்கரை, பால், காப்பித்தூள் ஆகிய மூன்றையும் துறந்த முனிபுங்கவராக விளங்குகிறது!

ஆகையால், தோழர் வைத்தியநாதய்யர் தக்ளிசுற்றியதில் தவறில்லைதான்! அவர் தோழர் காந்தியாருக்கு ஒரு தந்தியைத் தட்டி விட்டிருந்தால் தெரியும், சிவஷண்முகம் படும்பாடு!

"அது சரி! தக்ளி சுற்றத் தெரியாதவர்கள் என்ன செய்வது?" என்று கேட்கலாம், சில அங்கத்தினர்!

அது அவரவர் இஷ்டம்! தையல்வேலை தெரிந்தவர்கள் சிறு தையல் மிஷின்களைக் கொண்டுவந்து எதிரில் வைத்துக் கொண்டு தைக்கலாம்! பெண் அங்கத்தினர்களோ, (சேர்ந்து மட்டும் உட்காராமல்) அப்பளம் போடலாம்! ஊறுகாய் போடுவதற்கு எலுமிச்சங்காய் நறுக்கலாம்! வத்தலுக்குத் தேவையான கத்தரிக்காய் அரியலாம், ரொம்பக் குப்பை யாக்காமல்! நவீன நாகரீக நாரீமணிகளா யிருப்பவர்கள் ஜாக்கெட்டு பூவேலை செய்யலாம்!

பக்திமான்களா யிருப்பர்கள் ஏதாவது ஒரு படத்தைக் கொண்டுவந்து எதிரே வைத்துக் கொண்டு தினந்தோறும் லட்சார்ச்சனை செய்யலாம்! இலையோ, பூவோ கிடைக்கா விட்டால் எதிரே வைத்திருக்கும் பேப்பர்களைத் துண்டு துண்டாக கிழித்துப்போடலாம்! இவ்வாறு எவ்வளவோ வழிகள் இருக்கின்றன, சட்டசபையில் பொழுது போக்கு வதற்கு!

மனமுண்டானால், வழியுண்டு! ஆனால் கதர்த் திட்டத் திற்கு அடிப்படையான தக்ளியைச் சுற்ற வேண்டாமென் றாரே, சபைத் தலைவர்! இதை நினைத்தாலே, என்ன பொங்கு பொங்குகிறது தெரியுமா?

★

## 6. பஞ்சாங்க ப்ரொபஸர் பஞ்சாபிகேசய்யர்!

"ஹிஸ்டரி ப்ரொபஸர், இங்கிலீஷ் ப்ரொபஸர், கணக்கு ப்ரொபஸர், கெமிஸ்ட்ரி ப்ரொபஸர்—என்றெல்லாம் இருப் பதுபோல, என்னை ஏன் பஞ்சாங்க ப்ரொபஸர் என்று நீங் கள் அழைக்கக்கூடாது?" என்று கேட்டார், பழைய பஞ் சாங்கத்தையும் தர்ப்பைக் கட்டையும் அக்குளில் (அடைப் பத்தைப்போல) வைத்திருந்த பஞ்சாபிகேசய்யர்.

"ஆஹா! கட்டாயம் அப்படித்தான் அழைக்க வேண்டும். இத்தனை நாளாய் அன்னிய சர்க்கார் இருந்தது பாருங்கோ! அதற்கு உங்கள் படிப்பும் பரந்த அறிவும் எப்படித் தெரிய முடியும்? அது தான் ஆகஸ்ட் 15-ந்தேதியுடன் தொலைஞ்சுதே!"

"ஆமாம், சனியன்! ஆகஸ்ட் 14 நடு இராத்திரியில் அதிகாரத்தை வாங்கிக் கொள்வது நல்லது என்று கூட நான்தான் நல்ல வேளை பார்த்துச் சொன்னேன். நீங்கள் தான் சு. ம. ஆச்சே! நம்புவீர்களோ என்னமோ?"

"சே! சே! நம்பாமலா இருப்பேன்! நல்ல வேளை பார்த்து அதிகாரத்தை வாங்கியதால் தான் இவ்வளவு ஜோராய் ஆட்சி நடக்கிறது? இல்லாவிட்டால் மற்ற நாடுகளில் உள்ளதுபோல, கொலை, கொள்ளை, பெண் சோரம், குத்து, வெட்டு, பஞ்சம், பட்டினி, சண்டை சச்சரவு, மந்திரி பதவி வேட்டை, கள்ளமார்க்கெட், பணக்காரக் கொள்ளைக் கூட்டம், போன்ற அக்கிரமங்களெல்லாம் நடக்காதா? ஆனால் இன்னும் கொஞ்சம் ஜாக்கிரதையாக நாள் பார்த்திருந்தால், நம் மகாத்மா கூடக் கொல்லப்பட்டிருக்க மாட்டார்!"

'ஓஹோ! கிண்டல் செய்கிறீரோ? அதெல்லாம் நம்மகிட்டே முடியாது ஸார்! நான் ஹிந்து மகாசபை யோன்னோ! நான் பார்த்து நாள் வைத்தால் என் எதிரிகளையும் அழிப்பதற்கான வகையிலே தானே வைப்பேன்!"

"ஆஹா! பேஷாச் செய்யுங்கள்! இந்தத் தொடை நடுங்கி அரசாங்கம் உள்ள வரையில் உங்கள் பாடெல்லாம் யோகந்தான் அய்யரே! இனிமேல் உங்க ராஜ்யம் வந்து விட்டதினாலே உங்களுக்கெல்லாம் அதிக மதிப்புக்கூடத் தருவார்கள்! உங்கள் மனமெல்லாம் குளிர்வதற்காகவே காந்தியார் சாம்பலை "புண்ணிய நீரில் கரைத்தார்கள்! இந்தியாவின் முதல் கப்பலை மிதக்கவிடும் போதுகூட வேதம் ஓதச் சொன்னார்கள்! இனிமேல் சட்டசபையில் கூட ஓமம் வளர்க்கச்

சொல்வார்கள்! (ஆனால் சிகெரட் புகைக்கக் கூடாது என்பது சிவ ஷண்முகனார் உத்தரவு) உங்களைப்போல் 4 பேர் மந்திரிகளாக வந்துவிட்டால் பள்ளிகளில் மூன்றாவது வகுப்பு முதல் பஞ்சாங்கத்தை கட்டாய பாடமாகக்கூட வைக்கலாமே! இந்த வெள்ளைக்காரன் ஆட்சி வந்து நல்லது கெட்டது கூட இல்லாமல் போயிட்டுதே! சரியா 10 மணிக்கு பள்ளிக்கூடத்துக்கு வர வேண்டுமாம்! சரியாய் 11-மணிக்கு ஆபீஸ்களுக்கும் கோர்ட்டுகளுக்கும் வரவேண்டுமாம்! குறிப்பிட்ட நேரத்தில் ரயில் வண்டியும் விமானமும் புறப்பட்டு விடுகின்றன! எங்கு பார்த்தாலும் ஒரே நாஸ்திகம்! ஒரே சு. ம.!

பஞ்சாங்கத்தைக் கட்டாய பாடமாக்கி விட்டால், ராகு காலம், சகுனம், வாரசூலை, எமகண்டம், யோக, பட்சி சாஸ்திரம், தசாபலன், கவுளி சாஸ்திரம் எல்லாம் பார்த்து அவரவர் தன் வேலைக்கு வரலாம், போகலாம்! பஞ்சாங்கத்தின்படியே வேலைகூடச் செய்யலாம்!

இந்த முறை ஏற்பட்டால் எவ்வளவு சௌகரியம் பாருங்கள்! ஒரு நீதிபதி, "ஏ! குற்றவாளியே! உனக்கு மரண தண்டனை விதிக்கிறேன்!" என்று தீர்ப்புக் கூறுவார். அந்தச் சமயத்தில் குற்றவாளியின் வலது காதில் ஒரு பல்லிவிழும்.

"நீதிபதி யவர்களே! இதோ பார்த்தீர்களா? வலது காதில் பல்லி விழுந்ததை!" என்று கூறுவான்.

உடனே நீதிபதி மேஜை மீது வைத்திருக்கும் பஞ்சாங்கத்தைப் புரட்டுவார். அதில் "வலக்காது—தீர்க்காயுசு" என்று குறிப்பிட்டிருக்கும். "சரி! உன்னை விடுதலை செய்கிறேன்! என்று தீர்ப்பளிப்பார்!". என்று கூறினேன் அய்யரிடம்.

"நீங்கள் உண்மையாகக் கூறினாலும் சரி! கிண்டலாகச் சொன்னாலும் சரி! இனிமேல் இந்த நாட்டில் பஞ்சாங்க ஆட்சி தான்! அதாவது, எங்கள் ஆட்சிதான்! அதற்கு ஒத்துவராத எந்த ஆட்சியையும் நொடிப்போதில் கவிழ்த்து விடுவோம்! நாங்கள் பஞ்ச தந்திரம் கற்றவர்கள், தெரியு

மோன்னோ! அது கிடக்கட்டும். நீங்கள் என்ன தான் சு. ம. பேசினாலும் பஞ்சாங்கத்தில் கூறியிருப்பதைப் பொய் என்று நிரூபிக்க முடியாது!'' என்றார்.

"அதெப்படி முடியும்? உங்கள் அடைப்பத்தை அவிழ்த்து அதைக் கொஞ்சம் எடுங்கள்,'' என்றேன்.

பஞ்சாங்கத்தை என் கையில் தந்தார். முதல் பக்கத்தைப் படிக்க ஆரம்பித்தேன்! அவர் போய்விட்டார், பஞ்சாங்கத்தைத் திருப்பி வாங்கிக் கொள்ளாமலே! ஆகையால் உங்களிடம் படித்து விடுகிறேன், கேளுங்கள்:—

## சர்வசித்து வருஷத்துப் பலன்

"சர்வசித்து தன்னில் தலத்தில் பலவும்
இருபதினெட்டு வித்தும் ஓங்கும்—பெருமையுடன்
மிகக விளைவு உண்டாம், மென்மேலும்மாரி உண்டாம்,
தக்க சுகம் பெருகுந்தான்''

சர்வசித்து வருஷம் முடிவதற்கு இன்னும் 23 நாட்கள் தான் இருக்கின்றன! (16—3—48-ல் எழுதப்பட்டது)

1. 36 வித்துகள் ஓங்கும்.
2. மிக்க விளைவு உண்டாகும்.
3. மேலும் மேலும் மழை பெய்யும்.
4. எங்கும் சுகம் பெருகும்.

இவ்வளவு உரித்து உரித்து (வெங்காயத்தைப் போல), புட்டுப் புட்டு (இட்லியைப்போல) கூறியுங்கூட நீங்கள் பஞ்சாங்கத்தை நம்பவில்லையென்றால் நான் தான் என்ன செய்ய முடியும்? பஞ்சாங்க ப்ரொபஸர் பஞ்சாபிகேசய்யரைக் கண்டால் கேட்டுப் பாருங்கள்! எங்கே காணப்போகிறீர்கள்? அவர் தான் "அண்டர் கிரவுண்ட்'' (பூமிக்குள் அல்ல, தலை மறைவாக!) போய்விட்டாரே! ஆனாலும் பொறுத்திருங்கள்! என்றைக்காவது தலை காட்டாமலா போய் விடுவார்?

★

## 7. தேசீயத்தைக் காய்ச்சி...

"சூத்திரன் வேதத்தைக் கேட்பானேயானால் அவன் காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றவேண்டும்," என்று மனு தர்மம் கூறுகிறது!

அந்தப் பாச்சா இப்போ பலிக்காது! "சூத்திரனிலும் சூத்திரனான," மாக்ஸ்முல்லர் வேதத்தைப் படித்தான். இங்கிலீஷில் மொழி பெயர்த்தான்! அவன் காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றாத காரணம் என்னவோ? இப்போது "மிலேச்சன்" என்றாலும், பழைய வரலாற்றுப்படி ஆரியர் இனத்தான் தானே என்று நினைத்தோ? அல்லது ஈயத் தோட்டாவை நெஞ்சுக்குள் பதிய வைப்பானே என்று பயந்தோ? போகட்டும்! தாயாதிகள் விஷயம்!

ஈயத்தைக் காய்ச்சும் நினைப்பு மனுவோடு நின்று விட்டதா? அதுதான் இல்லை! இப்போது புது ஈயத்தைக் கண்டு பிடித்திருக்கிறது, நம்மைப் பீடித்திருக்கும் பார்ப்பனீயம்! அதற்குப் பெயர்தான் தேசீயம்! இதை நன்றாகக் காய்ச்சித் திராவிடன் காதில் ஊற்றுகிறார்கள், அவன் தூங்கும்போது! ஊற்ற வருவதற்கு முந்தியே விழித்துக்கொண்டால் பிழைத்தான்! இல்லாவிட்டால் பார்ப்பனீயத்திற்கு அடிமையாக வேண்டியதுதான், கம்பன் மாதிரி!

பத்திரிகையில் ஒரு செய்தி படித்தேன். திருச்சி தேசீயக் கல்லூரிக்கு (நேஷனல் காலேஜ்) வைரவிழா நடத்தப் போகிறார்களாம்! அதற்கு நிதி வேண்டுமாம்! இந்தக் கல்லூரியைப்பற்றி எனக்கும் கொஞ்சம் தெரியும். சொல்கிறேன்.

கொடைவள்ளல் பெத்தாச்சி செட்டியார் என்று ஒருவர் இருந்தாரே! அவர் சங்கீத உலகத்திற்குப் பணத்தை வாரி இறைத்தது போலவே, கல்விக்காகவும் வாரி இறைத்தார். அந்த நீர்ப்பாய்ச்சலால் முளைத்த மரம்தான் திருச்சி நேஷனல் காலேஜ். அதன் ஒவ்வொரு செங்கல்லும், ஒவ்வொரு

பிடி சுண்ணாம்பும் பெத்தாச்சி செட்டியாரின் பணத்தால் வாங்கப்பட்டது. யார் பணமாயிருந்தால் என்ன? மூளை குறைந்தவன் கோவில் கட்டினால், மூளை மிகுந்தவன் குடி புகுந்து விடுகிறான்! புற்றெடுப்பது கறையான் தானே! ஆனால் குடியிருப்பது நல்லபாம்பல்லவா?

தேசியக் கல்லூரிக்கு செட்டியார் பணம் கொடுத்தார். ஆனால் அதை அநுபவிப்பது பூதேவர் கூட்டம், தேசியத்தின் பேரால்!

இந்தக் கல்லூரிக்கு நிர்வாகக் கமிட்டியொன்று இருக்கிறது. அதில் இரண்டு பேர் தவிர, பாக்கி எல்லோரும் உள்நாட்டு வெள்ளையர்! இதில் திராவிடரும் பங்குபெற வேண்டுமென்று 2 வருஷங்களுக்கு முந்தி கோயமுத்தூர் பணக்காரர்கள் முண்டிப் பார்த்தார்கள். என்ன ஆச்சு தெரியுமா?

வெளிநாட்டு வெள்ளையன் இந்தியாவை விட்டாலும் விடுவான்! இந்த வெள்ளையனா தன் இடத்தை விட்டு விடுவான்? "புதிய அங்கத்தினர்களைச் சேர்க்கமுடியாது," என்று சொல்லி விண்ணப்பங்கள் திருப்பி யனுப்பப்பட்டன.

நிர்வாகக் கமிட்டி மட்டும் இவர்களின் ஏகபோக மிராசு என்று நினைத்து விடாதீர்கள்! உபாத்தியாயர்கள் அத்தனைபேரும் ஆரியர்களே! (ஒருக்கால் ஒரே ஒரு தமிழ்ப் பண்டிதர் மட்டும் இருக்கிறாரோ, என்னவோ!)

20 வருஷங்களுக்கு முந்தி தோழர் காந்தியார் வந்திருந்தார், அந்தக் கல்லூரிக்கு! அப்போது சமஸ்கிருதத்தில் வரவேற்பு வாசித்தளித்தார்கள், அவருக்கு. 'இந்த மொழி எத்தனை பேருக்குத் தெரியும்? கைதூக்குங்கள்!" என்றார் காந்தியார். சமஸ்கிருத ஆசிரியர் மட்டும் கைதூக்கினார். "உங்களுக்குத் தெரியாத பாஷையில் படித்துக்கொடுக்க வெட்கமாயில்லையா?" என்று கேட்டார். பல்லை இளித்தார்கள், எல்லோரும்.

இந்தத் தேசியக் கல்லூரிமட்டுந்தான் இப்படி இருக்கிறது என்று நினைக்காதீர்கள்! எந்த ஊரிலாவது "தேசியப் பள்ளிக்கூடம்" என்ற பேரால் ஒன்று இருக்குமேயானால், அது ஒரே பார்ப்பனீய மயமாயிருப்பதைக் காணலாம், நம் மக்களுக்குக் கண்ணிருந்தால்.

தேசியத்திற்கும் பார்ப்பனீயத்திற்கும் உள்ள இரத்தக் கலப்பு எவ்வளவு அதிகம் என்பதை இப்போதாவது தெரிந்து கொண்டீர்களா?

இம்மாதிரி தேசியப் பள்ளிக்கூடங்களுக்குப் பண உதவி செய்யும் திராவிடன் தன் தலையில் ஒரு கூடைமண்ணைப் போட்டுக் கொள்வதோடு, தன் குழந்தைகள் வாயிலும் மண்ணைப்போட்ட புத்திசாலியாகிறான் என்பதைப் பெத்தாச்சி செட்டியார் மூலமாகவாவது தெரிந்துகொள்ள வேண்டாமா?

இதைப் படிப்பவர்கள், எடுத்துச் சொல்லுங்கள், திராவிடப் பணமூட்டைகளுக்கு!

★

## 8. காபிக் காவடி !

"கந்தா ! கடம்பா ! கார்த்திகேயா ! கருணாகரா ! காபிக் கொட்டை விலை ஏறி விட்டதேடா! என் செய்வேன் ? ஏது சொல்வேன் ? இறைவா !" என்று புலம்புகிறார்கள் காபிக் குடியர்கள்.

காபிக் கொட்டை பருத்திக் கொட்டை விலை (!) விற்கிறது ! இரண்டுமே அகப்படுவதில்லை பள்ளிக்கூடத்தில் 'ட்ரில் கிளாஸில்' ட்ரில் மாஸ்டரை ஏமாற்றி விட்டு, கால் கட்டை விரலில் பொய்யாகத் துணியைச் சுற்றிக்கொண்டு உட்கார்ந்திருந்தவர்களெல்லாம் இன்றைக்கு (டிரில் வாத்தியார்கள் சாபமாக இருந்தாலும் இருக்கலாம்) ஒருவர் பின் ஒருவராக (கியூ வரிசை) தெருவில் நின்று கால் பவுண்ட்

காபித் தூள் (பொட்டலத்தின் மேல் அப்படித்தான் அச்சிட்டிருக்கிறது) வாங்கிப் போகும் காட்சி கண் கொள்ளாக் காட்சி! "என் பேச்சைக்கேட்காவிட்டால் நீ நாலு பேர் சிரிக்க நடுத் தெருவில் நிற்கத்தான் போகிறாய்'' என்று பெரியவர்கள் திட்டுகிறார்களே! அது அப்படியே பலித்து விட்டது!

'டேய்! ஏண்டா இந்தக் காபியைக் குடித்துத் தொலைக்கிறாய்? உடம்புக்கு கெடுதீடா! நல்ல நீர் மோர்! எலுமிச்சம் பழத் தண்ணீர்! கொத்தமல்லிக் கியாழம்! பசும் பால்! பழஞ் சோற்று நீர்! சுகந்தரும் இளநீர்! எத்தனையோ இருக்கே! ஏதாவது ஒன்றைக் குடிச்சுத் தொலைக்கப்படாதா?'' என்று என் அப்பா தலை தலையாய் அடித்துக் கொண்டார்! என் அம்மா திருட்டுத்தனமாய் எனக்கு காபியைக் கொடுத்து வளர்த்தார்! (பையன்களைக் கெடுப்பது அவர்களுடைய தாய்மார்கள் என்பது பொய்யா மொழியை விடப் பல மடங்கு பொய்யா மொழி!) அதன் பலனை இப்போது அநுபவிக்கிறேன்! ஒரு வேளை காபி இல்லாவிட்டால் தலையை உடைக்கிறது! வேலை ஓடவில்லை! பித்துப் பிடித்தது போலிருக்கிறது! நானும் மற்றக் குடியர்களும் அதாவது காபிக்குடியர்கள்) கள் குடியர்களைக் கேலி செய்கிறோமே! வெட்கக் கேடு!

எனக்கு அதிகாரமிருந்தால் காபிக் கொட்டையை அபின் ரகத்தில் சேர்த்துவிடுவேன். ஊருக்கு ஒரு கடைதான் இருக்கும்; 4 பெரிய டாக்டர்கள் கையெழுத்திட்டால், மருந்துக்காக என்று, 40 கொட்டை தருமாறு உத்தர விடுவேன்.

'திராவிடம்' என்ன சொல் என்று கேட்பவரை "காபி'' என்ன சொல், அதை ஏன் குடிக்கிறாய்? என்று கேட்டார் பெரியார். அது முதல் தனித் தமிழ்ப் பிரியர்கள் எத்தனை பேர் 'காபி' குடிப்பதை விட்டு விட்டார்களோ எனக்குத் தெரியாது.

உத்தமர் காந்திக்கு காபி என்றாலே பிடிக்காது. அவரும் குடிப்பதில்லை; மற்றவர்களையும் குடிக்க வேண்டாம் என்றே சொல்வார். அவர் கொலை செய்யப்பட்ட நாள் முதல் இந்த நாட்டில் காபிக் கொட்டை ஒழிந்து விட்டது என்று ஏற்பட்டிருக்குமேயானால், அது ஒன்றுகூடப் போதும்! நாம் உருப்படக் கூடிய ஒரு காரியமுந் தான் செய்ய மாட்டோமே!

ராமசாமி அய்யரைக் கண்டேன். தன் குடும்பச் செலவைக் கூறி வருத்தப்பட்டுக் கொண்டிருந்தார். "காபி குடிப்பதால் மட்டும் மாதம் 45 ரூபாய் ஆகிறது, ஸார்!" என்றார்.

"அப்படியானால் அந்தச் சனியனை விட்டுத் தொலைக்கிறதுதானே!" என்றேன், நான் காபியைத் துறந்துவிட்ட தர்ம வீரன் போல!

"அதுதானே ஸார் முடியவில்லை! காயத்ரியை விடச் சொன்னாலும் சரி! காராக்கிரகம் போகச் சொன்னாலும் சரி! கதர் உடையையே கட்டச் சொன்னாலும் சரி! எதைச் செய்யச் சொன்னாலும் செய்து விடுவேன்! ஆனால் காபியை மட்டும் விடமுடியாது. அதுதான் எங்களுக்கு நவயுக சோமபானமாக இருந்து வருகிறது. அது இல்லாத பிராமணாள் வீடே கிடையாது! 'அடுத்த மாதம் 10-ந் தேதிக்குள் பிராமணர்கள் பூணூல்களைக் கழற்றிவிட வேண்டும்,' என்று உத்தரவு போட்டால்கூட கழற்றி எறிந்து விடுவோம். ஆனால் 'காபிக் கொட்டை விற்பனை தடை செய்யப்பட்டது' என்ற உத்தரவைப் பார்த்தால் அத்தனை பிராமணரும் மயக்கம் போட்டு விழுந்து விடுவோம்; அல்லது தடையை மீறி ஜெயிலுக்குப் போய்விட்டு வந்து சட்டசபைக்கு அபேட்சகராய் நிற்போம்", என்றார்.

"இவ்வளவு கஷ்டப்படுகிறீர்களே! நான் ஒரு யோசனை சொல்லட்டுமா? 'இனி மேல் கடவுளுக்கு பால்

அபிஷேகம் கிடையாது! காபி அபிஷேகம்தான் நடக்கும்! 'கலியுகத்தில் காபி அபிஷேகம்தான் வேண்டும்' என்று கனவில் சொல்லி விட்டார் கடவுள்,' என்று எங்கு பார்த்தாலும் பரப்பி விடுங்கள். பால் காவடிக்குப் பதில் காபிக் காவடிகள் வரும். எல்லாம் எங்கள் கூட்டத்தார்தானே காவடி எடுக்கிறவர்கள்? உங்கள் கூட்டந்தான் புத்திசாலியாச்சே! உங்களில் ஒரு முழுப் பைத்தியக்காரன் கூட காவடி தூக்குவதில்லையே! இப்படி ஒரு வதந்தியைக் கிளப்பி விட்டால் எல்லாரும் காபி அபிஷேகமே செய்வார்கள். நல்ல உயர்ந்த காபித் தூளாகத் தேடிக் கலந்து கொண்டு வருவார்கள். வழக்கம்போல கடவுளுக்குப் பின்னால் அண்டாவை வைத்து காபியைப் பிடித்து அக்கிரகாரத்துக்கு அனுப்பி பங்கு போட்டுக் கொள்ளலாம்! காபி கஷ்டமே இருக்காது", என்று யோசனை கூறினேன்.

'நல்ல யோசனை சார்! ஆனால் உங்கள் கூட்டத்தாருக்குச் சொல்லி விடுவீர்களோ?" என்று கேட்டார்.

"ஆஹா! அது என் கடமையல்லவா? சொல்லத்தான் போகிறேன். ஆனால் அதற்காகக் கவலைப்பட வேண்டாம்! எங்கள் கூட்டத்தாருக்கு என்ன சொன்னாலும் இந்தக் காதினால் வாங்கி அந்தக் காதினால் விட்டு விடுவார்கள். ரொம்பப் பேர் எங்கள் பேப்பர்களைப் படிப்பதே யில்லை; உங்கள் பேப்பர்களைத்தான் படிப்பார்கள். நீங்கள் சொல்வதுதான் அவர்களுக்குத் தெய்வ வாக்கு! உங்களுக்குப் பயமே இல்லை! நல்ல வேட்டைதான், போங்கள் என்றேன்."

என்ன சொல்கிறீர்கள்? நான் சொன்னது சரிதானே?

★

## 9. ஒரு ஜோடி பூட்ஸ் தேவை!

என் உபயோகத்துக்கல்ல. என்னிடம் எட்டு ஜோடி பூட்ஸ்கள் இருக்கின்றன. அவ்வளவு பெரிய உத்யோகஸ்தனோ, என்று நினைக்கவேண்டாம். அவைகள் 20 வருஷங்களாக இருப்பவை! பல அளவுகளைக் கொண்டவை! எத்தனையோ சக்கிலித் தோழர்களைக் கேட்டுப் பார்த்து விட்டேன். எடுத்துப்போக மறுத்து விட்டார்கள்! ஒரு ஆள் மட்டும் நான் இரண்டணா தந்தால் எடுத்துப் போவதாகச் சொன்னான்! எட்டு ஜோடிகளையும் அரையணாவுக்காவது விற்றுவிடுவது என்ற பிடிவாதத்தில் வைத்திருக்கிறேன்.

ஆனாலும் ஒரு ஜோடி பூட்ஸ் தேவை என்று சொன்னேனே, அது எதற்காக என்பதைக் கடைசியில் சொல்கிறேன். அவசரப்படுபவர்கள் இந்த இடத்தில் நிறுத்திக் கொண்டு கடைசிப்பகுதியைப் படித்துவிட்டு, பிறகு வேண்டுமானால் இங்கிருந்து படிக்கலாம்.

சட்டசபை மெம்பர்கள் வர வர சுத்த மோசமாகிக் கொண்டேயிருக்கின்றனர். இனிமேல் ஒரு புது விதியை ஏற்படுத்தினால்கூட நல்லது என்று நினைக்கிறேன். "நான் சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டால் அங்கே வாயைத் திறப்பதே இல்லை," என்று சத்தியம் செய்து கொடுக்கச் சொல்லவேண்டும்! இப்போதே பலர் இம்மாதிரி வாக்குறுதி எதுவும் தராமலே "சும்மா யிருக்கின்ற திறம் அரிது" என்ற பெரியவர் வார்த்தையைத் தூள் தூளாக நொறுக்கி விட்டனர். இவர்கள் நடுப்பகல் சிற்றுண்டி நேரத்தைத் தவிர மற்ற நேரத்தில் வாயைத் திறப்பதே இல்லை! மகாத்மா காந்தி வாரத்திற்கு ஒருநாள் மவுனவிரதம் இருந்ததைப்பற்றி எவ்வளவோ பிரமாதப் படுத்தினார்களே! நம் சட்டசபை மெம்பர்களில் எத்தனையோ மகாத்மாக்கள் இருக்கிறார்கள்! அதனாலேயே அவர்கள் பெயர் பத்திரிகைகளில் வருவதில்லை!

மெம்பர்கள் பேசுவதானால் பல ஆபத்துக்களிருக்கின்றன. பேசுவதானால் பல விஷயங்களைப் படித்துத் தொலைக்கவேண்டும். எந்த அபத்தத்தையாவது சொல்லித் தொலைத்து முட்டாள் பட்டம் வாங்கிக் கொள்ளாமலிருக்க வேண்டும். நியூஸ் பேப்பர் ரிப்போர்ட்டர்களைச் சரிக்கட்டிக்கொள்ளவேண்டும்.

எல்லாத் தொல்லைகளையும் விடப்பெரிய தொல்லை ஒன்றிருக்கிறது. மெம்பர்கள் பேசும்போது மந்திரிகள் அதைக் கேட்க வேண்டுமாம்!

சென்னை சட்டசபையில் அடிக்கடி மந்திரி நாற்காலிகள் காலியாகவே இருக்கின்றனவாம். மெம்பர்கள் சென்ற வாரம்கூட இதுபற்றிக் குறை கூறினார்கள். அந்தச் சமயத்தில் போலீஸ் மந்திரியார் நுழைந்தாராம்!

இந்த வாரம் டில்லி சட்டசபையிலும் இதே குறை! பட்டாபி சீதாராமையா பேசும்போது மந்திரி நாற்காலிகள் காலியாயிருந்தனவாம்! "நாங்கள் என்ன, வேலையற்றவர்களா, இப்படிக்காலி நாற்காலிகளைக்கட்டி அழ?" என்று கோபமாகக் கேட்டாராம்!

மந்திரிகள் மெம்பர்களை இப்படி அலட்சியப் படுத்தலாமா என்று நீங்கள் கேட்கலாம். அப்படிக் கேட்பதே தப்பு. யார் என்ன பேசினாலும் கட்சிக்கூட்டத்தில் செய்த முடிவுப் படித்தானே மசோதாக்கள் நிறைவேறப் போகின்றன? அதற்குப் பேச்சு எதற்கு? தலைவர் எதற்கு? மந்திரிகள் கேட்பது தான் எதற்கு? அதைவிட ஒரு ஆட்டம் 'பிரிட்ஜ்' (அல்லது பத்தாம் பசலி மந்திரிகளானால் 304 ஆட்டம் ஆடலாம்) போட்டாலும் பலனுண்டே! சட்டசபையில் பொடி போடலாமா? சிகரெட் குடிக்கலாமா? படிக்கலாமா? என்று பல கேள்விகள் கேட்கப்படுகின்றன. குறட்டை விடாமல் தூங்கலாம் என்று சபைத் தலைவர் கூறிவிட்டபடியால், அவர்கள் நிம்மதியாகத் தூங்குவதற்காக பெண் மெம்பர்கள் தாலாட்டுப் பாடலாமா என்ற கேள்வி எழுகின்றது. இன்னும் பல

சந்தேகக் கேள்விகள் எழுகின்றன. மற்றொரு சமயம் சொல்கிறேன். போர்மென் அவசரப்படுகிறார்!

இங்கு எடுத்துக்கொண்ட விஷயம் 'காலி நாற்காலிகள்' பற்றியது. மந்திரிகள் இல்லாவிட்டால் என்ன? காலி நாற்காலிகளிடம் ஏன் பேசக்கூடாது? நான் அறிந்தவரையில் இரண்டொரு மந்திரிகளைவிட காலி நாற்காலிகளே புத்தி சாலிகளாக இருக்கின்றன. அவைகள் முன்னுக்குப் பின் முரணாக உளறிக் கொட்டாமலாவது இருக்கின்றனவே! அது போகட்டும்.

இந்த நாட்டை ஒரு ஜோடி மிதியடிக் கட்டைகளே ஆட்சிபுரிந்திருக்கின்றன. 'ஒரு ஜோடி செருப்பு' என்று அய்யா அடிக்கடி சொல்வார்! அதுவும் ஒரு நாள், இரண்டு நாளல்ல. 14 வருஷம்! அதாவது மன்னன் இருக்கவேண்டிய அரியணையின்மீது அவனுடைய மிதியடிகள் இருந்தனவாம்! ஆகையால் காலி நாற்காலிகளிடம் பேசுவதில் அவமானம் எதுவுமில்லை. வேண்டுமானால் மந்திரிகளின் அடையாள மாக (பரதன் செய்ததுபோல) அவரவர் பூட்ஸ்களை நாற்காலியில் வைத்துவிட்டுப் போகவேண்டும் என்று உத்தர விடலாமே! நாற்காலிமீது ஒரு நியூஸ் பேப்பரை விரித்து அதன்மீது அவரவர் திருப்பாதுகையை ('பூட்ஸ்' என்பது இங்கிலீஷ் பெயர்) வைத்துவிட்டால், "கனம் விவசாய மந்திரி அவர்கள் இதற்கு என்ன சமாதானம் கூற முடியும் எனக் கேட்கிறேன்," என்று அந்த ஜோடியைப் பார்த்து கனம் அங்கத்தினர்கள் அதட்டிக் கேட்கலாமே!

இந்த என் யோசனையைத் தவறு என்றோ, தகாதது என்றோ 'வல்கர்' என்றோ, கருதுகிறவர்கள் ராமாயண விரோதிகள்! ஆஸ்திகத்துக்கு எதிரிகள்! இந்துமத துரோகிகள்! அவர்கள் சென்று அமர்வதற்காக நரகத்தில் பல நாற்காலிகள் காலியாகவே இருக்கின்றன என்பதை எச்சரித்துக் கூறுகின்றேன்.

★

## 10. சென்னையில் 5000 வீடுகள் காலி !

எங்கே? எங்கே காலி? தெருப்பெயர் என்ன? வீடா? உண்மையாகவா? அதுவும் 5-10 வீடுகள் கூட இல்லையே! ஐயாயிரம் வீடுகளா? ஏன் இப்படித் திடீரென்றுகாலிசெய்து விட்டார்கள்? ஜப்பான்காரன் மறுபடியும் குண்டு போடப் போகிறானா? அல்லது 'ப்ளேக்' பரவி விட்டதாக யாராவது கயிறு திரித்து விட்டார்களா? நம்பவே முடியவில்லையே! ஒரு வருஷமாக 20 ரூபாய் வாடகையில் ஒரு வீட்டுக்குத் திண்டாடித் தெருத் தெருவாய்த் திரிந்து கொண்டிருக் கிறேனே!

இந்த விதமாக சென்னை வாசிகள், அதாவது வீடில்லாமல் தவித்துக் கொண்டிருப்பவர்கள், குடும்பத்தை அழைத்துக் கொண்டு வரமுடியாமல் கட்டாய பிரம்மசாரி வாழ்வு நடத்துகிறவர்கள், ஹோட்டல் அளவுச் சாப்பாட்டை விழுங்கி (தின்னமுடியாத காரணந்தான்!) வருபவர்கள்— ஆகியோர் ஆச்சரியத்தால் கேட்பீர்கள்!

சற்றுப் பொறுங்கள்! 'அவசரப் படேல்' என்று (சர்தார் படேல் அல்ல!) முன்பே கூறி யிருக்கிறார்களே, நம் பெரியவர்கள்!

"யாரப்பா உனக்குச் சொன்னது? எங்களுக்கே இன்னும் தகவல் வரவில்லையே! எங்களுடைய சிப்பந்திகளுக்கும் ஆபீசர்களுக்கும் குறைந்த பட்சம் 200 வீடுகளாவது அவசரமாகத் தேவையா யிருந்தும், வீட்டைக் காலி செய்வதும் குடியேறுவதும் காதும் காதும் வைத்த மாதிரி நடக்கிறதே தவிர எங்கள் கவனத்திற்கே வரக் காணோமே! அப்படி யிருக்கையில் திடீரென்று 5000 வீடுகள் காலியாகி விட்டதாக 'சரடு' விடுகிறாயா, என்ன?"

இந்த மாதிரி சர்க்கார் கூடக் கேட்கலாம்

அடாடா! சர்க்கார் கூடவா இவ்வளவு அவசரப்படுவது? சற்றுப் பொறுங்கள். 5000 அல்ல, 7000, 8000 வீடுகள் கூடக் காலியாகப் போகின்றன, பாருங்கள்!

சில பேர் நாக்கில் 'சனி' யிருப்பதாகச் சொல்வார்கள். அதாவது, அவர்கள் சொல்கிற கெட்ட சொல் உடனே பலித்துவிடுமாம்! இன்னும் சில பேருடைய நாக்கில் சரஸ்வதி இருப்பதாகச் சொல்வார்கள்! அதாவது பெரிய புலவர்களாக இருப்பார்களாம்!

மாஜி மந்திரி கே பாஷ்யமய்யங்கார் இருக்கிறாரே, அவர் நாக்கில் 'சனி இருக்கிறானோ, சரஸ்வதி' இருக்கிறாளோ, எனக்குத் தெரியாது.

டாக்டர்கள் நோயாளியைப் பார்த்ததும் நாக்கை நீட்டச் சொல்கிறார்களே! அது இதற்காகத் தான் இருக்க வேண்டும். நாக்கில் சனியாவது, சரஸ்வதியாவது இருக்கிறாரா என்பதை அறிந்து கொள்வதற்காகத் தான் என்றே நினைக்கிறேன்!

மாஜி சுமங்கிலிகளை இந்து மதம் அலட்சியப்படுத்துவது போல, சிலர் மாஜி மந்திரிகளையும் அலட்சியப்படுத்துகிறார்கள். நான் மட்டும் மாஜி மந்திரிகளுக்கு ஒரு தனி மரியாதை செலுத்தத் தவறுவதில்லை. அதிலும் கே. பாஷ்யமய்யங்கார் போன்ற 'மாஜிகள்' எந்த நேரத்திலும் அதிகாரத்திற்கு (சுமங்கிலியாக) வரக் கூடும் என்ற பயமே எனக்கு!

அவர் சொல்லுகிற காரியம் அப்படியேநடந்துவிடுகிறது பாருங்கள்? 'கருஞ் சட்டை முறையைச் சட்ட விரோதமாக்க வேண்டும்' என்று முதன் முதல் 'ஹிந்து' பத்திரிகையில் எழுதினார். அப்படியே செய்தார்கள், காங்கிரஸ் சர்க்கார்.

8

இன்று இன்னொரு அருமையான யோசனை கூறி யிருக்கிறார். யாருக்கு? தன் இனத்துக்கு. லட்சுமீபுரம் ஒய். எம். ஏ.யில் பேசிய போது.

'பிராமணர்கள் சர்க்கார் வேலைக்கே போகக்கூடாது என்று கேட்டுக் கொள்ளுகிறேன்,"

என்று கூறி யிருக்கிறார். சர்க்கார் உத்யோகத்தைத் தவிர வேறு எத்தனையோ வேலைகள் பிராமணர்களுக்கு இருக்கின்றன என்றும் அவர் கூறி யிருக்கிறார்.

பாஷ்யமய்யங்கார் சொன்னதை ஓமந்தூர் சர்க்கார் உடனே கேட்டது போலவே, பிராமண சமுதாயமும் உடனே கேட்கும் என்பது நிச்சயம். பாஷ்யமய்யங்கார் வாக்குப் பலித்தே விடப் போகிறது!

வெளியூர்க்காரர் எப்படிச் செய்தாலும், 'சென்னையி லுள்ள பிராமணர்களாவது தங்கள் சர்க்கார் உத்யோகங்களை ராஜிநாமா செய்வார்கள் என்று எதிர் பார்க்கிறேன். 'வேலை யிலிருப்பவர்களை அவர் விடச் சொல்லவில்லையே!" என்று எவரும் தவறாக நினைத்துவிடக் கூடாது. 'இம் மாகாணத்திலுள்ள வகுப்பு வேற்றுமை ஒழிவதற்கு இதுவே சரியான ஒரு வழி,' என்றும், பிராமண இளைஞர்கள் கிரா மங்களுக்குச் சென்று குடியேற வேண்டும் என்றும் கூறி யிருக்கிறார். ஆதலால் இங்குள்ள பிராமண உத்யோகஸ்தர் கள் நிச்சயம் கிராமங்களுக்குப் புறப்படப் போகிறார்கள்! என்ன சொன்னாலும் தியாகிகள் தியாகிகள்தான்! யாருக்கு இருக்கும் இவ்வளவு பெரிய தியாக சிந்தனை?

குறைந்த பட்சம் 5000 வீடுகளாவது சென்னையில் காலியாகலாம். தியாகராய நகர், மயிலாப்பூர், திருவல்லிக் கேணி போன்ற அக்கிரகாரப் பகுதிகளில் இனிமேல், பழங் குடி மக்களும், கிருஸ்துவர்களும், ஆங்கிலோ இந்தியர்களும், முஸ்லிம்களும், இதர திராவிடர்களும் தாராளமாகக் குடி

யேறலாம்! சாமான்களைக் கட்டி வைத்துக்கொண்டு தயாராயிருங்கள்!

ஆனால் தோழர் பாஷ்யமய்யங்கார் எந்த கிராமத்திற்குக் குடியேறப் போகிறார், என்று என்னைக் கேட்காதீர்கள். அடுத்த மந்திரி சபையில் தனக்கு ஏதாவது ஒரு 'சான்ஸ்' கிடைக்குமா என்பதையும் பார்த்து விட்டுத்தானே புறப்பட வேண்டும்! அதற்குள்ளே அவசரப்பட்டால் என்ன செய்கிறது? அது மட்டுமா? அவர் போகப்போகிற கிராமத்திற்கு ஹைகோர்ட்'டை மாற்றிவிட்டு; பிறகல்லவா அவர் புறப்பட வேண்டும்? எவ்வளவு சிரமம்? எவ்வளவு பொறுப்பு! பாவம்!

★

## 11. கிணற்றுத் தவளை பேட்டி!

"வாருங்கள் ஸார்! மிஸ்டர் கிணற்றுத் தவளை எங்கே, இருபது இராத்திரிகளாய் உங்கள் சத்தத்தையே காணோமே! கொர, கொர; கொர, கொர; கொர, கொர; என்று காலட்சேபம் பண்ணிக் கொண்டே இருப்பீர்களே! மூச்சுப்பேச்சையே காணோமே!"

"என்னையா கேட்கிறாய், குத்தூசி? ஆமாம்! காலம் கெட்டுப்போய்க் கிடக்குது பாரு! நான் வாயைத் திறந்தால் பாப்பு தன் வாயைத் திறக்கிறது. அதிலும் இந்த மாதம் (பிப்ரவரி) ஒண்ணாந்தேதி முதல் ஒரே தடபுடலாயிருக்கிறது! அதற்காக யார் கண்ணிலும்படாமல் உலக சுற்றுப் பிரயாணம் போய்விட்டு இன்றுதான் வந்தேன்!"

"உலக சுற்றுப் பிரயாணமா? தாங்களா? கிணற்றை விட்டே வெளிவர முடியாதவர், அப்படி வந்தாலும் தத்தித் தத்தி மாதம் காதவழிகூடப் போக முடியாத நீங்களா உலக சுற்றுப்பிரயாணம் செய்தீர்கள்? இதென்ன, கம்பராமாயண—கந்தபுராண—பெரிய புராணப் புளுகு

களை யெல்லாம் தோற்கடித்து விடும்போலிருக்கிறதே, உங்கள் புளுகு!''

இவ்வாறு நான் கேட்டேன், ஸ்ரீலஸ்ரீ கிணற்றுத் தவளையாரை.

அதற்கு அவர் கூறினார்:—

''நான் சொன்னால் புளுகாகத் தானிருக்கும், உனக்கு இனிமேல் என்னைக் கிணற்றுத்தவளை என்று கூப்பிடக் கூடாது. 'அமெரிக்க கோட்டை விமானம்,' என்று கூப்பிட வேண்டும், தெரியுமா?''

''கபோதியைக் கண்ணாயிரம் என்று அழைப்பது போலவா?''

''அல்ல அல்ல; கும்பகோணம் சங்கராச்சாரியாரை ''லோககுரு'' என்று அழைப்பதுபோல! பல்லக்கில் சவாரி செய்யும் அவர் 'லோககுரு'வாக விளங்கும்போது; அவரைவிட அதிக வேகமாக நடக்கக்கூடிய நான் ஏன் கோட்டை விமானமாக விளங்கக்கூடாது?''

''அது கிடக்கட்டும்! ஊரார் பேச்சு நமக்கு எதற்கு? நீர் ஏன் மீண்டும் உம் கிணற்றுக்கே வந்து விட்டீர்? உலகத்தில் ஒரு குளமோ, குட்டையோ, ஆறோ, வாய்க்காலோ கிடைக்காமலா போய்விட்டது?''

''ஆஹா, எத்தனையோ இருக்கிறது! எதுவும் பிடிக்க வில்லை. என்ன இருந்தாலும் சொந்த இடம் ஒரு மாதிரித் தான். அது மட்டுமல்ல. காஞ்சி ஸ்ரீகாமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீலஸ்ரீ சங்கராச்சாரியார் ஸ்வாமிகள் கடலூருக்கு அருகிலுள்ள பாகூரில் கூடார மடித்து பிக்ஷை ('பிச்சை' அல்ல; ஜாக்கிரதையாகப் படிக்கவும்!) ஏற்று வருகிறாரே, தெரியுமா? அவர் காந்தியடிகளின் மரணத்திற்காக எல்லோரும் மகோதய ஸ்நானம் செய்ய வேண்டுமென்று சொல்லியிருந்தாரே, அதைப் படித்தாயா, குத்தூசி?''

"ஆமாம்! படித்தேன். அவர் ஏதேதோ உளறிக் கொட்டி யிருக்கிறாரே!

'காந்திஜி மரணத்திற்கு ஒரு ஹிந்துவே காரண மாயிருப்பது ஹிந்து சமூகத்துக்கே ஏற்பட்ட பேரவமானம். அத்தகைய மகானைச் சுட்டுக் கொன்ற பாபம் நம் ஹிந்து சமூகத்தையே சூழ்ந் துள்ளது. தோஷங்களுக்கெல்லாம் பரிகாரம் ஸ்நானம் தான்',

என்றல்லவா கூறியிருக்கிறார்? ஒரு மகானைக் கொன்று விட்டால் கூட ஒரு முழுக்குப் போட்டு விட்டால் போதும் என்கிறாரே! என்ன கல் நெஞ்சய்யா இவருக்கு?"

"இந்தா, குத்தூசி! ஜகத்குருவைப் பற்றி இப்படி அலட்சியமாகப் பேசாதே! அவர் சாமான்யப்பட்டவரல்ல! ஹிந்து மதத்திற்கே, பூதேவர்களுக்கே தலைவர்! அவர் இல்லாவிட்டால் இந்து மகா சபையாவது, ஆர். எஸ். எஸ். ஆவது! அவர்தான் வைதீக இந்து மதத்தின் ஆணிவேர். தெரியுமா?"

"அப்படியானால் அவரை மட்டும் ஏன்........?"

"......அரெஸ்ட் செய்யவில்லை என்றுதானே கேட் கிறாய்? அவர் வகுப்புத் துவேஷமா பேசுகிறார்? சூத்திரர் யாரும் தன்னிடத்தில் நெருங்கக்கூடாது என்கிறார்! அவர் களுடன் பேசமாட்டார். நேரே பிரசாதம் (சாம்பல் தூள்) தரமாட்டார்! அவ்வளவுதானே! இது எப்படி வகுப்புத் துவேஷமாகும்? பரம்பரையாக உள்ள பழக்கந்தானே?"

'அது கிடக்கட்டும்! முழுக்குப் போட்டுவிட்டால்பரிகார மாகிவிடும் என்கிறாரே! கொலைகாரப் பிராமணனான கோட்ஸேகூட கும்பகோணம் காவிரியில் ஒரு முழுக்குப் போட்டுவிட்டால் போதுமா?"

'ஆஹா! போதுமே! எந்தப் பிராமணனையாவது இது வரையில் தூக்குப் போட்டிருக்கிறதாகக் கேள்விப்பட்டிருக்

கிறாயா? கொலை செய்த அய்யங்கார் கூட ஆயுள் தண்டனை பெற்றுத்தானே வெளியே வந்துவிட்டார்! நீ மநுதர்மம் படித்ததில்லை போலிருக்கு! 8 ஆவது அத்தியாயம் 381 ஆவது சுலோகம் என்ன தெரியுமா?

"பிரம்ம ஹத்தியைவிட அதிகமான பாவம் உலகத்தில் கிடையாது. ஆதலால், பிராமணனைக் கொல்ல வேண்டுமென்று அரசன் மனதினால் கூட நினைக்கக் கூடாது", என்று மனுதர்மம் கூறுகிறது!"

"ஓ ஹோ! அதுதான் கைதியான பிராமணர்களையெல்லாம் விடுதலை செய்கிறார்களோ? இப்பத்தான் புரிந்தது! அதுசரி! நீர் இனி என்ன செய்யப் போகிறீர்?"

"முன் ஜென்மத்தில் பல கொலைகளைச் செய்திருக்கிறேன். அவைகளுக்குப் பரிகாரமாக ஸ்ரீலஸ்ரீ சங்கராச்சாரியார் ஆக்கினைப்படி ஸ்நானம் செய்யப்போகிறேன். அதாவது சதா ஜலத்திலேயே கிடக்கப்போகிறேன்."

"அப்படியா? போமய்யா போம்! உங்கள் காட்டில் தான் இப்போது மழை பெய்கிறது?"

"ஆமா குத்தூசி! நீ ஸ்நானம் செய்தாயோ?"

"நானா? நான் ஹிந்து வல்லவே! திராவிடனாச்சே! ஹிந்துக்களுக்குத் தானே அந்தக் கொலை பாதகத்தின் பழி? அது கிடக்கட்டும்! யாரோ ஒரு பிராமணன் கொன்றான் என்பதற்காக எல்லா ஹிந்துக்களையும்சேர்த்து இழுக்கிறாரே சங்கராச்சாரியார், கவனித்தீரா?"

"ஏ' குத்தூசி? என்ன, ஜாடையாகக் குத்த ஆரம்பிக்கிறாய்? இரு! இரு! ஜகத்குருகிட்டே சொல்லி, மயிலை சாஸ்திரியார்வழியாக பாஷ்யத்துக்கிட்டே சொல்லச்சொல்லி சீனுவாசய்யங்கார் களுக்கு சொல்லி, எழுதவைத்து உன்னை ஒரு கை பார்க்கிறேன்."

★

## 12. துப்பிய வாய்க்கு சர்க்கரை !

"சீ ! போ ! தூ ! தூ ! அயோக்கியா," என்று திட்டினான். காறித்துப்பினான்.

"ஏனப்பா திட்டுகிறாய் ? இப்படி என் முகத்தில் துப்பலாமா? உன் எச்சில் வீணாகி விடுமே ! நா வரண்டு போமே ! இந்தா சர்க்கரை ! வாயில் கொட்டிக்கொள்,!" என்று ஒருபிடி சர்க்கரையைக் கொட்டினான் அவன்வாயில்.

' நீங்களே பார்த்தீர்களா? வெறும் 'ப்ருடாவா?" என்று கேட்காதீர்கள்.

"வலது கன்னத்தில் அறைந்தால் இடது கன்னத்தைத் திருப்பிக் காட்டு," என்றார், ஏசுநாதர்.

எதிரிலிருக்கும் ஒரு ஆள் அறைந்தால் நமது இடது கன்னத்தில் தான் அறைய முடியும் (யாரையாவது அறையச் சொல்லி அவரவர் பரீட்சை பார்ப்பதில் எனக்கு ஆட்சேபணையில்லை) வலது கன்னத்தில் அறைவதானால் அறைபவன் இடது கையினால்தான் அறைய முடியும். அல்லது பின்புற மிருந்து அறைய வேண்டும். பின்புற மிருந்து கன்னத்தில் அறைவது இயற்கையல்ல, அதைவிட விசாலமான முதுகு இருப்பதனால். இதிலிருந்து ஏசுநாதர் இடது கையால் எழுதும் பழக்க முடையவராய் இருந்திருக்கலாமோ என்று தோன்றுகிறது. (மத ஆராய்ச்சிக்காரர்கள் இங்கிருந்து தொடங்கி வேலை செய்யுங்கள் ! விடாதீர்கள் !)

"இன்னா செய்தாரை ஒறுத்தல், அவர் நாண நன்னயஞ் செய்து விடல்," என்றார், திருவள்ளுவர்.

தீங்கு புரிபவனை வெட்கித் தலை குனியுமாறு செய்யலாம். அவனுக்கு நன்மை செய்தால் போதும் ! இப்படிக் கூறாத பெரியார்கள் இல்லவே இல்லை. அதுமட்டுமா ?

அவர்களெல்லாம் பெரியார்கள் ஆனதே இப்படிக் கூறிய தால்தான். ஆமாம், காந்தியார் உட்பட.

நமது மடாதிபதிகள் இருக்கிறார்களே, இவர்களைப் பற்றித் தப்பும் தவறுமாக ஏதேதோ பழிகள் கூறப்படுகின் றன. 'சந்திரகாந்தா' நாவல் எழுதப்பட்ட நாளிலிருந்தே மடாதிபதிகள் என்றாலே ஒருவிதமான "இளக்காரம்!" "சுவாமிகாள், யோகாப்பியாசமாச்சோ?" என்று கேட்கிறார் கள், சிறு பயல்கள் கூட. மடாதிபதிகள் இல்லாவிட்டால் சைவம் என்ன கதியாகி யிருக்கும் என்பது யாருக்குத் தெரியும் ? எங்கப்பன் பரமசிவனைக் கேட்டால் அல்லவோ தெரியும் !

மடாதிபதிகளின் சிவத்தொண்டை அறிந்துதான் ஜல்தி ஜல்தியாக அவர்களை ஈசன் தன் திருவடி நீழலுக்கு அழைத்துக் கொள்கிறார் ! மடத்து சிப்பந்திகளைக் கேட்டுப் பாருங்கள் !

ஏசுநாதர், திருவள்ளுவர் ஆகியோரைப் பற்றிச்சொன் னேனே ! அவர்கள் கிடக்கிறார்கள் பத்தாம் பசலிகள் ! இதோ பாருங்கள், எங்கள் திருப்பனந்தாள் மடாதிபதியின் திருப்பணியை ! அவர் பெயரை முதலில் குறிப்பிட்டு விடுகி றேன் !

ஸ்ரீ காசிமடம் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள் நந்தி தம்பிரான் சுவாமிகள் ! இதுதான் பெயர். அதாவது சுருக்கமான தந்தி விலாசம் ! முழுப்பெயர் வேண்டுமானால் அவருக்கே எழு துங்கள் !

அவர் என்ன செய்திருக்கிறார், தெரியுமா? 5,000 ரூபாய் மூலதனத்தில் ஒரு அன்னதானக் கட்டளை ஏற் படுத்தியிருக்கிறார். இதன் வட்டி வருமானத்தைக் கொண்டு காசியில் ஆண்டுதோறும் தமது சத்திரத்தில் அன்னதானம் செய்யத்திட்டம் போட்டு விட்டார். எதற்காகத் தெரியுமா?

காந்தியடிகள் மறைந்ததற்காக! அந்த நாளில் யாருக்கு அன்னதானம் தெரியுமா? பிராமணர்களுக்கு!

"ஐயையோ! கோட்ஸே கூட்டத்துச்கா?" என்று அலறாதீர்கள்!

அப்படி அலறுவது ஒருவிதமான குறுகிய புத்தி! விரோத மனப்பான்மை! நாம்தான் உயர்ந்த நிலைக்குப் போய்விட்டோமே, இப்போது! இந்த அற்ப சங்கதியெல்லாம் நம் வாயில் கூட வரக்கூடாது. நாம் இனிப்பேசுவதும் எழுதுவதும்,'இளைஞர்எழுச்சி,' புத்துலகச்சிற்பி,'வருங்கால வெள்ளம், என்பவை போன்ற மிகப்பெரிய பிரச்னைகளாகத் தான் இருக்கவேண்டும். என் "பரந்த அநுபவத்தில்" கண்ட உண்மைதான் இது; நீங்கள் கேட்டாலுஞ் சரி! கேட்காமல் கெட்டுப் போனாலும் சரி! சொல்லவேண்டியதைச் சொல்லி விட்டேன்.

அதுமட்டுமல்ல! திருப்பனந்தாள் தம்பிரான் சுவாமி கள் செய்வதில் தவறென்ன? இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயஞ் செய்து விடல், என்பதைப்படித் தவறல்லவா? காறித்துப்பியவன் வாயில் காலணா சர்க்கரை!

காந்தியாரைக்கொன்றவன் இனத்துக்கு காசியில் அன்னதானம்!

அன்பே சிவம்! திருச்சிற்றம்பலம்! தென்னாடுடைய சிவனே போற்றி! எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி! ஓம் நமசிவாயம்!

★

## 13. இரண்டு கழுதுகள்!

திருக்கழுக்குன்ற ஸ்தல விசேடத்தைப்பற்றி எழுதப் போகிறேன் என்று நினைத்து விடாதீர்கள். அது பெரிய விஷயம்! ரிஷிகளே கழுகு உருவங் கொண்டதைப் பற்றிய பிரச்னை! அக்கழுகுகள் இரண்டையும் சுட்டால் சாகுமா? கல்லா லடித்தால் பறக்குமா? சோறு வைக்காவிட்டால்

வருமா?—என்ற கேள்விகளை யெல்லாம் கேட்காதிர்கள். பக்தர்கள் மனம் புண்படும். பிறகு அந்தப் புண்ணில் சீழ் வடியும்! அதனால் துர் நாற்றம் வீசும்! அதெல்லாம் பெருந் தொல்லை. ஆனால் ஒன்று கூறுகிறேன். இரண்டு ரிஷிகளும் (கழுகுகள்) இராப்பகலாக பக்கத்து மரத்திலும் கோபுரத்திலும் உட்கார்ந்திருப்பதைத் திருக்கழுக்குன்றத்து வாசிகள் (பொய் சொல்லாதவர்கள்) ஒப்புக்கொள்வார்கள். அந்த ரிஷிகள் ஏதாவது பிண வாடையைத் தேடி ஓடிப்போய்விடப் போகிறார்கள் என்பதற்காகவே நாள் தவறாமல் சோறு தரப்படுகிறார்கள் என்பதையாவது தெரிந்துகொண்டால் போதும்.

கழுகுகளுக்கு ரொம்பப் பிடித்தமான உணவு பிணம். மனிதக் கழுகுகளுக்குப் பிடித்தமானது பணம். திருக்கழுக்குன்றத்துக் கழுகுகள் இரண்டும் தினம் வடக்கே யிருந்து வருவதாகத்தான் நம்பிக்கை.

தமிழ் நாட்டுக்கு இவ்வாரத்தில் இரண்டு கழுகுகள், வடக்கேயிருந்து வந்திருக்கின்றன. ஒன்று மதுரையில் பிணத்தைத் தோண்டித்தின்று கொண்டிருந்ததாம்! இன்னொன்று சென்னையில் வந்து சித்து விளையாண்டதாம்! இது இத்துடன் இங்கேயே, நிலையாக ,நிற்க!

ஸ்ரீலஸ்ரீ ராம லக்ஷ்மணானந்தஜீ என்னும் ரிஷிகேசம் சுவாமிகள் 12 மணி நேரம் ஸமாதி நிலையிலிருந்தாராம். அதாவது மூச்சை யடக்கி யோகநிஷ்டையிலிருந்தாராம். உண்மைதான். செயற்கரிய செய்கைதான். ஆனால் சமாதி நிலை கலைந்ததும், "தாம் அலகாபாத்தில் ஆரம்பிக்க இருக்கும் யோக சங்கத்துக்கு சென்னை வாசிகள் நன்கொடை தரவேண்டும்,'' என்றாராமே! அதுதான் எனக்கு ரொம்பச் சங்கடமாயிருக்கிறது. கம்பங் கூத்தாடி அறுபதடிக் கம்பத்தின் உச்சியில் தலையை வைத்துக் காலைத் தூக்கி நின்றுவிட்டுக் கீழே இறங்கிவந்து புளி உருண்டையும், மிளகாயும், காலணாவும் கேட்கிறானே, அதைவிடக் கண்றாவியாயிருக்கிறது!

பட்டினத்தார், தாயுமானவர், பத்திரகிரியார் போன்றவர்கள் ஏதேதோ சித்து விளையாண்டதாகப் படிக்கிறோம்! ஆனால் எவர் தலையிலும் ஐஸ் வைத்து மாலையிட்டதாகவோ, எவரும் பண உதவி கேட்டதாகவோ, படித்ததில்லை!

சமாதி நிலையென்றால் சாமான்யமா? நல்ல பழக்கம் வேண்டும். மூச்சை அடக்கி நிறுத்தக்கூடிய பழக்கம் முதிர்ச்சி யடைந்திருக்க வேண்டும். தண்ணீருக்குள் மூழ்கி சாமான்களையோ சவங்களையோ தேடும் பழக்கமுள்ளவர்களை நீங்கள் பார்த்திருக்கலாம். அந்த மாதிரி உங்களாலும் என்னாலும் செய்ய முடியுமா? மூழ்கிய முதல் நிமிஷத்திலேயே மூச்சுத் திணறி நீர்மட்டத்திற்கு வரவேண்டியிருக்கிறதே!

இந்தச் சமாதி நிலையைப் பழக்கிக்கொள்வதற்கு இதைவிட நல்ல தருணமே கிடைக்காது. இந்த ஸ்வாமிஜீயை அனுப்பிவிட வேண்டாம். இவரை வைத்துக்கொண்டு சரியான வேலை செய்யலாம் கேளுங்கள், என் யோசனையை:-

மாதத்துக்கு 100 பேருக்காவது இவர் இந்த யோகத்தைக் கற்றுக் கொடுக்கச் செய்ய வேண்டும். எல்லோரும் காலையில் 8-மணிக்கு 'சமாதி'யில் அமர்ந்தால் இரவு 8-மணிக்குத்தான் சமாதி கலையவேண்டும். அதன் பிறகு தூங்கிவிடலாம். மறுநாள் காலையில் மீண்டும் 'சமாதி!' இப்படியே பழகிவிட்டால் ரேஷன் கடைக்குப் போக வேண்டியதில்லை; துணி மணிகூடத் தேவையில்லை. பணந்தான் எதற்கு?

பகலில் சமாதி நிலை! இரவில் தூக்கம்! குடியிருப்பதற்குத்தான் வீடு எதற்கு? எங்கேயோ ஒரு மரத்தடி அல்லது கடற்கரையே போதுமே! உணவுப் பஞ்சமாவது, துணிப் பஞ்சமாவது! எதுவும் நம்மை நெருங்கவே நெருங்காது.

இதுமட்டுமல்ல. இன்னொரு யோசனைகூட. கடலில் குளித்து முத்தெடுக்கும் வேலையை இவரிடமே ஒப்படைக்க லாமே! 12-மணி நேரம் கடலுக்குள்ளேயே திரிந்து தேடி னால் எத்தனை அருமையான முத்துக்கள் கிடைக்கும்? ஆனால் உள்ளே போய் இவர் கண்ணை மூடிக்கொண்டு பத்மாசனத்தில் அமர்ந்து விட்டால் முத்து எப்படிக் கிடைக் கும்?

இந்த சமாதிச் சாமி வேறொன்றும் செய்யாவிட்டாலும் இங்கே நுழைந்திருக்கும் வட நாட்டு மூட்டைப்பூச்சிகளை யோகம் கற்றுக் கொடுக்கத் தன் ஊருக்கு அழைத்துப் போனாலே போதுமே! யோகத்தை நம்பாமல் உலக போகத்தை நம்புகிறவர்களாவது நிம்மதியாயிருப்பார்களே! அப்படிச் செய்வதாகக் காணோமே! பணமல்லவா கேட் கிறது, இந்த யோக நிஷ்டைச் சாமி?

ஒரு கழுகு பணம் பிடுங்கித் தின்னப்பார்க்கிறது! மற் றொரு கழுகு பிணம் தின்னுகிறது! இரண்டும் வடக்கே யிருந்து! இன்னொரு திருக்கழுக்குன்றம்!

★

## 14. குடு குடு குடு! குடு குடு குடு!!

குடு குடு குடு! குடு குடு குடு! நல்லகாலம் பொறக்குது! நல்ல சேதி வரப்போவுது!

குடு குடு குடு! இந்த வீட்டு அய்யாவுக்கு சுக்கிர தசை வருது! இதைவிடப் பெரிய வேலை வரப்போவுது!

குடு குடு குடு! அய்யாவின் எதிரியெல்லாம் அய் யோண்ணு போகப் போறான்! அவனே வந்து அய்யா காலிலே விழப் போறான்!

குடு குடு குடு! கம்பளத்தாயி! வாடியம்மா, வா! வந்து சொல்லடி, நல்ல சேதி!

குடு குடு குடு! அய்யாவை ஊரைவிட்டு விரட்டினவன் மனசுமாறிப் பூட்டான்! மன்னிப்புக் கேட்கப் போறான்!

குடு குடு குடு! அய்யாவே கூடாதிண்ணவன் அய்யா பெயரை மண்டபத்துக்கு வச்சிருக்கான்! அய்யாவைத்துரத் தினவன் அய்யா படத்தை பள்ளியிலே மாட்டச் சொல்லு றான்!

குடு குடு குடு! அய்யாவுக்கு அபாரப் புகழ்வருது! கல்கத்தாவை விட்டு டில்லிக்குப் போகப் போராங்கோ! இன்னும் பெரிய வேலைக்குப் போகப் போராங்க!

குடு குடு குடு! அய்யாவுக்கு அதிர்ஷடத்துமேலே அதிர்ஷ்டம்! பணத்துக்குமேலே பணம்! மண்ணைத் தொட் டால் பொன்னாக மாறப்போவுது!

குடு குடு குடு! அய்யா சம்பந்தி இடம் காலியாகக் கிடக்கு! அந்த இடத்தையேபார்க்கிறாரு! காமாட்சி கிருபை யிலே கட்டாயம் கிடைக்கும்!

குடு குடு குடு! அய்யாவுக்கு வடக்கேபோக ஆசை யில்லை! தெற்கே வர நினைக்கிறாரு! குறுக்கே மலைப் பாம்பு படுத்திருக்கு! அய்யா அஞ்ச வேண்டியதில்லை! அய்யாவைக் கண்டா பாம்பு நகர்ந்துடும்! அய்யாவுக்குக் கேடு நினைச்சவன் அய்யா காலிலே விழுந்தான்! இன்னமும் விழுவான்!

குடு குடு குடு! அய்யாவுக்கு யோகம் பிறக்குது! நினைக்கிற காரியம் கை கூடுது! நினைக்காத காரியமும் தானா வரப்போகுது!

• • • • •

1. மே த. ஆச்சாரியார் மவுண்ட் பேட்டனுக்குப் பிறகு கவர்னர் ஜெனரலாக நியமிக்கப்படுவார்.
2. சென்னை மவுண்ட் ரோடிலுள்ள சர்க்கார் விருந்து மாளிகை 'ராஜாஜி மண்டபம்' என்று இனி அழைக்கப் படும்.

3. சென்னை கார்ப்பரேஷன் பள்ளிகள் அத்தனையிலும் ஆச்சாரியாரின் படங்கள் தொங்கவிடப்பட்டிருக்கின்றன.

4. மே. த. ஆச்சாரியார் அடுத்த சென்னை கவர்னராகவும் நியமிக்கப்படலாம்.

"எண்டாப்பா, ஒரே துள்ளா துள்ளினையே, ஆச்சாரியாரை காங்கிரசை விட்டே விரட்டிவிட்டதாக! என்ன சொல்கிறாய், இப்போது? அவர் உட்கார்ந்திருக்கும் உச்சியை உன்னால் அண்ணாந்து பார்க்கவாவது முடியுமா? வெள்ளைக்காரன் இருந்த கவர்னர் ஜெனரல் இடத்துக்கு உன் ஆள் எவனாவது வர முடிஞ்சுதா? உன் ஆட்களுந்தான் பெரிய பெரிய நிர்வாகிகள், உலகஞ் சுற்றிகள், அரசியல் நிபுணர்கள், பொருளாதாரப் புலிகள் என்றெல்லாம் பெயரெடுத்தார்கள்! என்ன பிரயோஜனம்? என்ன படிப்புப் படித்தாலென்ன? என்ன அநுபவம் இருந்தால்தான் என்ன? கீதையும் உபநிஷத்தும் படித்த எங்கள் தலைவர் தானே கவர்னர் ஜெனரலாக வர முடிந்தது! அடுத்தபடியாகக்கூட யார் கவர்னர் ஜெனரலாக வரப்போகிறார், பார்க்கலாமா? இதோ பார்! நான் சொல்வதைக் கேள்! எங்களை விரட்ட ஈஸ்வரனாலும் முடியாது என்பது ஞாபகமிருக்கட்டும்! நங்கள் எந்தெந்த வேஷத்தில் வருவோம் என்பதாவது உனக்குத் தெரியுமா? எத்தனையோ வேஷம்! உன் வேஷத்திலேயே கூட வருவோம்! உங்களால் ஒன்றும் முடியாது! வெறும் காட்டுக்கூச்சல்தான் தெரியும்! நாங்கள் காரியவாதிகள்! எதை, எப்படி, எப்போது செய்வது என்பதை அறிந்தவர்கள். 'ஆகஸ்ட் துரோகி' என்றீர்கள்! ஆரியப் பாதுகாவலன் என்றீர்கள்! மற்றவனை வளரவிடாத சுயநலத்தவன் என்றீர்கள்! என்ன ஆயிற்று? உங்கள் ஆட்களில் எத்தனையோ தடிராமன்கள் இருந்தான்களே! அவன்களில் எவன் படமாவது பள்ளிகளில் வைக்கப்பட்டதா? உங்கள் திருவள்ளுவனையும் சேர்த்துத்தான் சொல்கிறேன். உங்களவன்களில் எவன்

பெயரையாவது 'பாங்க்வெடிங் ஹாலுக்கு' வைக்க முடிஞ்சுதா? ஆகஸ்ட் துரோகியின் பெயரைத்தானே வைத்தாய்? அதுவும் அதே ஆகஸ்ட் வீரர்கள்தானே வைத்தீர்கள்?

ஏன், இஞ்சி தின்ற குரங்கு மாதிரி விழிக்கிறாய்? ஆத்திரப்பட்டு என்ன செய்வது? நாக்கைப் பிடுங்கிக்கொள்ளேன்! பிரமாத வீச்சு வீசினாயே! உன் ஜம்பமெல்லாம் எங்கே போச்சு?"

இந்த மாதிரிக் கேட்கிறார், திருவல்லிக்கேணி ஆரியர் ஒருவர், காங்கிரஸ் திராவிடத் தோழரைப் பார்த்து!

★

## 15. அக்கினி சாட்சியாக அங்கத்தினர்!

சில கிராமங்களில் நமது திராவிட கழகத் தோழர்கள் புது அங்கத்தினர் சேர்க்கும் முறை விநோதமாயிருக்கிறது.

"ஏனப்பா வெங்கிடுசாமி, திராவிட கட்சி யென்றால் ஜாதி வித்தியாசம் கூடாது என்கிறாயே! நீ பள்ளன் வீட்டில் சாப்பிடுவாயா?" என்று கேட்கிறார், வைதீக வைத்திலிங்க முதலியார்.

"ஆஹா! யார் வீடானால் என்ன? அவனும் மனிதப் பிறவிதானே! நான் மட்டுமா? என் இயக்கத் தோழர்களில் யார் வேண்டுமானாலும் சாப்பிடுவார்களே!"

உடனே சேரிக்குள் நுழைகிறார்கள். வைத்திலிங்கமுதலியார் வெளியேநின்றபடியே குடிசைக்குள் எட்டிப்பார்க்கிறார்! திராவிட கழகத் தோழர்கள் சாப்பிட்டு விட்டு வருவதைக் கவனிக்கிறார்! ஆச்சரியம்! ஆமாம்! இந்த நாட்டில் ஒரு அதிசயக் காட்சி தானே, இது? மனிதன் வீட்டில் மனிதன் சாப்பிடுவது எவ்வளவு பெரிய புரட்சி? முதலியார் கழகத் தோழர்

கள் வீட்டில் கூறி விஷமஞ் செய்கிறார். ஜாதிக் கட்டுப்பாடு செய்யச் சொல்கிறார்! பலிக்கவில்லை.

"அது கிடக்கட்டுமய்யா! பந்தயம் என்ன ஆச்சு?" என்று கேட்கிறார்கள், கழகத் தோழர்கள்.

பேந்தப் பேந்த விழிக்கிறார், ஆந்தையைப் போல! பந்தயப்படியே திராவிட கழகத்தில் உறுப்பினராகச் சேர்கிறார். அடுத்த வாரம் அவர் தலைமையில் கழகப் பொதுக் கூட்டம் நடக்கிறது.

இன்னும் சில ஊர்களில்:—

"ஏனப்பா, கருப்புச் சட்டை! நீ எதற்கெடுத்தாலும் மூட நம்பிக்கை, பித்தலாட்டம் என்றெல்லாம் பேசுகிறாயே? இதோ, இந்த தீக்குழியில் இறங்கி வர முடியுமா? இறங்கி வந்து தீ உன்னைச் சுடாமலிருந்தால், நீ சொன்னபடி கேட்கிறேன்", என்கிறார் ஒரு கிராமவாசி.

திரௌபதையம்மன் சந்நிதியில் தீக்குழி. "பரம பக்தர்கள்" தலை முழுகிவந்து, உண்ணாவிரதத்துடன், "ஈஸ்வரி! ஈஸ்வரி!" என்று கதறிக் கொண்டே தீயில் நடந்து செல்கிறார்கள்! அவர்களுக்குப் பின்னால் கருஞ்சட்டை போட்டபடியே கிண்டலாகச் சிரித்துக் கொண்டே கழகத் தோழர்களும் தீ மிதிக்கிறார்கள்! பொது மக்கள் ஆச்சரியத்தால் திகைக்கிறார்கள்! திரௌபதை யம்மன் மகாபதிவிரதையாகையால் (சந்தேக மிருந்தால் அவளுடைய ஐந்து கணவர்களையும் கேட்டுப்பாருங்கள்!) எவர் காலிலும் சுடவில்லை! ஆனால் ஒன்று! இதுதான் சமயமென்று உடலில் மண்ணெண்ணையை ஊற்றி தீக்குச்சியைக் கிழித்து வைத்துப் பக்திப் பரீட்சை பார்த்து விடாதீர்கள்! யாராயிருந்தாலும் (ரமணரிஷி, மெய்வழி ஆண்டவை, சாயிபாபா உட்பட) அக்கினி பகவானின் திருவடி நீழலில் (நெருப்பில்) சேரவேண்டியதுதான்! தீமிதிப்பது என்பது ஒரு பொழுது போக்கு விளையாட்டுத்தானே! பக்திக்குப் பரீட்சையா என்ன? எந்தப் பார்ப்பானாவது தீ மிதிக்கிறானா?

தீமிதிப் பந்தயம் முடிகிறது! கழகத் தோழர்கள் "பக்தர்களாக" வெளி வருகிறார்கள்! சவால் கூறியவர்கள் கழகத்தில் உறுப்பினர்களாகச் சேர்கிறார்கள்! அதாவது அக்கினி சாட்சியாக! பார்ப்பனப் புரோகிதன் திருமணம் செய்துவைப்பது போல! அக்கினி சாட்சியாக கழகத்தில் அங்கத்தினராக்கப்படுகிறார்கள்!

ஆனால் ஒரு எச்சரிக்கை, என் தோழர்களுக்கு! எந்தப் பரீட்சையானாலும் முதலில் எதிரிகளைச் செய்து காட்டச் சொல்லுங்கள். ஏமாந்து விடாதீர்கள்.

இது உறுப்பினர் சேர்க்கும் ஒரு புதிய முறை. இதைப் போல வேறு பல முறைகளைக் கூடக் கையாளலாம், வேறு துறைகளில் கூட

"சுவாமியை நான் தொட்டால் கண் அவியாது; என்ன பந்தயம்? நீ கோயிலை விட்டே வெளியேறி விடுகிறாயா?," என்று அர்ச்சகனோடு பந்தயம் போடலாம்.

"நான் மடப்பள்ளிக்குள் புகுந்து சமையல் செய்தால் சாமி ஒண்ணுஞ் சொல்லமாட்டார். சோற்றிலும் புழு வராது! பந்தயம் என்ன? மடப்பள்ளியை விட்டுப் போய் விடுகிறாயா? " என்று மடப்பள்ளிப் பெருச்சாளியுடன் பந்தயங் கட்டலாம்.

"இந்த அரிசியும் காய்கறியும் பிதிர் உலகத்துக்குப்போக வில்லை, நீ தான் சாப்பிடுகிறாய், என்று சொல்கிறேன். எனக்கு எதிரிலேயே அனுப்பிப் பார்; நிச்சயம் போகாது. அப்படிப் போய்விட்டால் நான் இந்த ஊரை விட்டே ஓடி விடுகிறேன். பிதிர்க்கள் சாப்பிடாவிட்டால் நீ இந்த நாட்டை விட்டே ஓடிவிடவேண்டும்; சரிதானா ? " என்று தர்ப்பாயுத பஞ்சாங்கப் பார்ப்பானைக் கேட்கலாம்.

"இதோ ! நான்கு ஜாதகங்கள் வைத்திருக்கிறேன். இவைகளில் எது கழுதை ஜாதகம்? எது ஆண் ஜாதகம்?

எது பெண் ஜாதகம்? எது எருமை ஜாதகம் ? இவைக ளில் சரியான இரண்டைப் பொறுக்கி எடுத்து பொருத்தம் பார்த்துக்கூற முடியுமா? சரியாகக் கூறிவிட்டால் நான் எந்தத் தண்டனையை வேண்டுமானாலும் ஏற்கிறேன். தவறி விட்டால் நீ இந்தத்தொழிலைவிட்டுவிட்டு நிலம்உழுவதற்குப் போக வேண்டும்; சரிதானா ?" என்று கேட்கலாம். (நான்கு ஜாதகங்களில் ஒன்று கூட ஆணின் ஜாதகமாக இருக்கக் கூடாது.)

இந்தமாதிரி ஊருக்கு ஊர் செய்ய ஆரம்பித்துவிட்டால் மந்திரவாதி, பூசாரி, புரோகிதன், சோதிடன், அர்ச்சகன் சாமியார், போன்ற பித்தலாட்டக்காரர்களெல்லாம், வேறு நாணயமான தொழில்களில் ஈடுபட்டு விடுவார்கள்.

நமக்கு வேலையா இல்லை? நிமிஷத்துக்கு நிமிஷம், வேலை யிருக்கிறது, சோம்பல் மட்டும் இல்லாதிருந்தால்.

★

## 16. அது ஒரு நோய், ஸார் !

பார்ப்பனர் 4-6 இழைகளில் மெல்லிய பூணூல் போட்டுக் கொள்கிறார்கள். அவர்களைப் பார்த்துப் பூணூல் போடக் கற்றுக்கொண்ட திராவிடரிற் சிலர் சுண்டு விரல் பருமனுக்குப் பூணூல் போட்டுக் கொள்கிறார்களே! ஏன் ?

வடகலை அய்யங்கார் 'நைஸாக' ஈர்க்கு மாதிரி (துடைப் பக்குச்சி!) மூன்று கோடுகள் இழுத்துக் கொள்கிறார்கள். ஆனால் அவர்களைப் பார்த்து நாமம் போடக் கற்றுக் கொண்ட தென்கலை அய்யங்கார்களும், நாயுடுகளும், பிற நாமக்காரர்களும் ஒரு அங்குல கனத்துக்கு இருட்டில்கூட ஒரு பர்லாங் தூரத்தில் தெரியும்படியாக வரட்டி கனத் தில் போட்டுக் கொள்கிறார்களே, அது ஏன்?

பரம்பரை 'சைவர்'கள் நாசுக்காக மூன்று விரல்களால், பட்டும்படாமல் நெற்றியில் விபூதியடித்துக் கொள்ளும் போது அவர்களால் சைவ மதத்திற் சேர்க்கப்பட்ட புதுசுகள் சுவற்றுக்கு சுண்ணாம்பு அடித்த மாதிரி நெற்றி நிறைய இரண்டு மூன்று 'கோட்டிங்' அடித்துக் கொள்கிறார்களே, அது ஏன்?

பரம்பரையாக மாமிச உணவு உண்பவர்கள், ஏதோ 4-5 மிருகங்கள், 7-8 பறவைகளோடு மட்டும் நிறுத்திக் கொண்டிருக்கும்போது, புதிசாக 'வீரர்'களானவர்கள் எந்தக் கறியானாலும் சரி, (மனித மாமிசம் தவிர) கொண்டுவா, என்று கூறுகிறார்களே, அது ஏன்?

பரம்பரையாக இஸ்லாம் மதத்திலுள்ளவர்கள், தங்கள் பெண்களுடைய முக மூடியை எடுத்துவிட்டு, அவர்களைப் போர் வீரர்களாக ஆக்கியிருக்கும்போது, போன வருஷம் காத்தானாக இருந்த காதர் பாஷாக்கள் தங்கள் பெண்களை வீட்டிற்குள் போட்டுப் பூட்டி வைக்கிறார்களே, அது ஏன்?

பல நூற்றாண்டுகளாக கிருஸ்துவர்களாகவே இருந்தவர்களும் 'பைபிள்' வேதநூல் முழுவதையுமே மனப்பாடம் செய்தவர்களுமான மேல்நாட்டு அறிஞர்கள் பைபிளிலுள்ள குற்றங்குறைகளை எடுத்துக் கூறிக் கண்டிக்கும் போது, நேற்றுவரை உடையாராகவும், நாடாராகவும், பிள்ளையாகவும் இருந்த இந்த நாட்டு கிருஸ்துவர்கள், ஞாயிற்றுக்கிழமையன்று மட்டுமே பைபிளைத் திறந்து பார்க்கும் நம்மவர்கள், அதில் ஒரு எழுத்தைக்கூடத் தவறென்று சொல்லக்கூடாது, என்கிறார்களே, அது ஏன்?

மந்திரத்தையே தன் வயிற்றுப் பிழைப்பாக வைத்துக் கொண்டிருக்கும் பார்ப்பனப் புரோகிதன், சமயம் சந்தர்ப்பம், வருமானம் ஆகியவைகளுக்கு ஏற்ற மாதிரி மந்திரத்தைக் கூட்டியும், குறைத்தும், சரிப்படுத்திக் கொள்ளும்போது அவனைக்கண்டு சூடுபோட்டுக் கொண்ட பண்டாரங்கள் மட்-

டும் ஒரு சுமை சுள்ளியை ஒடித்துப் போட்டு, ஒரு டின் நெய்யை உடைத்து ஊற்றி, வாய் வலிக்க, காது ஜவ் கிழிய, சமஸ்கிருத மந்திரத்தை மணிக்கணக்காய்ச் சொல்லி நம் பிராணனை வாங்குகிறார்களே, அது ஏன்?

இந்த மாதிரிப் பல சந்தேகங்கள் உங்களுக்கு அடிக்கடி எழலாம். நாடக மேடையில் கூட அப்படித்தான். இயற்கையான ராஜாவைவிட நாடக மேடை ராஜா அதிகமான டம்பத்தோடு புது நடை நடப்பார். பெண்ணாய்ப் பிறந்தவள்செய்யக் கூசுகின்ற 'தளுக்கு' 'மினுக்கு, எல்லாம் ஆணாய்ப்பிறந்து சேலையுடுத்தி நடிப்பவனிடம் சர்வ சாதாரணமாயிருக்கும்! அந்த மாதிரி குலுக்கிக் கொண்டு செல்லும் பெண்ணைக் கட்டாயம் ஊரார் கல்லால் அடிக்காமலிருக்க மாட்டார்கள்! ஆனாலும் நாடக மேடையில் தோன்றும் "பெண் நடிகனை" சும்மா விட்டுவிடுவார்கள்!

"கன்வர்ட்களின் உற்சாகம்" என்று இங்கிலீஷில் ஒரு பழமொழி உண்டு. அதாவது ஒரிஜினலை விட ட்யூப்ளிகேட்கள் அதிக வெளிச்சம் போடும்! அசலை விட நகல் பிரமாதமாக மணி அடிக்கும்! (கார்பன் வைத்து எழுதிய கடுதாசி நகலைப் பார்த்திருப்பீர்களே, அதே போல!)

மயிலாப்பூரில் பேசிய பார்ப்பனத் தலைவர்கள் "சமஸ்கிருதத்தை பள்ளியில் கட்டாய பாடமாக வைக்கவேண்டும்" என்று மட்டுந்தான் கூறினார்கள்! அது கூட எதற்காகத் தெரியுமோ? முழத்துக்கு அளந்தால் ஜாணுக்காவது வராதா என்ற கருத்தினால்!

ஆனால் திருப்பதியில் பேசிய ஜஸ்டிஸ் ராஜமன்னார் (திராவிடர்) என்ன சொல்லி யிருக்கிறார் தெரியுமோ? சமஸ்கிருதத்தை போதனா மொழியாகவே வைக்க வேண்டும் என்கிறார்! [பிறகு வந்த செய்தியில் இதை மறுத்து விட்டார்! ஆனாலும் கட்டாயமாகக் கற்பிக்க வேண்டு மென்று சொல்கிறார்] அதாவது தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் போன்ற தாய்மொழிகள் வழியாக சரித்திரம், கணக்கு, பூகோளம், விஞ்ஞானம் முதலிய பாடங்களைக் கற்பிக்க

வேண்டு மென்கிறோமே! அது கூடாது; சமஸ்கிருதத்தின் வழியாகவே இப்பாடங்களைப் போதிக்க வேண்டும்" என்று பேசியிருக்கிறார்.

எவ்வளவு சமஸ்கிருத பக்தி! என்ன பார்ப்பன அன்பு! இவருக்கு பிரதம நீதிபதி வேலையை விட புரோகிதர் வேலை கொடுத்திருந்தால் எவ்வளவோ பொருத்தமாயிருக்கும்! பார்ப்பனருக்கு 'சோப்' போடும் முறைகளில் இதுவும் ஒன்று! தம் பதவி நிரந்தரமாகும் வரையில் இவர் அடிக்கடி இந்த மாதிரி 'சோப்' போட்டுக்கொண்டே யிருக்கவேண்டும்! இல்லா விட்டால் ஓமந்தூராரைச் சொல்வது மாதிரி, 'இந்தப் பேர் வழி இவ் வேலைக்குத் தகுதியல்ல,'' என்று ஒரே வரியில் எழுதித் தள்ளிவிடுவார்கள். நீதி இலாகாதான் கோட்ஸே இனத்தாரிடம் இருக்கிறதே!

பலே பேஷ்! ஜஸ்டிஸ் ராஜமன்னார்! தாய் எட்டடி தாண்டினால் குட்டி பத்தடி தாண்டி பாதாளத்திலாவது விழ வேண்டாமா? பார்ப்பான் கூடச் சொல்வதற்குப் பயப் படும் வார்த்தைகளைச் சொன்னீரே! உம் தைரியத்தை எப்படித்தான் புகழ்வது?

உம் மீது குற்றமில்லை! அது ஒரு நோய் ஸார்! நோய்! காலரா, ப்ளேக்...மாதிரி ஒரு நோய்! பணக்கார னாயிருந்தாலும் சரி, படித்தவனாயிருந்தாலும் சரி, காலராவும் ப்ளேக்கும் விட்டு விடுமா, என்ன? புதுசுகள், பிஞ்சுகள், இமிடேஷன்கள், போலிகள், ட்யூப்ளிகேட்டுகள், கார்பன் காப்பிகள், நார்ப்பட்டுகள், கில்ட் நகைகள், போலி நாணயங்கள்...இவைகளுக்கெல்லாம் ஒரு தனி மினுமினுப்பு! பிரத்யேகமான பகட்டு! இது தானே உலகம்! காரியத் தில் செய்யும் கர்ம வீரர்களை உலகம் எங்கே மதிக்கிறது? வாய்ச் சவடால் அடிக்கும் தகர டப்பாக்களைத்தானே தாங்குகிறார்கள்! அது ஒரு நோய், ஸார்! நோய்! யார் மீதும் குற்றமில்லை.

★

## 17. சனி திசையில் சனி புக்தி!

"இந்த ஜோஸ்யர்களைப் போலப் பித்தலாட்டக்காரர்களை நான் பார்த்ததே யில்லையப்பா! எந்த ஜோஸ்யராவது நடக்கப்போவதைச் சரியாகச் சொல்லிக் கேட்டிருக்கிறாயா?" என்றேன், எதிரில் வந்து நின்ற என் நண்பர் சொக்கனிடம்.

"நடந்து போனதை மட்டும் என்ன, சரியாய்ச் சொல்லிக் கிழிக்கிறார்களோ? எல்லாம் பார்த்தாச்சப்பா! ஒரு தடவை என் அப்பா என் தங்கைக்கு திருமணம் செய்வதற்காக ஜாதகத்தை எடுத்துக் கொண்டு போனார். சுமார் 6 மணி நேரம் பார்த்து விட்டு ரொம்ப சந்தோஷத்தோடு 10 ரூபாய் பணமும் கொடுத்துவிட்டு வீட்டுக்குத் திரும்பினார். 'என்ன சொன்னார் ஜோசியர்' என்று கேட்டேன். அடுத்த மூன்று மாதத்திற்குள் கலியாணம் நிச்சயம் ஆகியே தீருமென்றும், புருஷன் ரொம்ப நெருங்கிய சொந்தமாயிருப்பானென்றும், ஒரு லட்ச ரூபாய்க்குக் குறையாத சொத்துள்ளவனென்றும், நல்ல படிப்பாளி யென்றும் சொன்னார்!' என்றார் என் தகப்பனார். இதைக் கேட்டுக் கொண்டே வந்த என் தாயார், 'அது சரி! அவள் ஜாதகத்தைத்தான் தஞ்சாவூருக்கு அனுப்பி யிருக்கிறோமே' நகல் இல்லையென்று கூட சொல்லிகிட்டு யிருந்தியளே! என்று கேட்டாள். அப்பா திடுக்கிட்டுப் போய் ஜ தகம் இருந்த மேஜை 'டிராயரை'த் திறந்து பார்த்தார். அங்கு வேறு ஜாதகமே இல்லை தன் கையிலிருந்த ஜாதகத்தின் (ஓலையில் எழுதப்பட்டது) பின்புறத்தைப் பார்த்தார். 'சுந்தரி' என்று எழுதியிருந்தது. தூள் தூளாகக் கிழித் தெறிந்தார்."

"ஏன் அதைக் கிழித்தெறிய வேண்டும்?"

"ஏனா? அது என் மற்றொரு தங்கையின் ஜாதகம். அவளுக்கும் சுந்தரிக்கும் ஒரே வயசுதான் வித்தியாசம்.

இளம் வயதில் விதவையான அந்தத் தங்கை இறந்துபோய் இரண்டு வருஷமாகி விட்டது. தவறுதலாக அவள் ஜாதகத்தை எடுத்துப்போய் காட்டி விட்டார். அந்தக்குரு (சோதிட)னுக்கோ உயிரோடிருப்பவர் ஜாதகமா செத்துப்போனவர் ஜாதகமா என்பதைகூட கண்டுபிடிக்க முடியவில்லை. இது தான் ஜோசியத்தின் லட்சணம்! எப்படி யிருக்கிறது?" என்றான் என் நண்பன்.

"யாரப்பா அந்தச் சோதிட நிபுணர்?'

"அவர்தான் உலகம் புகழ் நேரு ஜோஸ்யர்."

"ஓஹோ! அவரா? பலே பேர்வழி ஆச்சே! ஒரு லட்ச ரூபாய்க்குமேல் சம்பாதித்து விட்டாராமே! அவர் நேற்று என்ன சொன்னார் தெரியுமா?

"அட்டமாதிபனும் குசனுமே கூடி ஆறு பனிரெண்டு இடத்திருக்கில், திட்டர் ஆயுதத்தால் மரணம்." ஆதாவது "எட்டுக்குடையவனும் செட்டுக்குடைய செட்டியாகிய செவ்வாயும் கூடி 6, 12 இடங்களிலிருந்தால், துஷ்டர் ஆயுதத்தால் மரணம் சம்பவிக்கும்" என்று சொன்னார்.

"யாருக்கு மரணம் சம்பவிக்கும்? எனக்கா, உங்களுக்கா?" என்று கேட்டேன். 'உனக்கு எல்லாம் கிண்டல்தானப்பா? சோதிடத்தைப் பழிக்காதே! சொன்னால் சொன்னபடி நடக்கும்" என்றார்.

"அப்படியானால் நேரு சோதிடரே! எத்தனையோ நிபுணர்கள் இருக்கிறீர்களே, உங்களைப் போன்றவர்கள்? எந்தப் பாவியாவது நம்ப காந்தியார் மரணத்தை முன் கூட்டியே ஒரு வார்த்தை சொல்லித் தொலைக்கக் கூடாதா?" என்று கேட்டேன்.

ஹஹ்ஹா! என்று சிரித்தார்!

"என்ன ஓய், சிரிக்கிறீர்? என் வயிறு எரிகிறது, நீர் இளிக்கிறீரே!...ஓஹோ! ஹிந்து மகா சபைத் தலைவரல்

லவா நீர்? உம் பிள்ளைதான் ராஷ்ட்ரீய சேவா சங்க மாச்சே! செத்துப் போனதற்கு இனிப்பு வழங்கிய கிராதக் கூட்டத்தைச் சேர்ந்தவராச்சே!" என்றேன், எதிர் பாராத ஆத்திரமடைந்தவனாய்!

"ஏனப்பா ஆத்திரப்படுகிறாய்? அவர் ப்ராப்தம் அவர் கொலையுண்டு மாண்டார். நீயும் நானும் என்ன செய்ய முடியும்? சும்மா மிரட்டாதே! நாங்களெல்லாம் பழைய ஆசாமிகள் போன்றவர்கள் என்று நினைக்காதே! இப்போதெல்லாம் எங்கள் முறை மாறியிருக்கிறது. தெரியுமா? ரிக் வேதத்தின்மேல் ரிவால்வரை வைத்துப் பூஜை செய்கிறோம், என்பதை மறந்து விடாதே! அது சரி! மகாத்மா கொல்லப்படுவார் என்பது எனக்கா தெரியாது? அவர் ஜாதகமே பேசுகிறதே! சொல்கிறேன், கேள்!

அவருக்கு இப்போது நடப்பது சனி திசையில் சனி புத்தி. அவர் பிறந்தது சுக்கில வருஷம் புரட்டாசி மாதம் 18 ந் தேதி, சனி வாரம் துவாதசி திதி, மக நக்ஷத்திரம். (இது உண்மையான தேதி).

திசா நாதனாகிய சனியுடன், ஜாதகத்தில் அவயோகம் கொடுக்கும்படியான குரு பகவான் சஞ்சரிக்கிறான். ஜாதகரின் ஜனன காலத்தில் குருவும் சனியும் அங்காரகன் வீட்டில் இருந்தார்கள். அந்த அங்காரகன் இப்போது சிம்ம லக்கினத்தில் வக்கரித்து நிற்கிறார் அவயோக கிரகமாகிய குரு பகவான் விருச்சிகத்தில் தற்காலம் சஞ்சரிப்பதனால் கெடுதல் சம்பவம் நிச்சயமாக ஏற்படும். சூன்ய கிரகமாகிய சனி திசை நடப்பதனாலும், ஜாதகத்தில் சனி நின்ற ராசியில் குரு சஞ்சரிப்பதாலும், துர் மரணந்தான் சம்பவிக்க வேண்டும் என்பது......"

இதைக் கேட்டுக் கொண்டிருந்த என் நண்பன், விட்டான் ஒரு அறை, சோதிடர் கன்னத்தில்! இரண்டு பற்கள் விழுந்தன! இரத்தமும் சொட்டிற்று.

"உமக்கு இந்த நிமிஷம் எந்த திசையில் எந்தப் புத்தி அய்யா, சொல்லும் ஜோசியரே!" என்று கேட்டான், என் நண்பன்.

"அவருக்கா? தெற்குத் திசையில் அற்பப் புத்தி! ஏனப்பா, அவரை அடிக்கிறே, பாவம்! ஏதோ வயிற்றுப் பிழைப்புக்கு நேரு ஜோசியர், ராஜாஜி ஜோசியர் என்று பேர் வைத்துக் கொண்டால் அதற்காகவா இப்படி அறைகிறது?" என்று சமாதானம் சொன்னேன்.

"போதும்! நீ சும்மா இரப்பா! என் ஆத்திரத்தைக் கிளறாதே! இந்த ஆள் அளந்த அளப்பெல்லாம் ஜனவரி 30 ந் தேதிக்கு முன்னால் காணோமே! அயோக்கியப் பிழைப்பு! ஜோசியமாம் ஜோஸ்யம்! இனிமேல் எந்த முட்டாள் பயல் இந்த நாட்டில் இந்தப் பித்தலாட்டப் பிழைப்பை நம்பப் போகிறான்? மகாத்மாவின் மரணத்தையே முன் கூட்டிச் சொல்ல முடியல்லே! இப்போ உளறுகிறான்கள்! நீயும் கேட்டுக் கொண்டிருக்கிறாய்!" என்று சொல்லிவிட்டுப் போய் விட்டான்.

"அவன் ஒரு மாதிரி முன் கோபக்காரன்! போனால் போகிறான்! நீர் அடிபட வேண்டிய பிராப்தம்! அழுகாதீர்; குழாயில் வாயைக் கொப்புளியும்! இனிமேலாவது வேறு ஏதாவது ஒரு நல்ல தொழிலாகப் பார்த்துக் கொள்ளும்! போங்காணும், போம்! வீட்டுக்குப் போம்! உம் வீட்டில் அங்காரகன் வந்து குடியேறிவிடப் போகிறான்! காலங் கெட்டுக் கிடக்கிறது! வீடில்லாதவர்கள் பிறருடைய காலி வீட்டில் பலாத்காரமாகக் குடியேறுகிறார்களாம்! நீர் சூரியன் வீட்டையும் சந்திரன் வீட்டையும் பற்றியே பேசிக்

கொண்டு உம் வீட்டைக் கோட்டை விட்டு விடப் போகிறீர்! போங்காணும்!''

என்று சமாதானம் கூறி அனுப்பி வைத்தேன். நீங்களும் யாராவது அவரைக் கண்டால் ஆறுதல் சொல்லுங்கள்! உயரமான சிவந்த ஆள்; உச்சிக் குடுமி! பகலில் வீட்டிலிருப்பார்; இரவில் இந்து மகா சபையிலிருப்பார். வெளியே வரும்போது கதர் வேஷ்டி கட்டிக் கொண்டு வருவார்; காந்திக் குல்லாகூடப் போட்டிருப்பார். கண்டால் புத்தி சொல்லுங்கள்! பாவம்!

★

## 18. தர்ப்பையும் ரிவால்வரும்!

தர்ப்பை பிடிக்கிற கையில் பேனாவைக் கொடுத்தால் அது யார் குடியைக் கெடுக்கலாம் என்றுதானே 'ப்ளான்' போடும்? தர்ப்பை இனத்தைக் கொண்டுபோய் திவான் பதவியில் வைத்தாலும், அது இறுதியாக காலட்சேபப் புத்தியை விட்டுவிடுமா?

இந்த விதமாக ஒரு மாதிரிக் கவலையுடன் எதை எதையோ ஆலோசித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தேன்.

வம்புக்கார சிநேகிதர் ஒருவர் வந்தார். எட்டிக்குப் போட்டியாக எதையாவது சதா கேட்டுக்கொண்டேயிருப்பவர். அவர் 10 கேள்வி கேட்டால் நான் ஒன்றுக்குத்தான் பதில் சொல்வது வழக்கம். எப்படியாவது என் வாயைப் பிடுங்குவதில் அவருக்கு அலாதிப் பிரியம். அவரிடத்தில் நான் மௌன விரதப் போட்டி போட்டு தோற்காத சமயமே கிடையாது. ஆனால் இந்தத்தடவை அவர் என்ன பாடுபட்டாலும் சரி, வாயைத் திறப்பதே இல்லை என்று முடிவு செய்து கொண்டிருந்தேன். ஏனென்றால் எனக்கு யார் பேரிலேயோ மகாக் கோபம்! ஆத்திரம்! மன வேதனை! காந்தியார் உடல்

யமுனைக் கரையில் (எனக்குத் தெரிந்த ஒரு இடத்தில்) எரிந்து கொண்டிருந்தது என் கண் முன்னாலேயே நின்று கொண்டிருந்தது.

இந்தச் சமயத்தில்தான் நண்பர் வந்தார்.

"என்னய்யா! குத்தூசி! முகம் மூணாம் பேஸ்து வைத்தவன் 'ஏஸ்' பிடியை இழந்துவிட்டு, கைத்துருப்பும் காலியாகி, எந்தச் சீட்டை இறங்குவது என்று யோசிக்கிறது போல இருக்குதே!" என்றார்.

மௌனம்!

"மகாத்மா காந்தியை ஒரு சண்டாளன் கொன்று விட்டானே! பார்த்தீரா? அயோக்கியப் பயல்! 79-வயது கிழவரைக் கொல்ல எப்படித்தான் மனம் வந்ததோ?"

நான் வாய் திறக்கவில்லை. கசிந்த கண்ணீரை மட்டும் துடைத்துக் கொண்டேன்.

"அந்த சண்டாளப் பயல் ஆடு வெட்டுகிற வேலையிலிருப்பவனா, என்ன? ஆட்டை விட சாந்தமானவராச்சே மகாத்மா? கசாப்புக்கடைக்காரனுக்குக்கூட மனம் வராதே, அவர் மேல் கைவைக்க?"

மீண்டும் மௌனம். மெய் மட்டும் சிலிர்த்தது.

"அந்தக் கிராதகன் — வாலியை மரத்தின் மறைவிலிருந்து கொன்ற ராமனைப் போல—கும்பிட்டுவிட்டு கொன்றிருக்கிறானே! அவன் வம்சம் அழியாதா? அவன் கூட்டம் ஒழியாதா? நினைக்க நினைக்க என் நெஞ்சு பதறுகிறதய்யா? படுபாவி! ஈனஜாதிப் பயல்! வெறிபிடித்த காண்டா மிருகம்! எருமைகூட ஒரு குழந்தையைக் கண்டால் விலகிப்போகுமே! குழந்தைகளிலும் குழந்தையான கிழவரைக் கொல்லஎப்படித்தான் மனம் வந்ததோ? இரக்கமென்ற ஒன்றில்லாத அரக்கன்!"

கண்ணீரை மறைப்பதற்காகக் குனிந்து கொண்டேன். பேசவில்லை.

"ஏனய்யா, வாய் திறக்காமல் பெம்புளை மாதிரி அழுகிறீர்?............சரி! உம்மை ஒன்று கேட்கலாமென்று தான் வந்தேன். அந்த மிலேச்ச ஜாதிப் பயல் ஒரு பார்ப்பா னாமே! 'விடுதலை' பத்திரிகையில் போட்டிருந்ததே! நிஜந் தானா? மற்றப் பத்திரிகை எதிலுமே வரவில்லையே!"

மீண்டும் மௌனம் சாதித்தேன் என் கையிலிருந்த 'பாரத தேவி' 'லிபரேட்டர்' 'சுதந்தர நாடு' ஆகிய மூன்று பத்திரிகைகளையும் நீட்டினேன்.

"ஓஹோ! மூன்றிலும்போட்டிருக்கே! மற்ற களவாணிப் பயலுகள் (இவர் மதுரை ஜில்லாக்காரர்) பத்திரிகையில் போடலையே, ஏன்? என்ன பித்தலாட்ட உலகமய்யா, இது? கொலைக்காரன் ஒரு துலுக்கராகவோ, சீக்கியராகவோ, வெள் ளையராகவோ, மற்றவனாகவோ இருந்தால் இந்நேரம் இந்த அயோக்கியப் பத்திரிகைகள் பட்டைச் சோறு பெரிசு எழுத் திலே போட்டிருக்காதா?

நான் வாய் திறக்கவே யில்லை.

"அது சரி! நீரென்ன, பேசாமடைந்தையாகி விட் டீரோ? ஆமா!......'பார்ப்பானெல்லாம் சுத்தப் பேடிகள்! கோழைகள், பின்புறமிருந்துதான் விஷமம் செய்வானே யொழிய எதிர்த்து நிற்கமாட்டான்," என்றெல்லாம் சொன் னீரே, இதற்கென்ன சொல்கிறீர்? என்ன வீரத்தனத்துடன் காந்தியைச் சுட்டான் பாரும்?" என்று சம்பிரமாகக் கேட்டார்.

"ஓய் நிறுத்துங்காணும்! பலே வீரத்தைக் கண்டுவிட்டீர்! காந்தியை சுட்டுக் கொல்வதற்கு ரொம்ப வீரம் வேணுமோ? அதுவும் கிட்டே வருகிறபோது கும்பிட்டுவிட்டு, திருட்டுத் தனமாக ரிவால்வரை எடுத்துச் சுடுவதற்கு? பேடியிலும்

கடைந்தெடுத்த பேடிகூட இதைச் செய்யலாமே! மிலேச்சப் பயல்! தர்ப்பை பிடிக்கிற கையில் ரிவால்வர் கிடைத்தால் யாரைச் சுடுகிறது என்பது எப்படித் தெரியும்? ஆடு மேய்த்த கூட்டத்திடம் ஆட்சியை ஒப்பித்தால் அது உருப்படவா போகிறது? இந்தக் காந்தியாரே ஒரு பார்ப்பானா யிருந்தால் அந்தப் பயல் இப்படிச் செய்திருப்பானா? நாசகாரப் பயல்! சதிகாரக் கும்பல்! நன்றிகெட்ட நரிக் கூட்டம்!''—

என்று எதை எதையோ என் ஆத்திரத்திலும் துயரத்தி லும், முன் பின் யோசிக்காமல், அக்கம் பக்கம் பார்க்காமல் மவுண்ட்ரோடு மஹா விஷ்ணுவையும் மறந்துவிட்டு கொட்டி விட்டேன்.

"பார்த்தீரா! உம்மைப் பேசச் செய்தேனா, இல்லையா? இவரிடம் உமது பாச்சா பலிக்காதையா! எவரிடம்? இதோ இவரிடம்!'' என்று தன் மார்பைத்தட்டிக் காட்டிக்கொண்டே புறப்பட்டு விட்டார்.

★

## 19. பிச்சுவய்யர் ஹோட்டல் பிரியாணி!

"அண்ணா! மொய்தீன்! நீங்கள் பிச்சுவய்யர் ஹோட்ட லில் பிரியாணி சாப்பிட்டிருக்கிறீர்களோ? என்ன ருசி, போங்கள்? அருமையான 'டேபிள்' அரிசி! கோயமுத்தூர் நெய், சொட்டச் சொட்ட! அன்று வெட்டப்பட்ட ஆடு! கமகமவென்று ஒரு பர்லாங் தொலைவுக்கு ஓரே வாசனை! 'ப்ளேட்' ஒன்றுக்கு 3 ரூபாயாம்! 6 ரூபாய் கூடக் கொடுக்க லாம்!'' என்றார், மொய்தீனின் நெருங்கிய நண்பரான சு. ம. சுப்பையா!

"என்னப்பா சுப்பையா! உன் சூனா மானா பிரசாரத்தை என்னிடத்திலேயே ஆரம்பித்து விட்டாயே! நான்தான் 10-15 வருஷமாக சூனாமானாவாச்சே! நாஸ்திக மகாநாட் டிலே கூடப் பேசியிருக்கிறேனே! வைதீக முஸ்லிம்களின்

எதிர்ப்பையெல்லாம் சட்டை பண்ணாமல் தனிக் குடித்தனம் பண்ணுகிறேனே! என்னிடமா உன் பிரசாரம்? பார்ப்பான் ஹோட்டலில் பிரியாணியாம்!"

"அண்ணா, கிண்டலுக்கென்றா நினைக்கிறீர்கள்? இல்லை. உண்மைதான். காலம் மாறுகிறதா இல்லையா? அவர்களும் மாறுகிறார்கள்! ஸ்பென்ஸர் ஹோட்டலில் சாம்பார்ச் சோறும் தயிர்ச் சோறும் பஜ்ஜியும் கிடைக்கின்றன என்று போனவாரம் சொல்லியிருந்தால் கிண்டல்செய்கிறேன் என்றுதானே கூறியிருப்பீர்கள்? இப்போதுஎன்னசொல்கிறீர்கள்? 5 வருஷத்திற்கு முன்னே வெள்ளைக்கார கவர்னர் குங்குமம் வைத்துக் கொண்டார் என்று யாராவது கூறினால் கூறுகிறவனை பைத்தியக்கார ஆஸ்பத்திரியில்தானே சேர்ப்பார்கள்? இப்போது பாருங்கள்! நம் மாகாண கவர்னர் குங்குமப் பொட்டு வைத்துக்கொண்டதாகப் படித்தோம்! இங்கிலீஷ்காரனுக்கும் பார்ப்பானுக்கும் இருக்கிற சமயோசித புத்தி உங்களுக்கும் எனக்கும் வரவே வராது, அண்ணா! நீங்களும் நானும் ஜாதியையும் மதத்தையும் கட்டிக்கொண்டு அழுவோமே தவிர, காலத்திற்கேற்ற வேஷம் போடத் தெரியாதவர்கள்! பாருங்களேன்! சி. பி. ராமசாமி அய்யர் பொசாட்டோ ஹோட்டலில் எருமை நாக்கை சாப்பிடுகிறார்; அவர் நாக்கில் படாத இறைச்சி வகையே இருக்க முடியாது. குடிவகையும் அப்படித்தான். ஆனாலும் "பிராமணர் மகாநாட்டு"க்குத் தலைவர் அவர்தான்! சமஸ்கிருத சங்கத்துக்கு காப்பாளர் அவர்தான்! பார்ப்பனருக்கே தனிப்பெருந் தலைவராயிருக்கிறாரே!"

"அதெல்லாம் சரி! ஆகையால் பிச்சுவய்யர் ஹோட்டலில் பிரியாணி செய்திருப்பதாக என்னை நம்பச் சொல்கிறாய்! அதுதானே?"

"நம்பச் சொல்கிறேனா? சாப்பிட்டே பார்த்து விட்டேன்! பிரியாணி செய்வது யார் தெரியுமோ? பரம்பரையாய்ப் புகழ்பெற்ற உங்கள் கூட்டமுமல்ல; தஞ்சா

ஆர் மராட்டியருமல்ல. ஸர் சி. பி. யிடம் சமையற்காரனாயிருந்த—அய்யராம்! ரொம்ப அனுபவசாலியாம்! கோழி குருமா கூட வெகு பேஷாக செய்வாராம்! மாதம் 250 ரூபாய் சம்பளமாம்! நீங்கள் கட்டாயம் ஒரு வேளையாவது சாப்பிட்டுப் பார்க்க வேண்டும், அண்ணா! என்ன ருசி! என்ன வாசனை, போங்கள்!" (சுப்பையா வாயிலிருந்து தரை வரையில் பென்சில் பருமனுக்கு எச்சில் கம்பி நீண்டது!)

இந்தக் காட்சியைக் கண்டபின் கூடவா மொய்தீன் சந்தேகப்படுவார்? என்ன புரட்சி பாருங்கள்! ஸ்பென்சர் ஹோட்டலில் சாம்பார்ச் சோறு! ஆமாம்! அதுவும் சரிதானே! பூரண மதுவிலக்கு வந்த பிறகு அந்த நஷ்டத்தை ஈடுபண்ண வேண்டுமே! அதற்கு சாம்பார் சோறு, பஜ்ஜி, காபி, வகையறாவை விட வேறு நல்ல வியாபாரம் என்ன இருக்கிறது?

காபி ஹோட்டல் வைப்பது என்றால், சொந்த அச்சாபீசில் 'கரன்சி நோட்' அடிப்பது மாதிரி! உளுந்து ரூபாய்க்கு $2\frac{1}{8}$ படி ஆனாலுங்கூட அரையணா இட்லி ஒரு ரூபாய் கனம்தானே இருக்கிறது? காலணாப் பொறாத சோற்றுப் பொட்டலம் மூன்று அணாவுக்குத்தானே விற்கிறது? இந்தப் பகற் கொள்ளையைக் கேட்க யாராவது உண்டா? நான் மட்டும் மந்திரியாயிருந்தால் (நாடக மேடையில்தான் சொல்கிறேன்!) ஹோட்டல்களை யெல்லாம் அந்தந்த முனிசிபாலிடிதான் நடத்த வேண்டும் என்று ஒரே உத்தரவு போட்டுவிடுவேன்!

மணி அடிக்கிறது! திரை விழுகிறது! எல்லோரும் எழுந்துவிட்டனர்! வேஷம் கலைந்தது! நான் பழையபடி வெறும் 'குத்தூசி'யாகி விட்டேன். கனம் மந்திரியார் சைகிளில் புறப்பட்டுவிட்டார்!

★

## 20. பரந்த பார்வைக்குள் போடி விஷயம்!

கண்ணபிரான் மைனர் செயின் பேர்வழி! பாரகூட் சில்க் ஜிப்பா! ஜிப்பா பைக்குள்ளிருக்கும் கரன்சி நோட் வெளியே தெரியும்! அமெரிக்கன் கிராப்! வாயில் சிகரெட்! இடுப்பில் மல் வேட்டி! கணுக்காலுக்குக் கீழே 6 அங்குலம் தொங்கும்படியாக! பண்ணையாள் மனைவி பச்சையை வெறிக்க வெறிக்கப் பார்த்தான்! அவள் முகத்தைச் சுளித்து முறுக்கைப்போலச் சுற்றி வெறுப்பைக் காட்டினாள். மைனர் பிள்ளையாண்டான் பிடிவாதம் செய்தான்! நெருங்கினான்! முகத்தை உற்று நோக்கினான்! காம விழிகளால் விழுங்கப் பார்த்தான்! அவள் கையில் ஒன்றுமில்லை. தன்னந் தனியா யிருந்தாள். கூச்சலிடாமல் புத்தி கற்பிக்க எண்ணினாள் மெல்ல அடுக்குப் பானையை அடைந்தாள். கலயத்தில் கை விட்டாள். மிளகாய்ப் பொடியை அள்ளினாள். கண்ணபிரான் கண்களில் தூவினாள்! சிறு கதை எழுதும் நோக்கமல்ல ஆகையால் நிறுத்தி விட்டேன்!

கண்ணில் விழுந்தது மிளகாய்ப் பொடிதான்! ஆனாலும் 'போடி' விஷயம் என்று அலட்சியப் படுத்திவிட முடியுமா?

பார்ப்பனர் பண்ணுகிற அட்டகாசங்களை அம்பலப் படுத்துகிறேனே, இதெல்லாம் பொடி விஷயம் என்று எழுதியிருக்கிறார், திருச்சி இளைஞர் ஒருவர்.

கண்ணபிரானைக் கேட்டால் தெரியும், பொடி விஷயம் எப்படி யிருக்கிறது, என்பதை.

தஞ்சாவூர் ஜில்லாவில் ஒரு வழக்கமுண்டு. மிராசுதார் வீட்டுப் பையனுக்கு எட்டுவயதுதான் இருக்கும். கோவணம் கட்டாமல்கூடத் திரிந்து கொண்டிருப்பான். 40, 50 வயதுள்ளவர்களை யெல்லாம் "டேய்! சுப்பா! வண்டி

கட்டேண்டா!" என்றும் "ஏய், தம்புசாமி இலை அறுத்து வாடா," என்றும்தான் கூப்பிடுவான். ஆனால் அந்தப் பையனைமட்டும் யாராயிருந்தாலும் "தம்பி வந்தாங்க! சின்னத் தம்பி தூங்குறாங்க! கடைசித் தம்பி அழுகுறாங்க!" என்றுதான் சொல்ல வேண்டும். இது வெறும் ஜாதி அகம்பாவமட்டுமல்ல. மிராசுதார் என்றபணக்காரத் திமிரும் கலந்த ஒரு ஆணவ மனப்பான்மை. மற்றவர்கள் மரியாதையாய்க் கூப்பிட வேண்டும் என்பதற்காக அந்தச் சிறு பயலின்வீட்டுப் பெரியவர்கள் மரியாதை முறையைக் கையாள்வார்கள். அதாவது மற்றவர்களுக்காக நடத்திக் காட்டும் ஒத்திகை அது! 50 வயதுத் தகப்பன் தன் 8 வயதுப் பையனைப் பற்றிப் பேசும் போது, "சின்னத் தம்பி சாப்பிட்டுச்சோ?" என்றுதான் கேட்பார். அதாவது நானே 'அவன்' என்று சொல்வதில்லை பார்! உலகமே ஜாக்கிரதை! என்று எச்சரிப்பது போன்ற அகம்பாவ அறிவிப்பு!

இந்த முறை பார்ப்பனரிடத்தில் சர்வ சாதாரணமாய் இருப்பதைக் காணலாம். சாதாரண ஒரு சோம்பேறிப் பார்ப்பனனை ஹைகோர்ட் ஜட்ஜ் அய்யர், "சாஸ்திரிகளே! வாருங்களேன்!" என்றுதான் அழைப்பார். சமையற்காரப் பார்ப்பானைக்கூட மரியாதையாகத்தான் அழைப்பது வழக்கம். பேஷாக அழைக்கட்டும்! ஆனால் வண்டியோட்டுகிற நம்மவனை மட்டும், "டேய் அண்ணாசாமி! அதட்டி ஓட்டேண்டா!" என்று கூப்பிடுவானேன்? மோட்டார் ஓட்டும் ராமய்யரைமட்டும், 'ராமய்யரே! காரை எடுங்காணும் போகலாம்!" என்று கூப்பிடுவானேன்? ஜாதி அகம்பாவந்தானே? நீங்களே சொல்லுங்கள்.

ஒரே ஒருஊரில் ஒரு ஹைஸ்கூல். அதில் 4 ப்யூன்கள் இருக்கிறார்கள். அவரில் ஒருவன்மட்டும் பார்ப்பனன்.

மற்ற மூவரும் நம்மவர்கள். அந்தப் பள்ளியிலுள்ள பார்ப்பன ஆசிரியர்கள் ப்யூன்களை எப்படி அழைக்கிறார்கள் தெரியுமா?

"டேய்! அரியான், வாடா இங்கே!"

"டேய்! கிருஷ்ணா, போடா அங்கே!"

"டேய்! வீராசாமி, எடுடா அதை!"

ஆனால் பார்ப்பன ப்யூனை அழைக்கும் விதம் எப்படித் தெரியுமா?

"ஓய்! சுப்பையரே! இங்கே வாங்கோ?"

இந்த வித்தியாசம் என்? எல்லோரும் ப்யூன்கள் தானே? இந்த ஆணவத்திற்கு எப்படித்தான் மண்டை லடிப்பது? இந்தப் பள்ளிக்கூடம் சேலம் ஜில்லாவிலிருக்கிறது. ப்யூன்களின் பெயர்கள்கூட உண்மைதான் கற்பனையல்ல.

ஆனால் அவர்கள்மீது குற்றஞ் சொல்ல மாட்டேன் நம்மளவன்தான் ஹோட்டல்காரப் பார்ப்பனனையும் டீக் கொடுப்பவனையுங்கூட 'சாமி' என்று கூப்பிடுகிறானே! பஸ் கண்டக்டர் பஷீர் அஹமத் கூட பார்ப்பன ட்ரைவராயிருந்தால் 'சாமி! கொஞ்சம் மெள்ளப் போங்க!" என்றுதான் சொல்கிறாரே தவிர, "ரெகுநாதா! மெள்ளப் போடா!" என்று சொல்ல அஞ்சுகிறாரே!

செருப்புக் கடை வைத்திருக்கும் பார்ப்பானைக்கூட, "சாமி! நல்ல செருப்பா ஒரு ஜோடி எடுங்க! அதோ உங்க தலை மேலே இருக்கே, அந்த செருப்பு எனக்கு சரியாயிருக்கும்!" என்றுதானே சொல்கிறார்கள், நம்மமக்கு பிளாஸ்திரிகள்! அவனைக் குற்றஞ் சொல்வது தப்பு. நம்ம ஆட்கள் மூளைக்குத்தான் தினம் கொஞ்சம் 'பினைல்' ஊற்றிக்

கழுவ வேண்டும். அவ்வளவு நாற்றம் பிடித்துப்போயிருக்கிறது, போங்கள்!

நான் சொன்னால் இதெல்லாம் பொடி விஷயம் என்பீர்கள்! உங்களுக்குப் பொடி விஷயமாயிருக்கலாம்! ஆனால் எதிரிகளின் கண்களுக்கு மூக்குப் பொடியாகவும், மிளகாய்ப் பொடியாகவும் அல்லவா இருக்கின்ன? இல்லாவிட்டால் நாள்தோறும் 'குத்தூசி'க்கு இத்தனை அர்ச்சனைகள் நடக்குமா? உளுத்த சரக்குகளை அம்பலப்படுத்துவதை விட "குத்தூசி"க்கு வேறு வேலைதான் என்ன இருக்கிறது?

★

## 21. கத்தரிக்காயும் கார்ல் மார்க்சும்

என் சினேகிதர் ஒருவர் பெரிய புலவர். இங்கிலீஷிலும் பட்டம் பெற்றவர். ஆனால் அந்தப் பட்டத்தை இதுவரையில் கயிற்றில் கட்டிக்கூடப் பறக்கவிட்டதில்லை! படித்தது எம். ஏ, பி எல். செய்வதோ தமிழ்ப் பிரசங்கம். அதுவும் சைவ மதப் பிரசாரம்! அவரைப் படிக்க வைத்த பணத்தைக் கொண்டு மாட்டுப் பண்ணை வைத்திருந்தால் இத்தனை வருஷங்களுக்குள் பழையகோட்டை மாட்டுப் பண்ணையை விடப் பெரிதாகியிருக்கும்! கோழிப் பண்ணை வைத்திருந்தால் இன்றைக்கு விற்கிற விலைக்கு (முட்டை ஒன்று 0—2—6 இந்த ஊரில்; உங்கள் ஊரில் என்ன விலையோ?) தினம் 40 ரூபாய் கிடைக்கும். அதாவது ஆரம்ப ஐ. சி. எஸ்.காரர் சம்பளத்தைவிட அதிகம்! இன்கம்டாக்ஸ் இல்லை!

இவரை மட்டும் குற்றஞ் சொல்லி என்ன பிரயோஜனம்? எனக்குத் தெரிந்த அத்தனை பேர் படிப்பும் இந்தமாதிரித்தான்! என்னையும்வேண்டுமானாலும் சேர்த்துக் கொள்ளுங்கள்!

ஷ்டி என் சிநேகிதர் நன்றாகப் படித்தவர். ஒரு நாள் தமிழ் இசைக் கழகத்துச் செயலாளர் அவரைத் தம் கழகத்தில் பேசுவதற்கு அழைத்தார். வக்கீல்—தமிழ்ப் புலவர் ஒப்புக்கொண்டார். அப்படியே பேசியு ம தீர்த்தார். அந்தக் கூட்டத்திற்கு சுமார் 700 காலி நாற்காலிகளும் என்னைச் சேர்த்து 57 கலா ரசிகர்களும் வந்திருந்தனர்! பேசியது நன்றாய்த்தானிருந்தது! ஆ ன ா ல் விளம்பரமில்லாத பேர்வழி! எதைப் பற்றிப் பேசினார் தெரியுமா? "கத்தரிக்காயும் கார்ல் மார்க்சும்" என்பது பற்றித்தான்! அதுவும் இசைக் கழகத்தில்! இசை—கத்தரிக்காய்—கார்ல்மார்க்ஸ்! எவ்வளவு நெருங்கிய சம்பந்தம், பாருங்கள்!

வந்திருந்த ரசிகர்களில் ஒருவருக்குக்கூடப் பிடிக்கவில்லை. கூட்டம் கலைந்தது. புலவர் வெளியே வந்தார்.

"இதென்னய்யா, சிறிதும் பொருத்தமில்லாத விஷயங்களை ஒன்று சேர்த்திருக்கிறீரே! பேசுவதற்கு உமக்கு வேறு விஷயமா இல்லை?" என்று கேட்டேன்.

"பொருத்தமில்லாத விஷயமா? என்னைப் போன்றவன் பேசினால் இப்படித்தான் சொல்வீர்கள்! இதோ பாருங்கள்!"

தன் கையிலிருந்த ஒரு 'பொங்கல் மலரை' எடுத்து விரித்தார். தலைப்பிலுள்ள பெயரைக் கையால் மறைத்துக் கொண்டார்.

' இந்த நாலு வரிகளையும் படியுங்கள்!" என்றார்.

ப த்தேன்:—

"திதி, நட்சத்திரம் இவற்றுக்கும் மழைக்கும் கொஞ்சம் சம்பந்தமுண்டு" என்று அச்சிடப்பட் டிருந்தது!

"இதற்கு என்னய்யா சொல்கிறீர்?" என்று கம்பீரப் பார்வையுடன் கேட்டார்.

நான் சற்று யோசித்தேன். திதி—நட்சத்திரம்—மழை! இசை—கத்தரிக்காய்—கார்ல் மார்க்ஸ்! திதி—நட்சத்திரம்—மழை!—

என்று இரண்டு தடவை கூறினேன்! மூக்கில் விரல் வைத்தபடியே ஒரு நிமிஷம் நிதானித்தேன். "ஆஸ்ட்ரேலியாவில் ஆகாயவிமானஉதவியால் மழை! ரஷ்யாவில் வேண்டும் போது, வேண்டிய இடத்தில், வேண்டுமான அளவு மழை! வர்ண ஜப சக்தியுள்ளவர் வாழும் இடத்தில் மழையேயில்லை! "கொழுநற்றொழுதெழுவாள் பெய் எனப் பெய்யும் மழை," என்ற நாட்டில் மழையில்லை! இதிலோ, திதி—நட்சத்திரம்—மழை என்றிருக்கிறது!"— என்று மனதுக்குள்ளேயே முணு முணுத்துக் கொண்டேன். ரயில் வண்டிப் பிரயாணத்தின்போது பயிர்கள் மழையில்லாமல் வாடிக்கிடந்தது என் மனக்கண் முன் வந்தது. எனவே கோபமும் வந்தது!

"இதைத்தானே கேட்கிறீர்? எவனோ பித்தலாட்டக்கார பஞ்சாங்கப் பார்ப்பான் எழுதி யிருக்கிறான்; கிழித்தெறியுமய்யா! திதியாம் நட்சத்திரமாம்! மழையாம்! சம்பந்தமாம்,!" என்று ஒரே போடாகப் போட்டேன்!

மறைத்திருந்த தன் கையை எடுத்தார்! எழுதியவர் பெயரைப்பார்த்தேன்! திடுக்கிட்டுவிட்டேன்! ஒரு கவர்னரின் பெயர் இருந்தது!

"ஏன், ஓய்! மிரள மிரள விழிக்கிறீர்? ஒரு கவர்னர், அல்லது ஒருமந்திரி, அல்லதுஒரு பணக்காரன் என்ன அபத்தத்தைத் சொன்னாலும் அதைப் "பெரிய விஷயம்" என்பீர்கள்! என்னைப் போன்ற ஏழை— விளம்பரமில்லாதவன்— எவ்வளவு நன்றாகப் பேசினாலும் முகத்தைச் சுளிப்பீர்கள்!

உங்களைச் சொல்லவில்லையய்யா? இந்தக் குருட்டு உலகமே அப்படித்தானய்யா இருக்கிறது! ஏழையின் சுய அறிவுக்கு எங்கே மதிப்புத் தருகிறார்கள்?'' என்று கேட்டார்.

அவர் அப்படிச் சொன்னது சரியா? தவறா? நீங்களே அவ்வப்போது யோசித்துப் பாருங்கள்.

★

## 22. சனாதனமும் வேத பாடசாலையும்

இந்த இரண்டுக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது என்று நான் சொன்னால், 'குத்தூசி' பார்ப்பன துவேஷி' என்பார்கள்! "ஆமாம்! பரந்த நோக்கமேயில்லை,'' யென்பார்களு புரட்சி வீரர்கள்!

"எனப்பா புரட்சி வீரா, ரிக்வேதத்தைக் கையில் வைத்திருக்க வேண்டிய பார்ப்பான் ரிவால்வரை ஏந்திக் காந்தியாரைச் சுட்டுக்கொன்றானே! அது மட்டும் நியாயமா? அதை இந்த நாட்டு இப்பந்திப் பத்திரிகைகள், ஆஷாட பூதி ஏடுகள் அத்தனையும் மறைத்து விட்டனவே! அது மட்டும் சிற்றினச் செய்கை அல்லவா?'' என்று கேட்டால், ஹீ! ஹீ! என்று இளிக்கிறார், புரட்சிக்கார இளங்காளை!

இந்தக் காலத்தில் முறையாக வேதஞ் சொல்கிற பிராமணனே கிடையாது. மஞ்சளும் சுண்ணாம்பும் கலந்தால் சிவப்பு நிறமாக வேண்டும். ஆனால் ஆகவில்லை; ஆகையால் மஞ்சளோ சுண்ணாம்போ மாறியிருக்கவேண்டும்; அல்லது கெட்டுப் போயிருக்க வேண்டும். வேத மோதினால் நினைத்த போது மழை பெய்யவேண்டும். ஊர் செழிக்க வேண்டும். இது சாஸ்திர விதி. இன்று மழையுமில்லை செழிப்புமில்லை. ஆனால் கோயில்களில் கத்தும் சில தவளைகளை

வேதப்பிராமணர் என்று மட்டும் கூறுகிறோம்! அவர்களுக்கு இலவசச் சாப்பாடு போட்டு வருகிறோம், வெட்கமில்லாமல்!

இன்று எல்லா பிராமணர்களுக்கும் வேதம் தெரியாது. ஆனால் க்ஷவரத் தொழில் தெரியும். தினம் அதிகாலையில் **Self-chave**- சுய க்ஷவரம் செய்து கொள்வதைத் தான் கூறுகிறேன்! இதையே தம் தொழிலாக வைத்திருப்பவர்களை மட்டும் கீழ் ஜாதி என்று சொல்லுகிறார்களே! அவர்கள் மூளையில் களி மண் (பாளவியா லண்டனுக்கு கொண்டு போன சரக்கு) அதிகமாயிருக்க வேண்டும். தன் துணியைத் தானே வெளுத்துக் கொள்ளும்போது அது உயர்ந்த வேலையாம். அதையே ஒரு தோழன் செய்து தந்தால் அது தாழ்ந்த தொழிலாம்! அதைச் செய்பவன் வீட்டில் சாப்பிடக் கூடாதாம்! நம் வீட்டுக் குழந்தையின் மலத்தை நாமே எடுத்தால் நாம் 'கீழ் ஜாதி' ஆகி விடுவதில்லை. ஆனால் அதையே தொழிலாகச் செய்பவன் 'கீழ் ஜாதி''யாம்! தொழிலின் அருமையே தெரியாத சோம்பேறிக் கூட்டம் கட்டி வைத்த கற்பனையப்பா இது! இதைச் சொன்னால், "ஹோ! ஹோ! பிராமண துவேஷம்," என்பார்கள்! அவர்களுடைய "பரந்த அநுபவத்தில் இது பொடி" விஷயமாகி விடுகிறது.

காலஞ்சென்ற சுப்பிரமணிய பாரதியார் ஒரு சதம்பக் கொள்கைக் காரர். 'ஆரியத்'தின் மேல் அளவு கடந்த ஆசை. புராணத்திலும் அப்படித் தான். ஆனாலும் 'சில விசேஷ சமயங்களில்' ரொம்ப அழுத்தமாகக் கண்டித்து விடுவார், தமக்குப் பிடிக்காத விஷயங்களை. இதோ ஒரு துண்டு:—

"தப்பாக வேதம் சொல்பவனைக் காட்டிலும் நன்றாகச்
சிரைப்பவன் மேல் குலத்தான் என்று கூவு"

"லோகோபகாரி" ஆசிரியர் பரலி சு. நெல்லையப்பருக்கு 1915 ஜூலை 19-ந்தேதியில் புதுச்சேரியி லிருந்து எழுதிய கடிதத்திலிருந்து எடுக்கப்பட்டது இவ்வாக்கியம்.

ஆகையால் தான் 100-க்கு 90 பிராமணர்கள் வேதம் ஓதுவதை விட்டு விட்டார்கள்; நாம் தான் அவர்களை முட்டாள் தனமாக 'பிராமணர்' என்று அழைக்கிறோம். அவர்கள் சொல்லிக் கொடுத்திருப்பதை மறந்துவிட்டோம். அவரவர் செய்கிற தொழிலைக் கொண்டு தான் இனி அவர்களை அழைக்க வேண்டும்! வேட்டி துவைக்கும்போது வண்ணார வைத்தினாதன் என்று கூப்பிட வேண்டும்; வைத்தினாதய்யர் என்று அழைப்பது தவறு! சுய க்ஷவரம் செய்துகொள்ளும்போது மருத்துவ மகாதேவன் என்று கூப்பிடலாம்; மகாதேவ சர்மா என்று கூப்பிடக் கூடாது. செருப்புக்கடை வைத்திருக்கும் ஆரியரை செருப்புத் தொழில் சீனுவாசாச்சாரி என்று அழைக்கலாம்.

"எப்படி அழைத்தாலும் அவர்கள் உயர்ந்த ஜாதியார்களாகத் தானே இருக்கிறார்கள்? தங்கள் பூணூலையோ, காயத்ரியையோ விடுவதில்லையே! அவர்களை எப்படி நம்மோடு சேர்த்துக் கொள்வது?" என்று சிலர் கேட்கலாம்.

கஷ்டந்தான். சுட்ட மண்ணும் ஈர மண்ணும் ஒட்டாது தான். ஏதாவதொரு நவீன விஞ்ஞான முறையை யாவது கண்டு பிடித்து ஒட்டித்தானே தீர வேண்டும்? அதற்காக அவர்களை விரட்டிவிட முடியுமா, என்ன? இங்கேயே பிறந்து, இங்கேயே வளர்ந்தவர்களல்லவா? அவர்களையே கேட்டுப் பாருங்கள், ஒட்டிக் கொள்கிறீர்களா? அல்லது ஓடிப்போகிறீர்களா,? என்று. அவர்களே ஒரு நல்ல வழியைக் கண்டுபிடித்துச் சொல்வார்கள்! ரொம்ப கெட்டிக்காரர்களாச்சே! சமயோசித புத்தி படைத்தவர்களாச்சே!

★

## 23. சம்பந்தி பாசம் விடுமா ?

ஊரில் எத்தனையோ கோவில்கள் இருக்கின்றன. யார் யாரையோ, எவன் எவனையோ, கடவுளாக்கிக் கோவில் கட்டி யிருக்கிறார்கள்! பொதுப் பணத்தைக் கையாடினவன், பெண்சோரம் செய்தவன், 7000—8000 மனித ஜீவன்களின் உயிரை ஒரே சமயத்தில் குடித்து மகிழ்ந்தவன், இப்படி எத்தனையோ யோக்கியர் (?) களுக்கு இந்த நாட்டில் கோவில்கள் இருக்கின்றன. அப்படி யிருக்கும்போது எதிரியை மறைந்து நின்று கொன்ற பேடி, தனியாக வந்த பெண்ணை அவமானப்படுத்தியவன், மித்திரபேத சூழ்ச்சியால் எதிரியைக் கொன்றவன், ஆகிய கல்யாண குணங்களை(?)க் கொண்ட ஒருத்தனுக்கு மட்டும் கோவில் இருந்தால் என்ன மோசம்?

தோழர் (யாருக்கோ?) ஆச்சாரியாரைக் கம்பர் மகாநாட்டுக்காரர் பேசச்சொன்னார்கள். அவர் பேசினார், இப்படியாக :—

"கடவுள், கடவுளுடைய மூர்த்திகள், கடவுளுடைய தாஸர்களான ஆழ்வார்களுக்குத்தான் நம் முன்னோர்கள் கோயில் கட்டி யிருக்கிறார்கள். ஆகவே கம்பர் ஞாபகார்த்தமாகக் கோவில் கட்டுவதாக இருந்தால் ஸ்ரீ ராமர் கோயிலொன்று கட்டுங்கள். அங்கு அவரது தாஸராக, கம்பரது சிலையை நிர்மாணியுங்கள். இதை விட்டு, தனியாகக் கம்பரது சிலை யொன்றை நாட்டமுற்பட்டால் வெல்லிங்டன் முதலிய பிரமுகர்களின் ஞாபகச் சிலைகள் கவனிப்பாரற்றுக் கிடக்கும் கதியையே அதுவும் அடையும்." (சு.-மி.)

வேணும்! நன்றாய் வேணும். இந்தக் கம்பனுக்கு இனத்தைக் காட்டிக்கொடுத்த துரோகி என்பதை நயமாகச் சொல்லிக் காட்டிவிட்டார், தோழர் ஆச்சாரியார். பிரிட்டிஷ்

ஏகாதிபத்தியப் பூசாரியான வெல்லிங்டனின் சிலையை இந்தியர் எப்படி வெறுக்கிறார்களோ அப்படித்தான் இனத் துரோகி கம்பனின் சிலையையும் திராவிடர் வெறுப்பார்கள் என்பதை லி. ஆர். சூசனையாகக் காட்டிவிட்டார், பாருங்கள்! இல்லாவிட்டால் வெல்லிங்டனுக்கும், கம்பருக்கும் ஒப்பிட்டுக் கூறுவாரா, சொல்லுங்கள்!

ஆச்சாரியாரே, நல்லபோடு போட்டீர்கள்! உங்கள் சம்பந்தி ராமராஜ்யம் வேணுமென்கிறார்! நீங்கள் ராமனுக்குக் கோவில் கட்டவேணுமென்கிறீர்கள்! அதுமட்டுமா? அந்தக் கோவிலில் கம்பனை (திராவிடன் தானே!) ஒரு தாஸனாக வைக்கவேண்டுமென்றீர்களே அதுதான், மிருதங்கத்தில் அழகநம்பி வைக்கும் 'தீர்மானம்' மாதிரி!

உங்கள் ஜாதி ராமபிரானுக்கே கோவில் இல்லை, இந்த நாட்டிலே! சேதுப்பிள்ளை ஜாதிக் கம்பனுக்குச் சிலை வேண்டுமாம்! கோவில் வேண்டுமாம்! என்ன துணிச்சல் பாருங்கள், உங்கள் எதிரிலேயே சொல்ல!

பிராமணப் பிள்ளையே பாலுக்குச் சர்க்கரை போதவில்லை யென்று கதறு கதறென்று கதறுகிறது! அதைக் கவனிக்காமல் "சூத்திரப்" (சேதுப்) பிள்ளைக்குக் கூழ் வேண்டுமாமே! நல்லா யிருக்கே நியாயம்!

ஆச்சாரியார் சுவாமிகளே! உங்களுக்கு மட்டும் ஒரு இரகசியம் சொல்லுகிறேன், அதோ, அந்தப் பக்கத்துக் காதை என் பக்கம் திருப்புங்கள், கொஞ்சம்!

"இந்தக் கம்பனும் அவன் ஜாதியைச் சேர்ந்த எவனும் ராமனுக்கும் அவனைச் சேர்ந்தவர்களுக்கும் என்றும் தாஸனாகவேதான் இருக்கவேண்டும். இவர்கள் மநுதர்மத்தைப் படித்தாலல்லவா இதெல்லாம் விளங்கும்? உங்களுக்கு ஒரு காலத்தில் தாஸர்களாயிருந்த 'நாலாம் ஜாதிக்'காரர்களைக் கொஞ்சம் மிஞ்ச விட்ட தவறினால் அல்லவா, இன்று உங்களுக்கு இந்தக் கதி ஏற்பட்டது? இனிமேல் ஜாக்கிரதை

பாயிருங்கள்! எல்லாம் தெரிந்த உங்களுக்கு நான் எதுவும் சொல்லவேண்டியதில்லை. உங்கள் ஜாதியார் விஷயத்தில் உங்களுக்குள்ள புத்தி கூர்மையும், கழுகுப் பார்வையும் பழைய வசிஷ்டருக்குக்கூட இருந்திருக்க முடியாது. அவர்களெல்லாம் உங்கள் கால் தூசிக்குக்கூட இணையாக மாட்டார்கள். அந்த ராமச்சந்திரமூர்த்தி கிருபையால் நீங்கள் நீடூழி வாழவேண்டும்!"

கம்பர் மகாநாட்டாருக்கும் இதே சமயத்தில் ஒரு வார்த்தை. கம்பனைக் கரைகண்ட கவிஞர்களே! மகாநாடு கூட்டியதின் பலனைப் பெற்றுவிட்டீர்கள்! எவரோ கேள்வி கேட்டதெல்லாம இந்தச் சமயத்தில் நினைத்துத் தொல்லைப் படாதீர்கள். அப்படித்தான் கேட்டுக்கொண்டே யிருப்பார்கள். நீங்கள் "டன்கர்க்" செய்துகொண்டே காலத்தைத் தள்ளுங்கள்!

ராஜாஜி ராமனுக்குக் கோவில் கட்டச் சொல்லிவிட்டார். அவர்தானே உங்கள் கம்பனுக்கும் உங்கள் கலைக்கும், வேண்டியவர்! அவர் சொன்னபடியே செய்யுங்கள்! புறப்படுங்கள் பண வசூலுக்கு, உடனே! கட்டுங்கள் ராமன் கோவிலை! வையுங்கள், கம்பன் சிலையை, ராமன் சிலையின் காலடியில்—தாஸனாக, அதாவது, அடிமையாக! இதில் தவறொன்றுமில்லை! ஹனுமான் ராமன் பாதத்தைத் தாங்கி உட்கார்ந்திருக்கவில்லையா? அதே மாதிரிக் கம்பனையும் உட்கார வையுங்கள்! வேணும், கம்பனுக்கு! படுக்க வையுங்கள், இராமன் காலடியில்! இராமன் கால்களை ஹனுமான் மடியிலிருந்து எடுங்கள்! கம்பன் தலைமீது வையுங்கள்! கலையை வளருங்கள்!

"கம்பநாட்டாழ்வார் திருவடிகளே சரணம்," என்று சொல்லி நீங்கள் கம்பன் திருவடிகளைப்பற்றிக்கொள்ளுங்கள்! உங்களில் 63 பேர்களைத் தேர்ந்தெடுத்து, சுவர் நெடுக, சிலை உருவத்தில் நிற்கவையுங்கள்! ஓஹோ! நீங்கள் அடக்கமும் பெருந்தன்மையும் கொண்டவர்களாதலால் ஒருவேளை

வெட்கமாயிருக்கிறதோ? அப்படியானால் வேண்டாம்! ஆச்சாரியார் அறிவுரையைக் கேட்டு, உடனே அதன்படி நடப்பீர்களே யானால், உங்களுக்கும் நன்மை; அவருக்கும் பெருமை; வருங்காலம் எப்படி யிருக்கும் என்பதை யார் கண்டார்கள்?

ராமனுக்குப் பதிலாக ராஜாஜிக்குக் கோவில் கட்டப்படலாம். கம்பனை வைக்குமிடத்தில் உங்களில் யாரேனும் ஒருவர் இடம்பெறலாம், அதிர்ஷ்ட மிருந்தால்!

கலையின் பேரால் கம்பர் மாநாட்டைக் கூட்டிய கவிஞர் திலகங்களே! உங்கள் கலை யுணர்ச்சியே உணர்ச்சி! உங்கள் இலக்கிய இன்பமே, இன்பம்! உங்கள் தமிழ் அன்பே அன்பு!

★

## 24. பொதுக் கூட்டத்தில் ஏசுநாதர்!

சென்னைக் கடற்கரையில். மானிடக் கடல். 5 லக்ஷத்திற்குக் குறையாது. அத்தனை பேரும் தென் இந்திய கிருஸ்தவர்கள். அலை ஓசையைத் தவிர வேறு ஓசையே இல்லை. உயர்ந்த மேடை மீது ஒலி பெருக்கி. ஆயிரம் பேருக்கு ஒரு ஒலி பெருக்கிக் குழாய் வீதம் அத்தனை குழாய்கள். பால் போன்ற நிலவு. மேடைமீது ஏசுநாதர்! இக்காலத்து சீடர்களைப் போல கோட், நெக்டை, சூட், பூட்ஸ் கோலத்தில் அல்ல. படத்தில் பார்க்கிறோமே, அந்த சாதாரண உடையில். தலை மயிர் 'கிராப்' அல்ல, இன்றைய கிருஸ்துவர்களைப் போல்!

ஏசுநாதர் பேசுகிறார்:—

"நான் பிறந்து வளர்ந்து பேரும் புகழும் பெற்ற நாடுகளில் என்னைப் புறக்கணித்து விட்டார்கள், என்னைப்

பின் பற்றும் அத்தனை பேரும். என் உபதேசம் செவிடன் காதுக்குள், சென்ற சங்கீதமாகி விட்டது. யார் யாரைக் கொல்வது யார் எந்த நாட்டைக் கைப்பற்றுவது, எந்தக் கட்சி எந்தக் கட்சியைத் தாக்குவது, எந்த ஆயுதத்தால் எதிரியை விரைவில் கொல்லலாம், அணுக்குண்டால் அழித்தால் எத்தனை மணி நேரத்தில் அழிக்கலாம், எந்த நாட்டில் குடியேறினால் எளிதாகச் சுரண்டலாம், சுலபத்தில் பெருஞ் செல்வம் திரட்டும் குறுக்குப் பாதை எது,—ஆகிய சுய நலமான அக்கிரமங்களிலேயே நீந்திக் கொண்டிருக்கின்றனர். இனி மேல் அவர்கள் திருந்துவார்கள் என்ற நம்பிக்கை எனக்கில்லை. ஞாயிற்றுக்கிழமை மட்டுமே என் பெயரை ஞாபகப்படுத்திக் கொள்கின்றனர்.

ஆகையால் உலக உத்தமரான புத்தர் பிறந்த இந்த நாட்டில்தான் என்னுடைய அன்பு மதம் நன்றாகப் பரவும், என்று கருதியிருந்தேன். இதைக் கருதியே பாதிரிமார்களை இங்கனுப்பி இந்த 200 ஆண்டுகளாக என் மதத்தில் பலரைச் சேர்க்கச் சொன்னேன்!

பலன் என்ன என்பதைப் பார்க்கலாமென்ற ஆசையால் நேற்றுக் காலைதான் விமானத்தின் மூலம் வந்தேன். உங்களில் பலரைக் கண்டேன். தனித் தனியாகப் பேசினேன்! பல அதிசயங்களை உணர்ந்தேன்!

அடாடா! என்ன கொடுமை! எவ்வளவு அக்கிரமம்! உங்களுக்குள்ளே பல ஜாதிகளாமே! உடையார், நாடார், பிள்ளை, முதலியார் போன்ற ஜாதிப் பட்டங்கள் கூட உண்டாமே!

தஞ்சாவூர் மாவட்ட ரோமன் கத்தோலிக்க குருமார்களில் ஒருவர் 24-2-48 ஒரு கிராமத்தில் பேசுகையில் இந்த மாதிரிப் பேசினாராமே:—

"ஆதித் திராவிட கிருஸ்துவர்கள் திராவிட கழகத்தில் சேர்ந்து கருப்புச் சட்டை போட்டுக்கொண்டு எல்லா ஜாதி

களும் ஒன்று என்று கூறுகிறார்கள். இது கூடாது ஈரோட்டு ராமசாமி பேச்சைக் கேட்காதீர்கள். கோவிலில் மேல் ஜாதியும் கீழ் ஜாதியும் அவரவர் இடத்தில்தான் உட்காரவேண்டும்.''

பரம ஏழைகளாயிருந்தாலும் குறிப்பிட்ட ரூபாய் கொடுத்தால்தான் இறப்புக்கும் பிறப்புக்கும் கோயிலில் மணி அடிக்கிறார்களாம்! உபதேசம் தெரியாவிட்டால் சாமியார் 10—15 ரூபாய் கேட்கிறாராம், திருமணத்தின்போது!

அதுமட்டுமா! கத்தோலிக் கிருஸ்துவர்களில் பலர் நெற்றியில் பொட்டு வைத்துக் கொள்கிறார்களாம். ராகு காலம், சகுனம், நல்ல நாள், எல்லாம் பார்க்கிறார்களாம்! ஆபாசம்! ஆபாசம்!!

அந்தந்த ஜாதி கிருஸ்துவர் அந்தந்த ஜாதியில் தான் திருமணம் செய்து கொள்வார்களாம்! நாடார் கிருஸ்துவர் ஹிந்து நாடார் வீட்டில் திருமணம் செய்வாரே ஒழிய கிருஸ்துவ பிள்ளை அல்லது உடையார் வீட்டில் திருமணம் செய்யவே மாட்டாராமே! அதாவது என்னைவி , என் மதத்தைவிட, ஜாதிதான் அவர்களுக்கு முக்கியமாம்!

இதற்குத்தானா நீங்கள் என் மதத்தைப் பின் பற்றினீர்கள்?

"ஏசின் ஆசை மதம்புகப் பேதம் அகன்றதோ? தோழி? அவர்க்கு அங்குள்ள மூதேவி இங்கும் முளைத்தனள் தோழா!''

என்று புரட்சிக் கவிஞர் உங்களைக் கண்டு எள்ளி நகையாடச் செய்து விட்டீர்கள்! ஆகையால் உங்களைக் காண நான் வெட்கப்படுகிறேன். என் அன்பு நெறியைப் பாழாக்கி விட்டீர்கள், நீங்கள்! எனவே, நீங்கள் உங்கள் இஷ்டம்போல் எதை வேண்டுமானாலும் செய்யுங்கள்!

ஜாதிச் சேற்றில் மூழ்குங்கள்! மூட நம்பிக்கை குப்பையில் புரளுங்கள்! வேற்றுமையை வளர்த்துப் பாழாகுங்கள்!

ஆனால் ஒன்று. என் பெயரை மட்டும் கூறாதீர்கள்! என்னை இப்படி அவமானப் படுத்தாதீர்கள்! என் சமரச நெறியை இப்படிச் சித்திரவதை செய்யாதீர்கள். உங்களுக்கு கோடி புண்ணியமுண்டு!"

இப்படிப் பேசினார், ஏசுநாதர். கட்டித் தழுவ ஆசைகொண்டு கையை நீட்டியபடியே எழுந்தேன்! கனவு என்பதைக் கண்டு ஏமாந்தேன்!

இது மட்டும் உண்மையாகவே நிகழுமானால்? நினைத்தாலே உடல் சிலிர்க்கிறது!

★

---

**" பிராமணப் புரோகிதர்களும் பூசாரிகளும் பிராமணரல்லாதார்களுடைய பொருள்களைக் கவருவதற்காகத் தோன்று தோட்டுச் செய்துவரும் சூழ்ச்சிகளையும், மோசங்களையும், கொலைகளையும் பிற பல தீய சொல்களையும் எடுத்துக் கூறவேண்டும். 'இந்து சமயம்' என்பதன் பொய்களையும், புரட்டுக்களையும், ஆபாசங்களையும், அச்சமயப் பெயரால் செய்யப்படும் சடங்குகளின் வாயிலாகப் பிராமணரல்லாதார்களின் பொருள்கள் கொள்ளையிடப் படுவதையும், பிராமணரல்லாதார்கள் தாழ்த்தப்படுவதையும், அக்கொள்ளைகளினின்றும், தாழ்வினின்றும் பிராமணரல்லாதார்கள் தப்புவதற்குள்ள ஆவசியகத்தையும் வழிகளையும் விளக்கிக் கூறவேண்டும்."**

**—வ. உ. சிதம்பரம் பிள்ளை**

"ஞானசூரியன்" முன்னுரை—7-10-1927)